
# அபிவிருத்திப் பொருளியல்

இதழ் - 4

வடக்கு கிழக்கு பிரதேச அபிவிருத்தி



# Development Economics

*Issue 4*

Young Economist Association
Department of Economics, University of Jaffna, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் பொருளியல்

இதழ் – 04

# 2003

## கல்வியாண்டு 2002–2003

*இதழாசிரியர்*

R.சிவநாதன்

*துணை இதழாசிரியர்*

T. குலதீபன்
T. ஞானானந்தன்
K.ஜெயந்தினி

இளம் பொருளியலாளர் மன்றம்
பொருளியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DEVELOPMENT ECONOMICS


New Volume : 2003

Published on : 2003

Editor : Mr. R. Sivanathan

Printers : Hari Kanan Printers,
424, K. K. S Road, Jaffna.

Cover Disign : Harikanan Printers

Cover Printed : Pooja Print,
No:63/5, Maliban Street,
Colombo-11.



Address : Young Economists Association
Department of Economics,
University of Jaffna
Thirunelvely,
Jaffna.
Sri Lanka.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YOUNG ECONOMISTS ASSOCIATION
# UNIVERSITY OF JAFFNA
# OFFICE BEARERS 2002/2003

| | | |
|---|---|---|
| Patron | : | Prof.V.P.Sivanathan<br>(Head, Department of Economics) |
| Senior Treasurer | : | Mrs.V.Ravishankar<br>(Lecturer, Department of Economics) |
| President | : | Mr.S.Rajkumar |
| Vice President | : | Miss.S.Ranjana |
| Secretary | : | Mr.V.Piratheepan |
| Asst. Secretary | : | Mr.R.Kugarajah |
| Treasurer | : | Mr.F.Jenitus |
| Editor | : | Mr.R.Sivanathan |
| Sub Editors | : | Mr.T.Gnananathan<br>Mr.K.Kulatheepan<br>Mr.K.Jeyanthiny |
| Committee Members | : | Mr.K.Vijayakumar<br>Mr.S.Suthakaran<br>Mr.T.Rajanikanth<br>Mr.Kularuban |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திப் பொருளியல் இதழ்
வருடந்தோறும் சிறப்புற வெளிவர
ஆலோசனை வழங்கும்
மதிப்பிற்குரிய ஆலோசகர் குழு

**1) Prof.V.P.Sivanathan,**
**(Head, Dept of Economics)**

**2)Dr.V.Nithiyananthan**

**3)Prof. N.Balagrishnan**

**5)Mr.T.Bhavan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணைவேந்தரின்

# வாழ்த்துரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல்துறையின் இளம் பொருளியல் மன்றத்தினால் வருடந்தோறும் வெளிக்கொணரப்படும் அபிவிருத்திப் பொருளியல் எனும் சஞ்சிகையின் நான்காவது இதழ் வெளிவரும் இவ்வேளையில், இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்கு வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்று நாட்டில் நிலவும் சமாதான சூழ்நிலையில் வடக்கு கிழக்கு பிரதேச அபிவிருத்தி சம்பந்தமான ஆக்கங்களைத் தாங்கி இச்சஞ்சிகை வெளிவருவது குறிப்பிடத்தக்கதாகும். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாக அமையும் பொருளாதாரத் துறையை மேம்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய பொருளாதாரம் சார் அபிவிருத்திப் பணிகளைக் கருத்திற்கொண்டு சஞ்சிகையை வெளியிடுவது காலத்தின் தேவையாக அமைவதோடு பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

பொருளியல் சார்ந்த அறிவு வளர்ந்து வரும் நாட்டிற்கு மிகமிக அவசியமானதொன்றாகும். மாணவர்கள் தங்களது முயற்சியினால் இவ்வாறான சஞ்சிகைகளை வெளிக்கொணர்வது மாணவர்களின் வினைத்திறனை வெளிக்காட்டுவதோடு மாணவ சமுதாயத்தின் அறிவிற்கும் ஆற்றலுக்கும் பெரிதும் உந்துசக்தியாக அமையுமென நம்புகின்றேன்.

இந்நூல் வெளிவர உழைத்த அனைவருக்கும் எனது நல்லாசிகளைத் தெரிவிப்பதோடு மன்றத்தின் முயற்சிகள் மென்மேலும் வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் எஸ்.மோகனதாஸ்,**
*துணைவேந்தர்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

கலைப்பீடாதிபதியின்

# ஆசிச் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியற்துறையில் இயங்கும் இளம் பொருளியலாளர் மன்றத்தின் நான்காவது வெளியீடாக "வடக்கு - கிழக்கு பிரதேச அபிவிருத்தி"எனும் கருப்பொருளில் "அபிவிருத்திப் பொருளியல் என்றும் சஞ்சிகை வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு பிரதேசம் பல்வேறு நிலைகளில் கட்டியெழுப்பப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். அப்பணியை செவ்வனே நிறைவேற்ற இப்பிரதேசத்தின் இழப்பீடுகள் பற்றியும் அவற்றை ஈடுசெய்யும் வகையில் ஏற்ற அபிவிருத்தி பற்றியும் ஆழமாகச் சிந்தித்து தகுந்த திட்டத்தினை வகுத்தலும் மிக்க அவசியமாகும். அத்தகைய பாரிய பணிக்கு உதவும் வகையில் பொருளியற்துறை சார்ந்த மாணவர்கள் பொருத்தமான ஒரு கருப்பொருளில் இவ்விதழை வெளிக்கொணர்வது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இவ்விதழ் வடக்கு பிரதேச அபிவிருத்தியில் ஈடுபட்டு செயற்படும் அனைத்து அமைப்புக்களுக்கும் மற்றும் மாணவ சமுதாயத்திற்கும் இத்துறையில் ஈடுபாடுகொண்ட ஆர்வலர்களுக்கும் சிறந்த வரப்பிரசாதமாக அமையுமென நம்புகின்றேன். இவ்விதழ் கருப்பொருளிற்கேற்ப துறைசார் வல்லுனர்களினதும் மாணவர்களினதும் ஆக்கங்களைக் கொண்டதாக மிளிரும் என எதிர்பார்க்கின்றேன்.

அபிவிருத்திப் பொருளியல் சஞ்சிகையின் வெளியீட்டில் ஈடுபட்ட துறைசார் வல்லுனர்கள், மன்றத்தினர், இதழாசிரியர் உள்ளிட்ட அனைவருக்கும் என் மனமுவந்த நல்லாசிகளைத் தெரிவிப்பதோடு இப்பணி மன்றத்தினால் சிறப்பாக எதிர்காலத்திலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நன்றி

**பேராசியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ணஐயர்,**
*கலைப்பீடாதிபதி,*
*யாழ். பல்கலைக்கழகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப்பீடாதிபதியின்

# ஆசிச் செய்தி

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

கலைப்பீடாதிபதி,
யாழ் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைத் தலைவரின்
# பாராட்டுச் செய்தி

காலத்தின் தேவை கருதியும் பிரதேச அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டும் இவ்வருட அபிவிருத்திப் பொருளியல் இதழ் வட கிழக்கின் அபிவிருத்தி தொடர்பான கட்டுரைகளை வெளியிடுவது பாராட்டப்பட வேண்டியதொன்று.

பொருளியற்துறை மாணவர்கள், இயற்கை வளத்தை மனித மூலதனம் கொண்டு உச்சமாகப் பயன்படுத்தி, பௌதீக உற்பத்திகளைப் பெருக்கி, அவை வழிவந்த சேவைகளை விரிவாக்கி, பொருளாதாரத்தை வளர்த்து, அபிவிருத்தியடைய வேண்டுமென்ற அவாவுடன் செயற்படுவதைப் பார்க்கும் போது மகிழ்ச்சியாக உள்ளது. அவர்கள் வினைத்திறனு டனும் சமூக ரீதியாகவும் பொருளாதார செயற்பாடுகள் அமைய வேண்டும் என்பதற்காக பிரதேச அபிவிருத்தியை முன்னிறுத்தி ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடுவதனூடாக தங்கள் அறிவையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்கள். விசேடமாக அபிவிருத்தி நோக்கிய கட்டுரைகளையே இம்முறை வெளியிடவேண்டும் என்று திட்டமிட்டுச் செயற்பட்டது, அவர்களது திறமையை வெளிப்படுத்துவதாகவுள்ளது. அவர்கள் விருப்பம் நிறைவேற என்றும் உறுதுணையாய் இருப்பதோடு அதற்கான ஆசியை பொருளியற்துறை சார்பாக வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

நன்றி

**பேராசிரியர் வீ.பி.சிவநாதன்,**
*தலைவர்,*
*பொருளியற்துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பொருளாளரின்

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியல்துறையில் கல்வி பயிலும் மாணவர்களின் அரும்பெரும் முயற்சியினால் உருவாகிய இளம் பொருளியலாளர் மன்றத்தின் வெளியீடான "அபிவிருத்திப் பொருளியல்" என்ற சஞ்சிகையின் நான்காவது இதழ் வெளிவருவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இம்மன்றம் வெளிக்கொணரும் இச்சஞ்சிகைகளின் வழி மாணவர்கள் தமது சிந்தனைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கும் தமது ஆய்வுத்திறனையும் தமது துறை சார்ந்த அறிவையும் வளர்த்துக் கொள்வதற்கும் வாய்ப்பேற்படுகின்றது.

காலத்தின் தேவை கருதி சமகாலப் பொருளியல் விவகாரங்களைச் சுமந்து வரும் இச்சஞ்சிகையானது இம்முறை "வடக்கு கிழக்கு பிரதேச அபிவிருத்தி" என்ற கருப்பொருளில் ஆக்கங்களைத் தாங்கி வருகின்றது. அண்மைக் காலத்தில் காணப்பட்ட அசாதாரண சூழ்நிலைகளினால் மிகவும் பாதிப்படைந்துள்ள வடக்கு கிழக்கு பிரதேசத்தினைக் கட்டியெழுப்ப வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். இத்தேவையை உணர்ந்த இளம் பொருளியலாளர் மன்றமானது வடக்குக்கிழக்கு பிரதேச அபிவிருத்தி பற்றிய ஆக்கங்களை வெளிக்கொணர முன்வந்தமை உண்மையில் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

நூல்வெளியீடு மட்டுமல்லாது நூல் வெளியீட்டுக்கான நிதி சேகரித்தல், கருத்தரங்குகளை நடாத்துதல் போன்ற பல்வேறு நிகழ்வுகளையும் மேற்கொண்டமை வரவேற்கப்பட வேண்டியதாகும். இம்மன்றம் சிறப்பாக செயற்படுவதற்கு பொருளியல்துறையில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களும் தமது ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதோடு இம்மன்றத்தின் செயற்பாடு இன்றுபோல் என்றும் சிறப்புற அமைய வேண்டும் என்றும் அதன் மூலம் மாணவர் சமூகம் பயன்பெற வேண்டும் என வாழ்த்தி இச்சஞ்சிகை வெளியிடுவதற்கு உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**திருமதி. விஜிதா ரவீசங்கர்**
*விரிவுரையாளர்,*
*பொருளியற்துறை,*
*யாழ் பல்கலைக்கழகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் உள்ளத்திலிருந்து....

யாழ் பல்கலைக்கழக இளம் பொருளியலாளர் மன்றத்தினால் வெளியிடப்படும் "அபிவிருத்திப் பொருளியல் இதழ் நான்கில் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தற்கால மாற்றங்களுக்கேற்ப இந்நூலானது வடக்கு கிழக்கு பிரதேச அபிவிருத்தி சம்பந்தமான ஆக்கங்களைத்தாங்கி வருவது சிறப்பான அம்சமாகும்.

இளம் பொருளியலாளர் மன்றத்தின் திறமையான செயற் பாட்டின் ஊடாக தனது இலக்குகளை அடைந்து கொள்வதற்கு கருத்தரங்குகளையும், பொது நிகழ்ச்சிகளையும், இந்நூல் வெளியீட்டை யும் செயற்படுத்துகின்றது.

இம்மன்றம் இவ்வருடம் தனது சேவையை சிறப்பாக செயலாற்றி யதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இம்மன்றத்தின் செயற்பாடுகள் சிறப்புற அமைவதற்கு உறுதுணையாக நின்று பல வழிகளிலும் எம்மை வழிநடத்தி எமது முயற்சி வெற்றியளிக்க உதவியவர்களை நன்றியுடன் நினைவு கூருவது எனது கடமையாகும். அவ்வகையில் எமது மன்றக் காப்பாளரும், துறைத்தலைவருமாகிய திரு.V.P.சிவநாதன் அவர்களுக்கும், பெரும்பொருளாளர் திருமதி V.ரவிசங்கர் அவர்களுக்கும், விரிவுரையாளர் களுக்கும், மன்ற நிர்வாக உறுப்பினர்களுக்கும் மற்றும் மன்றச் செயற்பாடுகளில் கைகொடுத்து உதவிய எமது சக நண்பர்களுக்கும், மேலும் இந்நூலை வெளியிடுவதற்கு உறுதுணையாக நின்ற இதழாசிரியர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எதிர் காலத்தில் மன்றத்தை பொறுப்பேற்கும் செயற்குழு சிறப்பாக செயற்பட்டு அபிவிருத்திப்பொருளியல் இதழை இனிவரும் காலங்களிலும் சிறப்புற வெளிக்கொணர வேண்டும் என வாழ்த்து கின்றேன்.

நன்றி

**செ.ராஜ்குமார்,**
*தலைவர்,*
*இளம் பொருளியலாளர் மன்றம்*
*பொருளியற்துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுடன் உளம்நிறைந்து...

யாழ் பல்கலைக்கழக [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] நன்றி [illegible]

[illegible]

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் இதயத்திலிருந்து....

இளம் பொருளியலாளர் மன்றத்தினரால் வெளியிடப்படும் "அபிவிருத்திப்பொருளியல்" சஞ்சிகையின் புதிய தொகுதி இதழ்-04ன் நிழலில் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்நூலானது அண்மைக்காலமாக எல்லோராலும் பேசப்படுகின்ற பிராந்திய அபிவிருத்தி பற்றிய கருத்துக்களையும், விளக்கங்களையும் எடுத்து வருகின்றது. பொருளியல் துறையின் வளர்ச்சி காரணமாகப் பெறப்படும் புதிய தகவல் களைத் தமிழ் மொழியில் சேர்ப்பிப்பதில் இவ்விதழ் பெரும் பங்காற்றியுள்ளது என்பதில் எமது மன்றம் பெருமையடைகின்றது.

அந்த வகையில் அபிவிருத்திப் பொருளியல் இதழ் - 04க்கு வாழ்த்துச் செய்தி வழங்கிய எமது துணைவேந்தர் பேராசிரியர் திரு.மோகனதாஸ் அவர்களுக்கும், கலைப்பீடாதிபதி பேராசிரியர் திரு.ப.கோபாலகிருஸ்ண ஐயர் அவர்களுக்கும் எமது மன்ற செயற்பாட்டிற்கு ஆலோசனை வழங்கி வழி நடத்திய எமது மன்றக் காப்பாளரும் பொருளியற்துறை தலைவருமான மதிப்பிற்குரிய திரு.வே.ப.சிவநாதன் அவர்களுக்கும், எமது மன்றத்தின் பெரும் பொருளாளரும் விரிவுரையாளரும் ஆகிய திருமதி விஜிதா ரவிசங்கர் அவர்களிற்கும் மற்றும் பொருளியல் துறை சார்ந்த விரிவுரையாளர்கள் அனைவருக்கும் மன்ற செயற்பாட்டில் என்னோடு தோளோடு தோள் நின்று உழைத்த மாணவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

இறுதியாக இச்சஞ்சிகை வெளியிடுவதற்கு நிதி சேகரிக்கும் முகமாக அதிஸ்டலாபச் சீட்டுக்களை விற்பனை செய்து பேருதவி புரிந்த மாணவர் களுக்கும் இச்சஞ்சிகைக்கான அறிவுச்சுடரை ஏற்றிவைத்த விரிவுரையாளர் களுக்கும், ஆக்கங்களைப் படைத்த மாணவர்களுக்கும் இவ்விதழுக்கு சிறப்பாக அட்டைப்படத்தை வடிவமைத்த பதிப்பகத்தாருக்கும், இவ்விதழை சிறப்பாக வும், விரைவாகவும் வெளியீடு செய்ய உதவிய "கரிகணன்" அச்சகத்தாருக்கும், எமது மன்ற புகைப்படங்களை எடுத்து உதவிய குகன் ஸ்ரூடியோ நிறுவனத் தாருக்கும் எம்மால் நடத்தப்பட்ட கருத்தரங்குகளுக்கு வருகை தந்து கருத்துரை களை வழங்கிய பேராசான்களுக்கும் மற்றும் ஏனையோருக்கும் என் இதயத்தில் இருத்தி நன்றி கூறுவதோடு தொடர்ந்து வரப்போகின்ற செயற்குழு உறுப் பினர்கள் எமது மன்றத்தை சிறப்பாக வழிநடத்துவார்கள் என்ற நம்பிக்கை யோடு பசுமையான பல்கலைக்கழக வாழ்வில் இருந்து வளர்க இளம் பொருளிய லாளர் மன்றம் என வாழ்த்துகின்றேன்.

**திரு. எஸ். வீ. பிரதீபன்,**
*செயலாளர்,*
*இளம் பொருளியலாளர் மன்றம்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் பொருளாளரின் உள்ளத்திலிருந்து....

யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் ஆளுமைவிருத்தி, சுயசிந்தனை, சமூகச் செயற்பாடு என்பவற்றை வளர்க்கும் மன்றங்களில் இளம் பொருளியலாளர் மன்றமானது தனக்கென ஒரு சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது. அது தனது பல்துறை சார்ந்த செயற்பாட்டின் மூலம் மாணவர்களின் முன்னேற்றத்தில் பெரும் பங்களிப்பினைச் செய்து வருகின்றது.

இளம் பொருளியலாளர் மன்றமானது தனது பன்முகச் செயற்பாடுகளில் ஒன்றாகவே அபிவிருத்திப் பொருளியல் எனும் இதழினை வெளியிடுகின்றது. வளர்ந்து வரும் நாடுகளில் இன்று முக்கியமாகப் பேசப்படுகின்ற பிரதேச அபிவிருத்தி எனும் கருப்பொருளைக் கொண்டதாக இம்முறை இளம் பொருளியலாளர் மன்றத்தின் வெளியீடான அபிவிருத்திப் பொருளியல் இதழ் - 04 அமைகின்றது.

இவ்விதழ் வெளிவர எம்மை வழிநடத்திய எமது மன்றத்தின் காப்பாளரும் எமது துறைத்தலைவருமான திரு.V.P.சிவநாதன் அவர்கட்கும், எமக்கு ஊக்கமளித்து உதவிய எமது மன்றத்தின் பெரும் பொருளாளரும், விரிவுரையாளருமான திருமதி.விஜிதா ரவிசங்கர் அவர்கட்கும், மற்றும் பொருளியற்துறை விரிவுரையாளர் அனைவருக்கும் எனது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துநிற்கின்றேன்.

இம்மலரின் வெளியீட்டிற்குத் தேவையான நிதியினை அதிஷ்டலாபச் சீட்டின் மூலம் பெற எம்மோடு தோளோடு தோள் நின்று செயற்பட்ட மாணவ நண்பர்கள், வர்த்தக நிறுவனங்கள், மற்றும் பல்வேறு விதங்களிலும் உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எனது நன்றியைக்கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இளம் பொருளியலாளர் மன்றமானது மாறிவரும் உலகிற்கேற்ப தனது ஆக்கத்தினையும், செயற்பாடுகளையும் அமைத்து எதிர்காலத்தில் அனைவருக்கும் எடுத்துக்காட்டான மன்றமாகத் திகழ வாழ்த்துகின்றேன்.

நன்றி

**பிரான்சிஸ் ஜெனிற்ரஸ்,**
*இளம்பொருளாளர்.*
*யாழ். பல்கலைக்கழகம்*
*திருநெல்வேலி*
*யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் இதயங்களிலிருந்து....

யாழ். பல்கலைக்கழக இளம் பொருளியலாளர் மன்றத்தினராகிய நாம் "அபிவிருத்திப் பொருளியல்" என்னும் சஞ்சிகையை ஆண்டு தோறும் வெளியிட்டு வருவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். இம் மன்றத்தினால் 2003ம் ஆண்டு விசேட வெளியீடாக வடக்கு கிழக்கு பிராந்திய அபிவிருத்தி என்னும் சிறப்பான ஆக்கங்களைத் தாங்கி இதழ் நான்கு வெளிவருவதையிட்டு நாம் பெரும் உவகை அடைகின்றோம். இன்று வடக்கு கிழக்கு பிரதேசங்களில் காணப்படும் வளங்களை எவ்வாறு பயன்படுத்தப்பட்டு அபிவிருத்தியடைய வேண்டும் என்று பேராசிரியர்கள், பொருளாதார வல்லுனர்கள் சிந்தித்துக் கொண்டு இருக்கும் வேளையில் இளம் பொருளியலாளர் மன்றம் இவ் வெளியீட்டை மேற்கொள்கின்றது.

எமது மன்றத்தின் அடுத்த வெளியீடானது "வளங்களை இனம் காணுதலும் அபிவிருத்தி செய்தலும்" என்ற கருப் பொருளை மையமாகக் கொண்டு வெளியிடுவதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

வடக்கு கிழக்கு பிரதேச அபிவிருத்தி என்னும் சஞ்சிகையை வெளியிடுவதற்கு நாம் கேட்டபோது ஆக்கங்களைத் தந்துதவிய துறைத் தலைவர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். எமக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கிய எமது காப்பாளரும் துறைத் தலைவருமாகிய மதிப்பிற்குரிய பேராசிரியர் V.P. சிவநாதன் அவர்களுக்கும் எமது பெரும் பொருளாளர் அவர்களுக்கும், எமக்கு வேண்டிய பொழுது எதுவித சிரமங்களும் இன்றி ஆலோசனைகளை வழங்கி உதவிய விரிவுரையாளர் களுக்கும் என்றும் நன்றி கூறக் கடமைப்பட் டுள்ளோம்.

மேலும் இந்த இதழினை வெளியிடுவதற்கு பல சிரமங்களுக்கு மத்தியிலும் விரைவாக அச்சிட்டு, அட்டைப்படத்தினை வடிவமைத்து தந்துதவிய கரிகணன் அச்சகத்தினருக்கும், ஊழியர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இவ்விதழிற்கான அட்டையினை அச்சிட்டுத் தந்த Pooja அச்சகத்தினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

*யாழ். பல்கலைக்கழகம்*
*திருநெல்வேலி*
*யாழ்ப்பாணம்*

**இதழாசிரியர்**
**இ.சிவநாதன்**
**உதவி இதழாசிரியர்கள்**
**T.ஞானானந்தன்**
**T.குலதீபன்**
**K.ஜெயந்தினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதயங்களிலிருந்து...

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

நன்றி

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலாளரின் ஏட்டிலிருந்து

### 2003/2004 கல்வியாண்டிற்கான மன்றச் செயற்பாடுகள் வரிசையில்...

- **நிகழ்வு 01**

கருத்தரங்கு தொடர் - 1 23-04-2004
விடயம் - ஈராக் அமெரிக்க யுத்தமும் அதன் பொருளாதார பரிமாணமும்
கருத்துரை வழங்கியவர் - பேராசிரியர் வி. நித்தியானந்தன்

- **நிகழ்வு - 02**

கருத்தரங்கு தொடர் - 2 28-05-2004
விடயம் - இலங்கையில் இலவசக் கல்வி என்பது உண்மையில் இலவசமா?
கருத்துரை வழங்கியவர் - பஞ்சலிங்கம்
(முன்னாள் றோட்டரிக்கழகத் தலைவர்)

- **நிகழ்வு - 03**

கருத்தரங்கு தொடர் - 3
விடயம்:- இலங்கையின் வீட்டுத்துறை நுகர்வோர் கேள்வி
கருத்துரை வழங்கியவர் - பேராசிரியர் E.A. செல்வநாதன்
(புள்ளிவிபரவியல்துறை)
அவுஸ்திரேலியா

- **நிகழ்வு - 04**

அபிவிருத்திப் பொருளியல் இதழ் - 4 இற்கான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு நடைபெற்றமை

- **நிகழ்வு - 05**

கருத்தரங்கு தொடர் - 4
விடயம் - இலங்கை இனப்பிரச்சனைக்கான சமகால தீர்வு முயற்சியில் இந்தியாவின் நிலைப்பாடு
கருத்துரை வழங்கியவர் - கே.ரி.கணேசலிங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சமூக அரசறிவியல்துறை.

- **நிகழ்வு - 06**

கருத்தரங்கு தொடர் - 05
விடயம் - மக்களும் ஆயுட்காப்புறுதியும்
கருத்துரை வழங்கியவர் - S.கோபிநாத் ,
நிறைவேற்று அதிகாரி
இலங்கை ஆயுட்காப்புறுதி கூட்டுத்தாபனம்.

- **நிகழ்வு - 07**

கருத்தரங்கு தொடர் - 06 - 05/03/2004
விடயம் - திறந்த பொருளாதாரக் கொள்கையும் இலங்கை அரசியலில் ஏற்படுத்திய தாக்கமும்

கருத்துரை வழங்கியவர் - கே.ரி.கணேசலிங்கம் ,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சமூக அரசறிவியல்துறை.


- **நிகழ்வு - 08** அபிவிருத்திப் பொருளியல் இதழ் 4 உங்கள் கைகளில் .......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE COMMITTEE OF YOUNG ECONOMIST ASSOCIATION (2002/2003)
DEPARTMENT OF ECONOMICS - UNIVERSITY OF JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The committee of Young Economist Association 2002/2003

## Department of Economics University of Jaffna

### Sitting L - R

**Mr. T. Bhavan** *(Asst. Lecturer),*
**Prof.V.P. Sivanathan** *(Head, Dept. of Economics)*
**Mr.V.Piratheepan** *(Secretary)*
**Mr.S.Mohanadas** *(Vice - chancellor)*
**Mr.N.Perinpanathan** *(Senior Lecturer)*

**Mr. S. Uthayakumar** *(Lecturer),*
**Mrs.V. Ravishankar** *(Senior Treasuer)*
**Mr.S.Rajkumar** *(President)*
**Mr.P.Gobalakrishnaiyar** *(Dean - Arts)*
**Dr.V.Nithiyananthan** *(Visiting Scholar)*

**Mr.S.Santhirasegaram** *(Lecturer)*

### Standing L - R

**Mr.F. Jenitus** *(Treasurer)*
**Mr.K. Vijayakumar** *(Co -Member)*
**Mr.S.Suthakaran** *(Co - Member)*
**Mr. T. Rajanikanth** *(Co - Member)*

**Mr.R.Kugarajah** *(Asst, Secretary)*
**Mr.T. Kulatheepan** *(Sub - Editor)*
**Mr.T.Gnananthan** *(Sub - Editor)*
**Mr.R. Sivanathan** *(Editor)*

**Miss.S.Ranjana** *(Vice - president)*

### Absente

**Miss.K.Jeyanthiny** *(Sub - Editor)*

**Mr. Kularuban** *(Co - Member)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FINAL YEAR STUDENTS, DEPARTMENT OF ECONOMICS
## BATCH 98 / 99 (2003)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தியில்......


- துணைவேந்தரின் வாழ்த்துச்செய்தி....
- கலைபீடாதிபதியின் வாழ்த்துரை...
- துறைத்தலைவரின் பாராட்டுச்செய்தி...
- பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி...
- தலைவரின் உள்ளத்திலிருந்து....
- செயலாளரின் இதயத்திலிருந்து...
- இளம் பொருளாளரின் உள்ளத்திலிருந்து...
- இதழாசிரியர்களின்இதயங்களிலிருந்து.....
- செயலாளரின் ஏட்டிலிருந்து....
- வடக்குக்கிழக்கு மக்கள் இடம் பெயர்வும் மீள் நிர்மாணமும் மக்களின் வாழ்நிலையும் - ஒரு நோக்கு 01
- பிரதேச அபிவிருத்தியில் பேண்தரு தன்மை யாழ் குடாநாட்டினுடைய நிலக்கீழ் நீர்மாசு தொடர்பான ஒரு நோக்கு 13
- வடக்கு கிழக்கு பிரதேச அபிவிருத்தியில் விவசாயத்துறையின் பங்கு 19
- வடக்கு கிழக்கு மாகாண மீன் உற்பத்தியும், சந்தைப்படுத்தலும் 23
- வடக்கு கிழக்கு பிரதேச அபிவிருத்தியில் பனை வளத்தின் பங்கு 45
- பிராந்திய அபிவிருத்தியும், சூழல் பிரச்சினைகளும் 52
- வடக்கு கிழக்கு பிரதேச அபிவிருத்தியில் சிறுவணிக கைத்தொழிலின் பங்கு 65
- வடக்கு கிழக்கு பிரதேச அபிவிருத்தியில் கைத்தொழில் நகரமயமாக்கம் 75
- வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான வறுமை தணிப்பு திட்டம் 86
- தென்மராட்சிப் பிரதேசமும் அதன்அபிவிருத்தியும் 92
- பிராந்திய அபிவிருத்தியில் நிறுவனத்தின் பங்கு 103
- வடக்கு கிழக்கு வாழ் மூளைசாலிகள் வெளியேற்றம் - ஒருகண்ணோட்டம் 110


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு -கிழக்கு மக்கள் இடப்பெயர்வும் மீள் நிர்மாணமும் மக்களின் வாழ்நிலையும் -பற்றிய நோக்கு

# A view of people displace and Reconstruction and Livelihood in North East

*Prof.V.P.Sivanathan,*
*Head,*
*Department of Economic,*
*University.*

கடந்த இரண்டு தசாப்தங்களாக வடகிழக்கில் ஏற்பட்டு வரும் குடியுரிமைப் போர் மக்கள் வாழ்வின் அடித்தளத்தைத் தகர்த்துள்ளது என்பதை இலங்கை மக்கள் யாவரும் உணர்ந்துள்ளனர். இப்பிரதேசத்தில் வாழும் மக்களில் தமிழ் பேசும் மக்கள் தங்கள் பாரம்பரிய தாயகம் இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியென்ற உணர்வோடும் அப்பகுதியில் வேறு எவரதும் ஆதிக்கத்திற்கும், அழுத்தத்திற்கும் உட்படாமல் சுதந்திரமாக தமது வாழ்விட வழங்களை பயன் படுத்தும் உரிமையைத் தாங்கள் பெற்றுவிட வேண்டுமென்றும் அதன் பின்னரே தாம் நெருக்கு வாரமில்லாத நல்ல வாழ்வை பெற்றுவிட முடியும் என்ற கருத்தியலை மையமாகக் கொண்டு வாழ முற்பட்ட வேளையில் இலங்கை அரசின் எதிர் நடவடிக்கைகள், இராணுவப் பல பிரயோகங்கள் பல சேதங்களை ஏற்படுத்தியது. மனித உரிமைக்கான அடித்தளங்களை முதன்மைப்படுத்தி வடக்கு கிழக்கு பகுதி மக்களின் இடப்பெயர்வும் அதன் பின்னரான மீள்குடியேற்றம், புனர் நிர்மாணம், புனர்வாழ்வு போன்ற செயற்பாடுகள் இன்றுவரை தொடர்ந்த வணணம் உள்ளது. இவர்கள் பிரச்சினையை "தமிழ் பேசும் மக்கள்" என்ற விசேட குறியீடுகளை தவிர்த்து அவர்கள் மனிதர்கள் அவர்களில் மூதாதையர்களின் வாழ்விடங்களின் வாழ்கின்றனர். என்ற உண்மையை ஏற்றுக் கொண்டு பகுத்தறிவுடன் நோக்குதல் வேண்டும்.

ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் இலங்கை மக்களுக்கு முன்னர் இலங்கை மக்களுக்கு பிரதேச ரீதியான ஆட்சியுரிமையும் நிர்வாக அலகுகளும் இருந்தன என்ற வரலாற்று ஆதாரத்தை அடிப்படையாகக் கொள்ளுதல் வேண்டும். ஐரோப்பியர் இலங்கை முழுவதையும் ஒரு நிர்வாக அலகிற்குள்ளும் ஆட்சிப்பரப்பிற்குள்ளும் கொணடு வந்தனர். இதனால் சிறிய தொகையினர் தமது பாரம்பரியப் பிரதேசத்திலல்லாமல் நிர்வாக மையங்களுக்கு குடிபெயர்ந்தனர். 1948ல் பிரித்தானியர் இலங்கை மக்களிடையே ஆட்சியுரிமையைக் கொடுத்துச் சென்ற போது அவ்வாட்சியுரிமை பெரும்பாணமைச் சிங்களவரிடம் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இது ஒரு சிங்கள பௌத்த நாடு என்ற நோக்கில் ஆட்சி அதிகாரத்தை பிரயோகிக்க முற்பட்ட வேளையில் இனமுரண்பாடும் ஏற்றத் தாழ்வுகளும் ஏற்பட்டன. இதனால் அவ்வக் காலங்களில் முனைப் படைந்த முரண்பாடுகள் இனவன்முறையாக வெடித்தது. நகர் சார்ந்து வாழ்ந்து வந்த அதனால் தமிழ் பேசும் மக்கள் தம் வாழ்விடங்களை விட்டு விரட்டப்பட்டனர். 1958ம் ஆண்டு கொழும்பிலும் மற்றும் நகர நிர்வாக மையங்களிலிருந்தும் தமிழர் தாயகமாக வடகிழக்கிற்கு விரட்டப்பட்டனர். 1977லும் இதே விதமாக பெரும்பாண்மை இனவன்முறையால் இந்நிகழ்வு நடந்தேறியது. 1983லும் அவ்வாறே நடந்தது. இந்தச் சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட இடப்பெயர்வை அரசாங்கம் பிரச்சனையாகக் கருதவில்லை. மாறாக தமிழ் மக்களை தம் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டதாகவே கருதியது.

இவ்வித இனவன்முறையை எதிர்த்து நாடாளுமன்றத்தில் எண்ணிக்கையில் சிறுதொகையினராக இருந்த தமிழர் பிரதிநிதிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்ட போதும் ஆட்சியாளர்களும் அவர்கள் அரச யந்திரமும் நெகிழ்ந்து கொடுக்கவில்லை. இதனால் கையறு நிலையிலிருந்த தமிழ் பேசும் மக்களின் இளந்தலை முறையினர் அரச யந்திரத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக போராட முற்பட்டனர் அந்நிகழ்வுகள் இலங்கையின் வடகிழக்கில் போர் ஒன்றைத் தோற்றுவித்தது. இதனால் வடக்கு கிழக்குப் பகுதியிலேயே இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கையால் மக்கள் இடப்பெயர்வும் மீளக்குடியமர்த்தலும் அடிக்கடி நடைபெற்றன. இதில் ஒரு பகுதியினர் வெளிநாடுகளுக்குச் சென்று அகதிகளாக குடியேறியுள்ளனர். இப்பிரச்சனைக்கு முகம்கொடுத்தோர் ஒரு முறையல்ல பல முறை இடப்பெயர்விற்கு உட்பட்டு தம் வாழ்வுரிமையையும் பொருளாதார வாழ்வையும் கிராமிய வாழ்வையும் இழந்துள்ளனர். குறிப்பாக 25 வருட உள்நாட்டு குடியுரிமைப் போரின் தாக்கம் இப்பகுதி மக்களின் வாழ்வியலை எவ்வாறு பாதித்துள்ளது. அவர்களின் நிம்மதியான வாழ்விற்கு ஏற்ற வகையிலான புனர்வாழ்வும் புனர்நிர்மாணமும் நடைபெறுகின்றதா என்பதை நோக்குவோம்.

**வடக்கு கிழக்கு மக்கள் இடப்பெயர்வு** (Displacement)

1. 2002 ஆரம்பம் வரை இலங்கையில் 800,000 மக்கள் உள்ளூர் இடப்பெயர்விற்கு உட்பட்டு இருந்தனர். இதில் அதிகமானோர் பெண்களும் சிறுவர்களுமாவர். உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்களில் 91,000 மக்கள் 264 அகதிமுகாம்களில் வாழ்ந்தனர். ஏனையோர் வேறு குடும்பங்களோடு அல்லது நண்பர்களுடன் வாழ்ந்தனர். ஏறக்குறைய ஒரு மில்லியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வெளிநாடு சென்றனர். இதில் அதிகமானோர் 80பதுகளின் ஆரம்பத்திலேயே சென்றடைந்தனர். இதில் 100,000 பேர் அகதிகளாக இந்தியா சென்றனர். இதில் 65000 பேர் 2002வரை இந்தியாவின் முகாம்களில் வாழ்ந்தனர். 270,000 பேர் IDP (Internally Displaced Peoples) தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளனர். 2002 லிருந்து இன்று வரை 1000 அகதிகள் இந்தியாவிலிருந்து திரும்பி வந்துள்ளனர்.

2. 2002 மதிப்பீட்டில் 613,220பேர் பதிவு செய்தவர்களாகவுள்ளனர். இதில் 204,586 பேர் பெண்கள் 193,682 பேர் ஆண்கள் 203,804 பேர் குழந்தைகள் கணக்கில் எடுக்கப்படாதோர் 6,148 பேர் இவர்களில் 389,844 பேர் (63% மானோர்) தம் வீடுகளுக்குத் திரும்ப விருப்பமுடையோராக உள்ளனர். 20.400 பேர் புதிய இடங்களுக்குச் செல்ல விரும்புகின்றனர். (3%) 156,438 பேர் (25%) எங்கு இருந்தார்களோ அங்கே செல்ல விருப்பமுடையோராக இருக்கின்றனர். 45,089 (7%) பேர் எந்த முடிவையும் எடுக்க முடியாதோராகக் காணப்படுகின்றனர்.

3.உயர் பாதுகாப்பு வலயத்தில் சொந்த வீடுகள் உள்ளோரும், மிதிவெடிகள் உள்ள இடங்களில் சொந்த வீடுகள் உள்ளோரும் தங்கள் நிலம் என உறுதிப்படுத்த முடியாத நிலமற்ற குடும்பங்களும் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்த வண்ணமேயுள்ளனர்.

4. போரால் இடம்பெயர்ந்தவர்களிடம் தமது நில உரிமையை உறுதிப்படுத்தும் உறுதியில்லை, பிறப்பத்தாட்சிப் பத்திரம் இல்லை, திருமணப் பதிவுப் பத்திரமில்லை, இறப்பத்தாட்சிப்பத்திரமில்லை, காணிகளுக்கான எல்லைகள் இல்லை. இதனால் இரண்டாவது தலைமுறையினர் பலபிரச்சனைகளை எதிர்நோக்கின்றனர். இங்கு குடியமர வருபவர்களுக்கு அரசாங்கம் Government Unified Assistance Scheme (UAS) படி உடனடி நிவாரணமாக 25,000 ரூபாவை (கூ265) வழங்க முடிவு செய்துள்ளது. இதில் மீளக் குடியமர்ந்தோரில் 10% பயன் பெற்றனர் என்ற கருத்து உண்டு. வீடுகள் கட்டுவதற்காக 75,000 ரூபா வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (கூ795) இதனைப் பெறுவதற்காக 34,500 குடும்பங்கள் 2002ல் திரும்புவார்கள் எனவும் 28,350 குடும்பங்கள் 2004ல் வருவார்கள் எனவும் மதிப்பிடப் பட்டுள்ளது. இதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | Immediate need | Medium Term need |
|---|---|---|
| Protection and Human Right | 11.3 | 10.7 |
| Relied Support | 31.8 | 18.4 |
| Priority Refugee Repatriation | 1.3 | 7.8 |
| Support for Traumatized victimless | 4.3 | 7.4 |
| Peace and Reconciliation activities | 2.8 | 3.4 |
| Support initiatives | 0.4 | 0.2 |
| Transition co - ordination | 0.9 | 0.4 |
| Total (Millions) | 52.9 | 48.3 |

வீடுகள் மாத்திரமல்லாது இடப் பெயர்வினால் பாதிக்கப்பட்ட மக்களுக் கான சமூகப் பாதுகாப்பு என்பதும் புனர் வாழ்விற்கான ஆதாரமாகக் கருதப் படுவதால் உடனடியாக பின்வருவன வற்றை கவனத்தில் எடுக்க வேண்டும்.

1.பிரிக்கப்பட்ட குழந்தைகள் , அநாதை கள் , இவர்களை குழந்தைத் தொழி லாளர்கள் பாலியல் துஷ்பிரயோகம் என்பவற்றிலிருந்து பாதுகாத்தல்.

2.விதவைகளும் அவர்கள் குடும்பத் தலைமைகளும், எதிர்கொள்ளும் வறுமையை போக்க ஆவன செய்ய வேண்டும்.

3.பெண்கள் உடலியல், பாலியல் துஷ்பிரயோகத்திற்கும், சுரண்டலுக் கும் உடன்படுத்தப்படுவதைத் தடுத்தல்.

4.போரால் பாதிக்கப்பட்டு வலுவிழந் தோர், மிதிவெடியால் வலுவிழந் தோர் சார்பான புனர்வாழ்வு நட வடிக்கைகள்

5.கூட்டுக்குடும்ப முறை சிதைந்தால் முதியோர் பராமரிப்பு பொது நிறுவ னங்களிடம் கையளிக்கப்படல்.

**மேற்குறிப்பிட்ட குழுவினர் குறிப்பாக பின்வருவனவற்றால் பாதிக்கப் பட்டோராக உள்ளனர்.**

1அழிந்து போன உள்கட்டுமானங்கள் (Disruption of infrastructure)

2.உறவினர்களை இழந்துள்ள பிரச் சனை.

3.மிதிவெடிப் பிரச்சனை

4.பாதுகாப்பு இன்மை பற்றிய பயம்

5.வறுமை அதிகரித்துச் செல்லல்

6.குடும்ப அமைப்பு உடைந்து செல்லல்

7.இவர்கள் சார்பாக எதையும் பாராமு கமாக இருத்தல்.

இவற்றுக்கெல்லாம் நிர்வாக பௌதீக, பொருளாதார உளவியல் ரீதியான உதவிகளை பொது நிறு வனங்கள் வழங்குதல் வேண்டும். புனர் நிர்மாணத்தில் குழந்தைகளின், பெண் களின் பாதிக்கப்பட்ட குழுவினரின் உரிமையைப் பாதுகாப்பதற்கு முன் னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்து உண்டு. இதற்கான வழிக ளாக பின்வருவனவற்றைக் குறிப் பிடுவர்.

1.சமூக இயல்தரு நிலையை வலுவூட்ட வேண்டும். குறிப்பாக பெண்களது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.பாதிக்கப்பட்ட குழுவினருக்கான சமூக இடைத்தொடர்பை வலுவூட்ட வேண்டும்.

3.இவர்கள் தொடர்பான நிறுவனங் களை பலப்படுத்த வேண்டும்.

4.இவை சார்பான செயற்பாட்டிற்கு பயிற்சியளிக்க வேண்டும்

குறிப்பாக சிறுவர்கள் விசேட கவனம் செலுத்த வேண்டும். வடக்குக் கிழக்கில் 2500 சிறுவர்கள் 41 பதிவு செய்யப்பட்ட சிறுவர் காப்பகங்களில் உள்ளன. 50 பதிவு செய்யப்படாத காப்பகங்களிலும் சிறுவர்கள் பராமரிக் கப்படுகின்றனர். இவர்களுக்கு அவர் கள் குடும்பத்துடன் மீளத் தொடர்பு களை ஏற்படுத்த ஆவன செய்தல் வேண்டும்.

1.சிறுவர்களை தொழிலுக்கு செல்வ திலிருந்து தடுத்தல் வேண்டும்.

2.சிறுவர்களை பொருளாதார, அசம்பா விதம், உரிமைமீறல் சம்பந்தமான பிரச்சனைகளைக் காரணமாகக் காட்டி போராட்டக் குழுக்களில் இணை வதைத் தடுப்பதற்கான மாற்றுத் திட் டத்தை Unicef மேற்கொண்டு வரு கின்றது.

போரினால் ஏற்பட்ட மற்று மோர் பாரிய பிரச்சினை விதவைகள் பற்றியதாகும் மட்டக்களப்பு (2002) திருகோணமலை (1998) வவுனியா (2002) அம்பாறை (2003) முல்லைத் தீவு (2003) போன்றவற்றில் 41,012 விதவைகள் உள் நோய்க்கு உட்பட்ட வர்களாகவுள்ளனர். இவர்கள் வாழ்வில் பாதிப்பினை ஏற்படுத்தியவை பதற்ற மும் பொருளாதார வறுமையும் முதல்காரணங்களாக இனங்காணப் பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட பிரச் சினையை ஈடுசெய்வதற்காக செல விட வேண்டிய தொகையாக மதிப் பிடப்பட்டமை.

| | Immediate | Medium Term |
|---|---|---|
| 1) Intervention for Children Separated From families of orphaned | 9.9 | 18.0 |
| 2)Child labium including under age recruitment | 0.9 | 2.7 |
| 3) Intervention for physical sexual abuse and exploitation at Children and Woman | 0.5 | 0.6 |
| 4)eople with disabilities | 0.6 | 3.5 |
| 5)Single headed Familieys | 5.6 | 3.5 |
| 6) 1.1 | 0.7 | |
| Total | 18.6 | 29.0 |

இடப்பெயர்வின் பின் மீளக் குடியமர்வோர் மிதி வெடி அபாயங்களை எதிர்கொள்கின்றனர் ஏற்கனவே இதனால் பாதிக்கப்பட்டோர் பட்டியல் இதன் முக்கியத்துவத்தையும் அதன் விளைவுகளையும் தெளிவாகக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிதிவெடியால் பாதிக்கப்பட்டோர்

| மாவட்டம் | பாதிக்கப்பட்டோர் | காயமடைந்தோர் | இறந்தவர்கள் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 577 | 515 | 62 |
| கிளிநொச்சி | 102 | 89 | 13 |
| மன்னார் | 21 | 18 | 3 |
| வவுனியா | 20 | 8 | 12 |
| முல்லைத்தீவு | 95 | 82 | 13 |
| மட்டக்களப்பு | 65 | 65 | 00 |
| அம்பாறை | 5 | 5 | 00 |
| திருகோணமலை | 16 | 12 | 4 |
| மொத்தம் | 901 | 794 | 107 |

மிதிவெடி அபாயத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற சர்வதேச நாடுகளின் உதவி நாடப்பட்டது. அதை அகற்றுவதற்கு பின்வரும் நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றது. TRO.UNICEF HALLTUREST, Humanitandan mine clearance இதில் TRO வர்த்தகக் கம்பனிகள் , தேசிய மிதிவெடி அகற்றும் குழு இராணுவ, LTTE மிதிவெடி அவற்றும் குழு வேலை செய்கிறது. இதற்கு செலவு செய்ய வேண்டிய நிதியை சர்வதேச நாடுகளிடமிருந்து அரசு எதிர்பார்க்கின்றது. இதற்கு செலவிட வேண்டியது.

| | உடனடி $Million | நடுத்தரம் $Million |
|---|---|---|
| Support to Co ordination | 0.9 | 2.0 |
| Mine clearance resources | 13.4 | 9.0 |
| Mine Risk Education | | |
| Victim Assistance and Advance | 1.0 | 1.1 |
| Total | 15.3 | 12.1 |

**சுகாதாரம் :** வடகிழக்கின் நிலை மிகவும் கவலைக்குரியது. போர் ஒருபுறமிருக்க இப்பிரதேசத்தை மத்திய அரசு புறக்கணிதாலும் மத்திய அரசின் சேவைகள் போதுமானளவு வழங்கப்படாததும் பெரும் விளைவுகளைத் தோற்றுவித்துள்ளது. இக்காலத்தில் பிறந்த குழந்தைகளைப் பற்றிய குறிகாட்டிகள் இதன் தாற்பரியத்தை வெளிப்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுட்டடிகள்**

1. 0-5 வயதிற்கு இடைப்பட்டோரில் நிறைகுறைந்தோர்

| விபரம் | இலங்கை | வடகிழக்கு |
|---|---|---|
| சராசரியாக | 24.9% | 46.2% |
| இதில் ஆண்கள் | 29.0% | 50.2% |
| பெண்கள் | 29.8% | 42.3% |

| | | |
|---|---|---|
| 2.குறைநிறையுடன் பிறந்த குழந்தைகள் | 6.7% | 25.7% |
| 3.பிறப்புடனான போசாக்கின்மை | | 48.5% |

இதற்கு எது காரணம் என மதிப்பிட்ட போது வடக்கு கிழக்கின் 400 சுகாதார நிறுவனங்களில் 55 முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. 49 எதுவித தொழிற்பாடுமில்லாதிருக் கிறது. ஏனையவற்றின் நீர் வழங்கலும் மலசலகூட வசதிகளும் பழுதடைந் துள்ளன. நோய்த் தடுப்பிற்கான வசதிகள் எதுவுமில்லை.

வடக்கு கிழக்கில் அரச சுகாதார சேவையில் 9542 பேர் வேலைசெய்ய வேண்டிய இடத்தில் 3251 பேருக்கு பதவி வெற்றிடமாகவேயுள்ளது. அதாவது 34% மான பதவி நிரப்பப்ப டாதிருப்பதும் மேற்குறிப்பிட்ட சுகா தார சுட்டிகள் பாதகமாக அமைவதற்குக் காரணமாகும். இதில் குறிப்பாக வைத் தியர்கள், சுகாதார அலுவலர்கள், மருந் தாளர்கள் வெற்றிடமுண்டு. ஆரம்ப குழந்தை வளர்ப்பில் ஏற்படும் அபி விருத்தியை அரசு கவனத்தில் கொள் ளாததால் தாய்சேய் போசாக்கின்மை, வறிய தாயின் போசாக்கின்மை பிறக் கும் குழந்தையின் ஆரோக்கியத்திலும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது என்பதற்கு மேற்காட்டிய புள்ளி விபரங் கள் சான்றாகும். மற்றும் உணவுப் பாதுகாப்பு இல்லாமையாலும் மேலெ ழுந்த விளைவுகள் ஏற்பட்டது என்பதை யும் குறிப்பிடுதல் வேண்டும்.

**கல்வி**

வடக்கில் மொத்தமாக 1968 பாடசாலைகள் உண்டு. அங்கு 648,000 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இதில் ஏறக்குறைய இருபாலாரும் சம அளவாகவே உள்ளனர். 15% மாணோர் கல்வியை இடைநிறுத்துகின்றனர். இது தேசிய சராசரி பெறுமானத்தில் 4 மடங்காகும். 50,000 குழந்தைகள் பாடசாலைக்கு வெளியிலேயே உள்ள னர் பாடசாலைக்கு இச்சிறுவர்கள் தொடர்ந்து செல்பவராக இருந்தால் 2007ம் ஆண்டில் 866,000 சிறுவர்கள் பாடசாலையில் இருப்பார்கள். இடம் பெயர்ந்தவர்கள், திரும்பி வந்தால் கல்வியைத் தொடராதோர் வீதம் குறைந்தால் சராசரி ஒவ்வொரு வருடமும் 6% பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் தொகை அதி கரிக்கும் என்ற அடிப்படையிலேயே இது மதிப்பிடப்பட்டுள்ளது. இது வேறு வேறு மாவட்டங்களில் வேறு வேறு அளவுடையதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதியில் இனிவரும் ஆண்டுகளில் பாடசாலையில் ஒவ்வோர் வருடாவருடம் 9% மாக அதிகரிக்கும். இது அம்பாறை திருகோணமலையில் சராசரி 4%மாக இருக்கும்.

2002ம் ஆண்டில் வடக்கு கிழக்கில் ஆசிரியர் தொகை 225,00 ஆக இருந்தது. இதில் 19,000 தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் 3500 சிங்கள மொழி மூல ஆசிரியர்கள் இன்னும் 4650 ஆசிரியர்கள் தேவை. தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் தேவையாக உள்ளது. 240 சிங்கள மொழி மூல ஆசிரியர்களும் தேவைப்படுகின்றனர். அதிகமாக நிரப்பப்படாதிருக்கும் ஆசிரியர்கள் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களும் ஆங்கில ஆசிரியர்களுமேயாகும். (இது ஏறக்குறைய 40% மாகும்) அதிகமான வெற்றிடங்கள் கிளிநொச்சியிலும், முல்லைத்தீவிலும் ஏறக்குறைய 47% மாகும். மன்னாரிலும் 40% வவுனியா விலும் 31 % உள்ளது. தற்போது இவை நிரப்பப்பட்டு வருகின்றன.

500 பாடசாலைகளில் உள்ள 1500 வகுப்பறைகள் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளது. இங்கு 209,000 சதுர மீற்றர் மேலதிக வகுப்பறையும் 312,000 சதுர மீற்றர் ஆய்வு கூடமும் நூலக வசதியும் அலுவலக அறையும் நிர் மாணிக்கப்பட வேண்டும். இதைத் திருத்தியமைக்கும் பணியில் ஜேர்மனி யில் G.T.Z நிறுவனம் உதவி வருகிறது. IT வசதிகளும் தளபாட வசதிகளும் வேண்டும். இதையும் Unicef போன்ற NGO வழங்கி வருகிறது. முன்பள்ளிகளை T.R.O நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. வடகிழக்கில் குறிப்பாக 637 முன் பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில் 19,618 மாணவர்கள் கல்வி கற்கின் றனர். 1052 முன்பள்ளி ஆசிரியர்கள் உள்ளனர். இவர்கள் 500 - 1000 இடைப் பட்ட மாதாந்த சம்பளத்தையே பெறமுடிகின்றது.

ADB/UN/WB மதிப்பீட்டின்படி கல்வித்துறையை புனர் நிர்மாணம் செய்வதற்கான செலவு பின்வருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| செயற்பாடு | உடனடித் தொகை | ரூ. மில்லியன் நடுத்தரகால தொகை |
|---|---|---|
| 1. ஆசிரியர்கள் , பயிற்சி | 2.6 | 4.7 |
| 2.பௌதீக கீழ்க்கட்டுமானம் | 13.9 | 30.9 |
| 3.போர் நடந்த பிரதேசங்கள் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான தேவை | 1.1 | 2.3 |
| 4.முறைசாராக் கல்வி | 0.5 | 1.0 |
| 5.பரந்த நோக்கில்தர அபிவிருத்தி | 0.4 | 0.7 |
| 6.சமாதானத்திற்கான கல்வி | 0.4 | 0.8 |
| 7.இயலுமையை கட்டியெழுப்பல் | 1.3 | 2.6 |
| 8.பாடசாலையில் உணவு | 3.7 | 2.2 |
| 9.முன்பள்ளி | 1.8 | 3.6 |
| 10.உயர்கல்வி | 5.2 | 10.4 |
| | 30.9 | 59.2 |

## வீட்டு வசதி

326,700 வீடுகளும் அவற்றின் தளபாடங்களை வடகிழக்கில் சேதமடைந்துள்ளன. இதில் 58% மானவை முழு அளவில் சேதமடைந்துள்ளன. வடக்கில் I.D.P அகதிகளில் வருகையுடன் அவர்களின் 84% சொந்தவீடுகள் சேதமடைந்துள்ளன. அதாவது 144,890 வீடுகள் முழு அளவில் சேதமடைந்துள்ளன, இதில் 90% மானவை போரால் அழிந்தவையாகும். இதில் முற்றாக அழிந்தவை 43% மாகும். 45% IDPS யாழ்ப்பாணத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்தோர் மீளக் குடியமர வந்தபோது அவர்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. இவர்கள் நிசமற்றவர்களாகவும் இருந்தால் அகதி முகாம்களில் இருக்க வேண்டியுள்ளனர். 18,500 குடும்பங்கள் இவ்வாறு இருக்கின்றனர்.

இடம் பெயர்ந்திராத மக்களின் 196,300 வீடுகள் சேதமடைந்துள்ளன. இதில் 60% மானோர் வீடுகள் வடக்குக் கிழக்கிலேயே உண்டு. இதில் 45% முழு அளவில் அழிக்கப்பட்டதாகவே யுள்ளது. இவ் வீதமே கோயில்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் போன்ற பொதுக் கட்டடங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூ. மில்லியன்

| தேவையான பணம் | உடனடித் தொகை | நடுத்தரகால தொகை |
|---|---|---|
| 1. IDP அகதிகளுக்கான வீட்டுத் திட்டம் | 70.0 | 46.4 |
| 2. வீடு புனரமைத்தலுக்கான நிதி | 55.0 | 83.0 |
| 3. கட்டுமான நிறுவனங்களை வலுவூட்டல் | 10.0 | 4.0 |
| 4. வறியவர்களுக்கான சமூகக் கட்டுமானம் | 10.0 | 20.0 |
| 5. சமூக அபிவிருத்தி நிறுவனம் அரசசார்பற்ற நிறுவனம் வினைத்திறனாக்கம். | 2.8 | 0.0 |
| 6. நகர முகாமைத்துவமும் அபிவிருத்தி உதவியும் | 8.0 | 7.0 |
| 7.போரினால் பாதிக்கப்பட்டோருக்கான புதிய வீடுகள் | - | 18.0 |
| 8. வீடு கட்டல் / நிதி வழங்கல் /சந்தை வலுவூட்டல் | - | 1.5 |
| | 155.8 | 180.4 |
| வரவு செலவுத் திட்டத்திற்கு உட்படாத வகையில் பணத்தைச் சேர்த்தல் | 5 | 10. |
| | 150.8 | 170.4 |

**புகையிரதப் பாதை புனரமைப்பு**

160 km புகையிரதப் பாதை முழுமையாகப் போடவேண்டியுள்ளது. அதேவிதமாக 106k.m தலைமன்னார் பதை போடவேண்டியுள்ளது. 160 km புகையிரதப் பாதையைப் போடும் போது 10 பெரிய பாலங்களும் 29 தரிப்பிட நிலையங்களும் புனரமைக்கப் பட வேண்டியுள்ளது. 10 டீசல் தாங்கிகளும் 85 வாகன உம் 200 மக்கள் பயணிக்கும் பெட்டிகளும் வேண்டும். இவற்றிற்கு மொத்தமாக 114.6 மில்லியன் பணம் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீதிகள்**

A9 பாதை பூர்த்தியாகும் நிலையில் உள்ளது. போரினால் அழிந்த வீதிகளைத் திருத்த

| | கூ. மில்லியன் | |
|---|---|---|
| | **உடனடித் தொகை** | **நடுத்தரகால தொகை** |
| தேசியதர வீதிகளுக்குத் தேவையான நிதி | 56.5 | 108.2 |
| மாகாண வீதிகளுக்கு | 22.0 | 42.5 |
| உள்ளூர் வீதி | 15.1 | 30.2 |
| மொத்தம் | 93.6 | 180.9 |

துறைமுகங்கள் மீள் நிர்மானிக்கபட்பட வேண்டும் காங்கேசன்துறை, பருத்தித்துறை, திருகோணமலைத்துறை போன்றவை.

**தொலைத்தொடர்பு**

மரபு சார்ந்த தொலைத்தொடர்பு முழு அளவில் அழிக்கப்பட்டு விட்டன. இனிவரும் 5 வருடத்தில் வடக்கு கிழக்கில் 700,000 புதிய தொலைபேசி இணைப்புக்களுக்கு தேவைகள் உண்டு. இவை ஒவ்வொன்றும் கூ.500 செலவு டையது. இதற்கு கூ350 மில்லியன் டொலர் முதலிட வேண்டியுள்ளது. 100,000 புதிய இணைப்பு 18 - 24 மாதங்களுக்குள் தேவை. இதற்கு 50 மில்லியன் டொலர் தேவை. தனியார் தொலைபேசி இணைப்புக்களை வழங்க பெரும்பாலான இடங்களில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**மின்சாரம்**

வடக்குக் கிழக்கிற்கு 240 ஆறு மின்சாரம் தேவையாக உள்ளது. தற்போது வடக்கில் 22% மும் கிழக்கில் 40 %மும் வழங்கப்படுகின்றது. இலங்கை முழுவதிலும் சராசரி 50% மாக யாழ்ப்பாணத்தில் 35 ஆறு இயலளவுடைய இயந்திரத்தால் 22 ஆறு மின்சாரம் இரு தனியார் கம்பனியால் வழங்கப்படுகின்றது.

வவுனியாவிலிருந்து வடக்கிற்காக 150 Km transmission அழிக்கப்பட்டுள்ளது. வடக்கில் சேதமாக்கப்பட்டதால் 9% பங்கீடு வழங்கப்படவில்லை. இதில் 50% தற்போது பழுது பார்க்கப்பட்டுள்ளது. மன்னாரில் சேதமாக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் 70% சேதமாக்கப்பட்டுள்ளது. இதில் 22% திருத்தப்பட்டுள்ளது.

**நீர்ப்பாசனம்**

வடக்கு கிழக்கில் 323,700 கெக்ரயர் நிலப்பரப்பு நீர்ப்பாசனத்துக்கு உட்பட்டிருந்தது. இதில் பாரிய நடுத்தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ப்பாசனத் திட்டத்திற்கு 266,700 கெக்ரயர் 57,000 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களிலுமிருந்தது. இவை முழு அளவில் பராமரிப்பில்லாமல் சேத மடைந்துள்ளது. இவற்றை உடனடி யாக திருத்தி பராமரிக்க வேண்டி யுள்ளது. இதை திட்டத்தின் கீழ் நியாப் சிறிதளவு திருத்தி வரு கின்றது.

மேற்காட்டப்பட்ட புனர்வாழ்வு புனர் நிர்மாண நடவடிக்கைகள் முழுமை யாக இல்லாதிருந்தாலும் பகுதி பகுதியாக நடைபெற்றாலும் வட கிழக்கின் உண்மை நிலையை பின் வரும் தரவுகள் வெளிக்காட்டுகின்றது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வடகிழக்கு மாகாணங் களின் பங்களிப்பு குறைந்தே வந்துள் ளது. குறிப்பாக வடமாகாணத்தின் பங்களிப்பு (GDP) 1990 4.4 %மாக இருந்து 2000ம் ஆண்டில் 2.1 %வீழ்ச்சி யடைந்துள்ளது. கிழக்கு மாகாணத் தில் 1990 இல் 4.2% மாக இருந்த பங்கு 2000இல் 4.5 %மாக உள்ளது. கிழக்கில் 10வருடத்தில் எந்தவித மாற்றமும் ஏற்பட்டதாக குறிப்பிட முடியாது.

விவசாயச் செய்கையிலும் இவ் உள்நாட்டுப் போர் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் மொத்த நெல் உற்பத்தியில் வட மாகாணத்தின் பங்கு 1980 இல் 11.6%மாக இருந்து 2000 ஆம் ஆண்டில் 3.0% வீழ்ச்சியடைந்துள் ளது. 1980 இல் இருந்து 2000 வரை வெங்காய உற்பத்தி 36.7%மாக இருந்து 20.5%மாகவும் மிளகாய் உற்பத்தி 22% இலிருந்து 5.5 %மாக வீழ்ச்சியடைந்துள்ளது. மீன்பிடியி லும் 40% இலிருந்து 3.1% வீழ்ச்சி யடைந்துள்ளது.

கைத்தொழிற்துறையும் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளான துறையாக வேயுள்ளது. குறிப்பாக காங்கேசன் சீமெந்துத் தொழிசாலை பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை வாழைச் சேனை, காகிதத் தொழிற்சாலை போன்ற பாரிய தொழிற்சாலைகள் செயலிந்து போனதால் நேரடியாக வும், மறைமுகமாகவும் பெருமளவா னோர் தொழிலிழந்தனர்.

இடப்பெயர்வினால் நடுத்தர - சிறிய -குடிசைக் கைத்தொழில்களும் முற்றாக சேதமடைந்தன. இவை மக்களின் வருமானத்தையும் கீழ் நிலைக்குத் தள்ளியது.

போரும் இடப்பெயர்வும் வடக்கு கிழக்கு வாழ் மக்களின் வாழ்வி யலையும் இருப்பு நிலையும் கேள்விக்குள்ளாக்கியதால் இலங்கை யின் ஏனைய பிரதேச மக்களின் வாழ்க்கை மட்டத்திற்கு பன்மடங்கு கீழ் நிலையில் உள்ளதை எல்லோரும் அறிவர் இதனால் இப்பிரதேச மக்களின் வாழ்வை புனர்நிர்மாணம் செய்வதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச அபிவிருத்தியில் பேண்தகு தன்மை யாழ் குடாநாட்டினுடைய நிலக்கீழ் நீர் மாசு தொடர்பான ஒரு நோக்கு

# Sustainability in Regional Development A review of groundwater pollution in Jaffna peninsula

*T.Bhavan,*
*M.Sc (Agri.Econ)*
*Sri Lanka Development,*
*Gate way*
*Jaffna Regional Centre.*

## அறிமுகம்

சுத்தமான குடிநீரின் கிடைப்பனவு என்பது பொருளாதார கண்ணோட்டத்தில் நோக்குகின்ற போது மனிதனின் அடிப்படைத் தேவைகளில் (Basic needs) ஒன்றாக குறிப்பிடப்படுகின்றது. இவ் வடிப்படைத் தேவையானது வறுமைக் குறிகாட்டியாகவும் அல்லது வறுமையின் அளவுகோலாகவும் பொருளியலாளர்களினால் கையாளப்படுகின்றது. ஒரு பிரதேசத்தில் அங்கு வாழும் மக்களுக்கான குடிநீரின் கிடைப்பனவு அதனது தன்மை என்பவற்றைக் கொண்டு அப்பிரதேசத்தின் அபிவிருத்தி இயல்பினை அறிந்து கொள்ள முடியும். இதன்படி இக்கட்டுரையானது யாழ்ப்பாணகுடா நாட்டினது மக்களுக்கு கிடைக்கின்ற குடிநீரின் தன்மை, இந்நீர் வளத்தினது பாதிப்பு தொடர்பான பிரச்சனைகள் பற்றி சுருக்கமாக ஆராய்கின்றது.

## நீர்வளம்

புவியினது மேற்பரப்பானது 70% ஆன நீரினால் மூடப்பட்டதாகும். இதில் 97.5% ஆனது உப்பு நீரினைக் கொண்டதாகும். இதிலும் எஞ்சிய2.5% அளவே தூய்மையான நீரினைக் கொண்டதாகும். இவ் 2.5% ல் 70%ஆன பங்கு பனிக்கட்டிகளாக காணப்படுகின்றது. சுத்தமான நீரின் அளவில் 0.26% அளவே ஆறுகள், குளங்கள் போன்றவற்றின் மூலம் மனிதனின் பொருளாதார தேவைக்கு உதவுகின்றன. இச்சிறிய பங்கினை வகிக்கின்ற நீரின் மீதான கேள்வியானது மனிதனால் மேற்கொள்ளப்படுகின்ற விவசாயம், கைத்தொழில், மற்றும் மனித கால் நடை நுகர்விற்காக ஏற்படுகின்றது.

இதனடிப்படையில் நீரானது மீண்டும் புதுப்பிக்கக்கூடிய வளம் (Renewable



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

resources) என்கின்ற பொதுவான இயல்பினைக் கொண்டிருந்தாலும் உண்மையில் சனத்தொகை விருத்தியின் காரணமாக இவ்வளமானது மிக மோசமாக பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதே வெளிப்படை.

இக்குடிநீரானது பின்வரும் இரண்டு விதமான தாக்கத்திற்குள்ளாகின்றது.

1. தொடர்ந்தேர்ச்சியான நுகர்வினால் அதனது நிரம்பலின் அளவு குறைவடைந்து செல்கின்றது.
2. ஏனைய மனித நடவடிக்கைகள் மூலம் நீரின் தரம் மாசுபடுத்தப் பட்டுக்கொண்டிருக்கின்றது.

### யாழ் குடாநாட்டு நிலக்கீழ் நீர்வளம்

இலங்கைத் தீவினை கருத்திலெடுக்கின்ற போது 8 வகையான நிலக்கீழ் நீர் (types of ground water aquifers)இல் யாழ் குடாநாடானது தனக்கேயுரிய சிறப்பியல்பான சுண்ணாம்பு கற்படையினை{shallow karstic aquifer (weathered karstic miocene limestone)} கொண்டுள்ளது. இது 50 மீற்றருக்கும் கூடிய தடிப்புடையதாக காணப்படுகின்றது. இச்சுண்ணாம்பு படைகளின் இடையில் விவசாயம், சிறுகைத் தொழில் மற்றும் மக்களதும் கால்நடைகளினதும் நேரடி நுகர்விற்கான நிலக்கீழ் நீர்ப்படை காணப்படுகின்றது. இந்நிலக்கீழ் நீரானது வருடாந்த மழைவீழ்ச்சியின் (1255mm) காரணமாக 30%-32%வரை மீளமைக்கப்படுகின்றது. குடா நாட்டினைப் பொறுத்தவரையில் ஏனைய நீர்மூலங்களான ஆறுகள் இல்லாத நிலையும் குளங்களின் அரிதான தன்மையும் கொண்ட பிரதேசமாகும். ஆகவே அனைத்து தேவைகளுக்கும் வருடாந்த மழைவீழ்ச்சியிலும் நிலக்கீழ் நீரிலுமே செயற்பாடுகள் தங்கியுள்ளன.

அண்மைய ஆய்வுகளின் அடிப்படையில் நோக்குகின்ற போது குடாநாடானது இந்நிலக்கீழ் நீர்வளம் தொடர்பாக பாரிய பிரச்சனையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது என எச்சரிக்கப் பட்டுள்ளது.

### பிரச்சனைகள்

#### நிலக்கீழ் நீர்வளம் உவர் நீராக மாறுதல்

குடாநாட்டில் அனைத்து விவசாய நடவடிக்கைகளும் நிலக்கீழ் நீரினையும், பருவகால மழையினையும் நம்பியிருக்கின்ற சூழ்நிலையில் பருவகால மழைதவிர்ந்த ஏனைய வருடத்தின் நீண்ட காலப்பகுதியில் விவசாயிகளினால் இயந்திரங்கள் மூலமாகவோ அல்லது மனிதவலு மூலமாகவோ நிலநீர் பெறப்படுகின்றது. இங்கு 1 லட்சத்துக்கும் மேற்பட்ட கிணறுகளில் 25% ஆனவை நீர்ப்பாசனத்திற்காக பயன் படுத்தப்படுகின்றன. இதன்படி இயந்திரவலு மூலமாகவோ அல்லது மனிதவலு மூலமாகவோ வறண்ட காலப் பகுதியில் நீர்ப்பாசன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போது சுண்ணாம்பு படைகளின் இடையே காணப்படுகின்ற இடைவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குள் அவை கடல் மட்டத்திற்கு கீழ் காணப்படுவதனால் உவர்நீர் (saline water) உட்புகுகின்ற தன்மை காணப்படுகின்றது. இவ்வுட்புகும் தன்மையானது மழை வீழ்ச்சி அதிகமுள்ள காலங்களில் குறைவாகவும் வறண்ட காலப்பகுதிகளில் கூடுதலாகவும் காணப்படுகின்றன மழை வீழ்ச்சிக்காலங்களில் சுத்தமான நீர் மீளமைக்கப்படுகின்றது எனினும் அவை வறண்ட காலப்பகுதிகளில் உவர்நீர் உட்புகும் வீதத்தினை விட குறைவாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வுவர் நீராதல் தன்மையானது, உயர்ந்த குளோரைட் செறிவு மிக்கதாக (High chloride concentration) நிலக்கீழ் நீரை மாற்றுகின்றது. WRB நீர்வளச் சபை (water resources Board) இனது கணிப்பீட்டின்படி ஒரு லீற்றருக்கான குளோரைட் செறிவானது 400 மில்லி கிராமில் இருந்து 900மில்லி கிராமாக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அண்ணளவாக 23%-25% ஆன குடாநாட்டுப் பிரதேசமானது உலர் காலநிலையில் உவர்நீரை கொண்டு காணப்படுகின்றது. இது மழை வீழ்ச்சி காலப் பகுதியில் 10% ஆக காணப்படுகின்றது.

**நிலக்கீழ் நீர்வளம் மாசடைதல்**

குடாநாட்டினது நிலக்கீழ் நீர்வளம் எதிர்நோக்குகின்ற இரண்டாவது பிரச்சனையாக இது காணப்படுகின்றது. இதன்படி விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுகின்ற பசளைகள், கிருமிநாசினி என்பன நிலக்கீழ் நீரினை சென்றடைந்து அதை மாசுபடுத்துகின்றன. விவசாயிகள் பயன்படுத்தும் யூரியா (Urea) இவை 46% ஆன நைற்றஜன் (Nitrogen) ஐ உள்ளடக்கியுள்ளது. மிளகாய், வெங்காயம் போன்ற பயிர்களுக்கு இவைகள் பயன்படுத்தப்படுகின்றபோது இது நிலக்கீழ் நீரினை சென்றடைந்து நிலக்கீழ் நீரினை நைற்றஜன் செறிவு மிக்கதாக மாற்றுகின்றது. இது சுகாதாரத்திற்கு ஏற்றதாக அல்லாது நீரின் மூலம் ஏற்படும் பாதிப்புக்களுக்கு ஏதுவாக அமைகின்றது. தற்போது உரங்கள் முக்கியமான ஆபத்து தன்மை வாய்ந்தவையாக மாறிவருகின்றன.

இதைவிட குடாநாட்டு மக்களால் பயன்படுத்தப்படுகின்ற கழிவறைகளின் அமைப்பு (septic tank system) முறையானது நிலக்கீழ் நீரினது தரத்தினை மாசுபடுத்தும் செயற்பாட்டிற்கு ஏதுவாக உள்ளது. இதன் காரணமாக நிலக்கீழ் நீரானது கூடிய நைற்ரேற் (Nitrate) செறிவுள்ளதாக மாறுகின்றது. இது நீரின் மூலம் தூண்டப்படுகின்ற நோய்களுக்கு (water borne diseases) ஏதுவாக அமைகின்றது. குடாநாட்டினது (Nitrate) நைற்ரேற் மட்டமானது உலக சுகாதார ஸ்தாபனத்தினால் (WHO) வரையறுக்கப்பட்ட நைற்ரேற் மட்டத்திலும் 100-150 மடங்கு கூடுதலாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் சனத்தொகை செறிவுள்ள பிரதேசங்களில் கழிவு கிடங்கிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணறுகளுக்குமிடையிலான தூரம் 6 மீற்றருக்கும் குறைவாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

விவசாய மற்றும் கழிவகற்றல் செயற்பாடுகளினால் பின்வரும் பிரதான தாக்கங்கள் ஏற்படுகின்றன.

1. நீரின் வளம் அல்லது தரம் (quality) குன்றுகின்றது.
2. நோய்க்கிருமி காவியாக நீர் மாற்றமடைகின்றது.
3. இந்நீர் வளத்தினைக் கொண்ட நிலத்தினது பெறுமதி குறைவடைகின்றது.
4. நாட்டினது அல்லது பிரதேசத்தினது பொருளாதார இழப்பிற்கு இட்டுச் செல்கின்றது.

**பரிந்துரைகள்**

அண்மைய ஆய்வுகளின்படி தேவைக்கு மேற்பட்ட நீர்ப்பாசனத்தை குடா நாட்டு விவசாயிகள் கையாள்வதாக கூறப்படுகின்றது. இது நிலக்கீழ் நீருக்கும் உவர் நீருக்குமிடையிலுள்ள சமநிலை மட்டத்தினை பாதித்து உவர் நீரின் ஆதிக்கத்தினை அதிகப்படுத்துகின்றது. பொதுவாக அதிக நீர்ப்பாசனம் அதிக விளைச்சலைத் தரும் என விவசாயிகள் நம்புவதே இதற்கு காரணமாக அமைகின்றது. நீரினது நிரம்பலுக்கான விலை, கட்டுப்பாட்டு முறைகள் இல்லாதவிடத்து ஒவ்வொரு விவசாயியும் இவ்வளத்தினை மேலதிகமாக பாவிப்பதை கட்டுப்படுத்துவது கடினமானதாகும். ஆனால் நீரானது கூடிய பெறுமதியும் மீளமைப்பதில் சிக்கல் நிறைந்ததுமான ஒரு வளமாகும்.

இதன்படி நிலக்கீழ் நீரினது செயற்திறன் (efficiency of ground water) மதிப்பிடப்படல் வேண்டும். பயிர்களின் நீருக்கான தேவை (crop water requirement) நீர்ப்பாசன செயற்திறன் (efficiency of Irrigation) நீர்ப்பாசன தொழில் நுட்பத்திறன் அளவீடு (productivity measurement) குறிப்பிட்ட பயிர்களுக்கான நீர்ப்பாசனத்தினது செயற்றிறன் (Cost and benefits) என்பன கருத்திலெடுக்கப்படல் வேண்டும்.

உதாரணமாக நீர்ப்பாசன செயற்திறன் (Irrigation efficiency) ஆனது நீர்ப்பாசன தேவையிலும் நடைமுறையில் பாய்ச்சப்படும் நீரின் அளவிலும் தங்கியுள்ளது. உதாரணமாக குடா நாட்டில் 4 அல்லது 3 குதிரைவலு (horse power) மண்ணெய் மூலம் இயங்கும் இயந்திரங்கள் சராசரியாக நிமிடத்திற்கு 250*L* (லீற்றர்) நீரைப்பாச்சுகின்றன எனின் நடைமுறையில் பாய்ச்சப்படும் நீரின் அளவைக் கணிப்பிடும் சமன்பாடானது பின்வருமாறு காணப்படும்.

$$\text{பாச்சப்படுகின்ற நீரின் அளவு (லீற்றர்)} = \text{இயந்திரவலு 250ல் (நிமிடத்திற்கு)} \times \text{நேரம்}$$

இதன்படி

$$\text{நீர்ப்பாசன செயற்திறன் (Irrigation efficiency)} = \frac{\text{தேவையான நீர்ப்பாசனம் (Irrigation required)}}{\text{பாய்ச்சப்படுகின்ற நீரின் அளவு (water applied)}} \times 100$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிருக்கான நீரின் தேவையானது பின்வருமாறு வரைவிலக்கணப்படுத் தப்படுகின்றது. பயிரிற்கான நீரின் தேவையானது நோய்கள், மண் வளமின்மை போன்ற வரையறை களற்ற பாரிய நிலப்பிரதேசத்தில் சாதாரணமான சூழலில் வளரக்கூடிய உத்தம வெளியீட்டினை தரக்கூடிய பயிரில் இருந்து ஆவியாதல் மூலம் வெளியேற்றப்படும் நீரின் அளவினை பூர்த்தி செய்யக்கூடிய அளவாகும்.

இதேபோல ஒரு அலகு (unit) நீரின் மூலம்உற்பத்தி செய்யக்கூடிய அளவானது பின்வருமாறு கணிப்பிடப்பட முடியும்.

$$\text{ஒரு அலகு நீரினது உற்பத்தித்திறன் \{Productivity per unit of water\}} = \frac{\text{பயிரினது சராசரி விளைச்சல் \{Average yield of crop\}}}{\text{உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற நீரின் அளவு (Applied quantity of water)}}$$

இதே போன்று பசளைகளினதும், கிருமிநாசினிகளினதும் பிரயோகங் களினது உத்தமமட்டம் கணிப்பிடப் படல் வேண்டும். இதன்படி பசளை, கிருமிநாசினி, நீர் என்பவற்றினது பரிந்துரை செய்யப்பட்ட செலவுடன் நடைமுறையில் காணப்படுகின்ற அதாவது விவசாயிகளுக்கு ஏற்படும் செலவினை ஒப்பிடுவதன் மூலம் செயற்திறன் மட்டம் கணிப்பிடப்பட முடியும்.

$$\text{செயற்திறன் மட்டம் (Efficiency level)} = \frac{\text{பரிந்துரை செய்யப்பட்ட மட்டத்திற்கான செலவு (cost for recommended level)}}{\text{நடைமுறை செலவு (Actual cost)}} \times 100$$

அடுத்த விடயமாக நிலக்கீழ் மற்றும் ஏனைய நீர் நிலைகளை மாசுபடுத்தும் மூலங்களும் (sovries) கவனத்தி லெடுக்கப்பட வேண்டியுள்ளது. பிரதேச அபிவிருத்தி என்ற எண்ணக் கருவினுள் எமது பிரதேசமானது படிப்படியாக அபிவிருத்திப் பாதையில் செல்கின்ற போது ஏற்படும் பொருளா தார, சமூக, முன்னேற்றங்களுடன் சூழல் பற்றிய பாதுகாப்பு முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளும் இன்றியமை யாததாகின்றது. இதன்படி சூழல் மாசடைதலை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள், மாற்றீட்டு முறைகள் கையாளப்படல் வேண்டும். அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடமுடியும்.

1. ஆபத்துத் தன்மை நிறைந்த கழிவு களை அகற்றும் உற்பத்திகளுக்கு வரி (pollution tax), சிறந்த சூழல் மாசடை தலைக் கட்டுப்படுத்தும் வழிமுறை களை கையாள்வதற்கான மானிய (subsidy system) முறைகளை அறிமுகப்படுத்தல்.
2. அனுமதிப்பத்திரமுறை (permit system) அறிமுகப்படுத்தல். இதன் மூலம் சூழலுக்கு ஆபத்து விளை விக்கும் உற்பத்தி நிறுவனங்களை கட்டுப் படுத்த முடியும்.
3. கழிவுகளை குறைக்கும் தொழில் நுட்ப முறையை கையாளல் அல்லது பொருத்தமான கருவிகளை பொருத் துதல்.
4. கழிவு முகாமைத்துவ கல்வியை (waste management education) விரிவு செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கழிவுகளை மீள்பாவனைக்குட் படுத்துவது (Recycling system) தொடர்பான ஆலோசனைகளை மக்களுக்கும், உற்பத்தியாளர்களுக் கும் வழங்கல்.
6. வளப்பாதுகாப்பு, வளங்களின் உத்த மபாவனை மட்டம், கிருமிநாசினி, பசளை பிரயோகம் போன்றன தொடர்பான ஆய்வுகளை மேற் கொள்ளல்.
7. வளத்தினை சிக்கனமாக பாவித்தல் தொடர்பான வழிமுறைகளை பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தல். உதாரணமாக மழை நீரினை சேமித்து பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் (Rain water harvesting Arrangements)
   i. சீமெந்தாலான தொட்டியினுள் மழை நீரை சேமித்தல் (Ferro cement tank system)
   ii. பிளாஸ்டிக்கிலான தொட்டிமுறை (plastic shell tank system)
8. அபிவிருத்தியடைந்த நாடுகளில் கையாளப்படும் சூழல் மாசுகட்டுப் பாட்டு முறைகளில் பொருத்தமான வற்றை அறிமுகப்படுத்தல்.

எனவே அபிவிருத்தி என்கின்ற பாதையில் நிச்சயமாக சனத்தொகை செறிவு அதிகரித்தல், வளப்பாவனை அதிகரித்தல், கைத்தொழில் நிறுவனங் களினுடைய கழிவகற்றல் செயற் பாடுகள், நகரக்கழிவகற்றல் செயற் பாட்டில் முகாமைத்துவம், விவசாய மற்றும் விவசாய கைத்தொழில் பிரதே சங்களில் சூழல் மாசடைதல் போன்ற சிக்கல்கள் நிறைந்த பிரச்சனைகளை பிரதேசம் தவிர்க்க முடியாத படி எதிர் நோக்கவேண்டி ஏற்படும். இதன்படி பேண்தகு அபிவிருத்தி (sustainable Development) என்ற எண்ணக் கருவி னுள் இவையும் உள்ளடங்குவதனால் இதற்கான ஆயத்தங்களையும் முன் னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் ஒரேநேரத்தில் கையாள்வதற்கான திட்டமிடல்கள் அவசியமாகின்றது.

## உசாத்துணைகள் - References


1. State of Environment Sri Lanka - 2001
2. Publications of central Environment Authority of Sri Lanka.
3. Water Resources research in Sri Lanka.
4. Economic Review Nov/ Dec. - 2001.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு – கிழக்கு பிரதேச அபிவிருத்தியில் விவசாயத்துறையின் பங்கு

# Role of Agriculture sector in North East Regional development

*Mr.Vaikunthanathan Piratheepan,*
*3rd Year (2003),*
*Economics special,*
*Department of economics*
*University of Jaffna.*

**அறிமுகம்**

வடக்கு கிழக்கு பிரதேசம் என்பது 2 மாகாணங்களை உள்ளடக்கிய பெரிய தொரு நிலப்பரப்பு ஆகும். வட மாகாணம், கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களையும் கிழக்கு மாகாணம் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய 3 மாவட்டங்களையும் உள்ளடக்கிய தனித்த ஒரு பகுதி. இது இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 28.3% நிலப்பரப்பை உள்ளடக்கியதுடன் ஏனைய மாகாணங்களை விட பௌதீக, பண்பாட்டு, பொருளாதார அம்சங்களில் தனித்துவமான சில பண்புகளைக் கொண்டுள்ளது.

வடக்கு கிழக்குப் பகுதிகள் விவசாயத்துறை சார்ந்த பொருளாதாரத்திலேயே தங்கியுள்ளன. அப்பகுதிகளின் வருமானத்தினை மட்டுமன்றி தொழில் வாய்ப்பைக் கூட பெற்றுத்தரும் துறையாக விவசாயத்துறை அமைந்துள்ளது. அப்பகுதிகளில் சிறிய சிறிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்ட போதும் அக்கைத்தொழில்கள் கூட விவசாயத்துறையுடன் தொடர்புடைய கைத்தொழில்களாகவே அமைந்துள்ளன. பழங்கள் பதனிடல், இனிப்புப் பண்ட உற்பத்தி, குளிர்பானம் தயாரித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். வடக்கு கிழக்கில் விவசாய உற்பத்தி கிராமிய விவசாயமாக காணப்படுகின்றது. இப்பிரதேசத்தின் கிராமங்கள் பொதுவாக விவசாயக் கிராமங்களையும், மீன்பிடிக் கிராமங்களையும், விவசாயம் கைத்தொழில் என்பவற்றின் கலப்புத் தன்மை கொண்ட கிராமங்களையும் கொண்டுள்ளன. இப்பகுதியில் விவசாயம் பொதுவாக வேளாண்மை உற்பத்தி, கடல் உணவு விலங்கு வேளாண்மை, உணவுப் பயிர்ச் செய்கை, பூங்கனிகள், சிறுதானியப் பயிர்ச் செய்கை, காட்டியல் என்பவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே வருமானத்தைப் பெற்றுத் தரும் பிரதான மூலகமாக விவசாயத் துறை அமைந்து இருப்பதாலும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி யில் விவசாயத்துறையின் பங்கு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்து வதனாலும் அதைப் பற்றி சுருக்கமாக ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**வேளாண்மை உற்பத்தி**

வேளாண்மை என்ற பகுதியில் நெற்பயிர்ச் செய்கை சிறுதானிய பயிர்ச்செய்கை, உப உணவு பயிர்ச் செய்கை, மரக்கறி வகைகள் அடங்கு கின்றன. வடக்கு கிழக்கில் இடம் பெறும் விவசாய உற்பத்தியை மகா போகம், சிறுபோகம் என 2 ஆக பிரித்து நோக்கலாம். வட-கிழக்கில் வாழும் பெரும்பாலான மக்களின் பிரதான உணவு நெல் அரிசிச் சோறு ஆகும். நெற்பயிர்ச் செய்கைக்கு நீர் அவசி யமாகும் எனவே மழைவீழ்ச்சி தவிர குளங்கள், கிணறுகள் போன்றன மூலமே நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருப்பதனைக் காண லாம். யாழ்குடா நாட்டிலே தரைமேற் பரப்பு சுண்ணக்கற் படையாக அமைந் திருப்பதால் மழை நீர், கீழ் வடிந்து சென்று தரைக்கீழ் நீராக அடிப்பாறை யில் தேக்கி நிற்கின்றது. நெற் பயிர் வளர்வதற்கு 21°C முதல் 32°C வரையான வெப்பநிலை வேண்டும். ஊழியத்தைப் பொறுத்தவரையில் நெற் செய்கைக்கு மனித உழைப்பு அதிகம் தேவைப்படும். உழுதல், சூடடித்தல் போன்ற முயற்சிகள் உழவு இயந்திரங் கள் மூலம் செய்யப்படக் கூடுமாயினும், நாற்று நடுதல், களை பறித்தல், அருவி வெட்டுதல் போன்ற முயற்சிகளுக்கு மனித உழைப்பே தேவைப்படு கின்றது. மேலும் நெற்செய்கையானது பாரம்பரிய முறைகளை பின்பற்றியும் நவீன முறைகளை பின்பற்றியும் செய்கை பண்ணப்படுகின்றது. பெரும்பாலும் மரபு ரீதியான முறையே மேற் கொள்ளப்படுகின்றது. இப்பிர தேசத்தில் நெல் இனம் பலவகையாக காணப்படுகின்றது. $IR_8$, $BG_H$, $H_4$, $M_I$ என்பனவே விதைக்கப்படுகின்ற அவ்வகை நெல் இனங்களாகும். நெல் ஆய்வு பிரதேச நிலப்பயன்பாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்தி லும் நெற்செய்கை செய்யப்படும் நிலம் மொத்த நிலப்பரப்பில் குறிப்பிட்ட அளவை வகிக்கின்றது.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 12.12% |
| கிளிநொச்சி | 21.82% |
| மன்னார் | 10% |
| வவுனியா | 10.18% |
| முல்லைத்தீவு | 6.78% |
| மட்டக்களப்பு | 25.6% |
| அம்பாறை | 12.6% |
| திருகோணமலை | 16.7% |

அடுத்து இப்பிரதேசத்தில் சிறு தானிய உபஉணவுப் பயிர்களை உள்ள டக்கிய வகையில் மேட்டு நிலச்செய் கையை நோக்கும்போது இதில் கிழங்கு வகையான உருளைக்கிழங்கு, மர வள்ளி, வற்றாளை ஆகியவற்றின் பெரும்பகுதி யாழ்ப்பாணத்தில் பயிர்ச் செய்யப்படுகின்றன. வாசனைப் பொருட்களும் சுவையூட்டும் பொருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுமாகிய வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்கள் யாழ்ப்பாணக் குடா நாட்டில் உலர் வலயத்தில் பெருமளவு உற்பத்தி செய்யப்படுகின்றன. சிறு தானியங்களான உழுந்து, நிலக்கடலை, குரக்கன், எள்ளு, கௌபீ, பயறு, சோளம் ஆகியனவும் இப்பகுதியில் பெருமளவு உற்பத்தி செய்யப்படுகின்றன.

### பூங்கனி மரக்கறிச் செய்கை

வட-கிழக்குப் பிரதேசத்தில் பூ மரச்செய்கை என்ற வகையில் குறிப்பிடக் கூடிய அளவில் வருமானம் தரும் நோக்கிலோ, கைத்தொழில் சார்பான நோக்கிலோ பெருமளவில், இல்லை எனக் கூறலாம். சர்க்கரைப் பூசனி, தக்காளி, முருங்கைக்காய், கப்பல், மொந்தன் வாழைக்காய், புடோலங்காய், பீர்க்கங்காய், ஆகிய உலர் வலயப் பிரதேசத்தில் சிறப்பாக விளையும் காய்கறி வகையாகும். இதனைவிட வெண்டைக்காய் பயிற்றங்காய், பசளி, கத்தரிக்காய், கீரை வகை ஆகியன முக்கியமானவை ஆகும். இவையும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன அடுத்து மலை நாட்டின் உற்பத்தியான கரட், பீற்றூட், லீக்ஸ், கோவா, அவரை போன்றனவும் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்றன இவை பெரும்பாலும் உள்ளூர் நுகர்விற்கே பயன்படுத்தப்படுகின்றன.

கனிமரங்கள் என்ற வகையில் பெருமளவு நிறுவன மயப்படுத்தப்பட்ட வகையில் இல்லாவிடினும் குறிப்பிடத்தக்களவு கனி மரங்கள் செய்கை பண்ணப்படுகின்றன. இவை நேரடியான குடும்ப நுகர்விற்கும் ஓரளவு பழப்பாகு, பழரசம் என்பவற்றின் உற்பத்திக்கும் பயன்படுத்தப்படுகின்றன. இப்பிரதேசத்தில் வாழைப் பழம், மாம்பழம், போன்றவற்றின் உற்பத்தி குறிப்பிடக்கூடியதாகும். அத்துடன் யாழ்ப்பாணத்தில் கொடி முந்திரிகை செய்கையும் சிறப்பாக குறிப்பிடத்தக்கது ஆகும். வடகிழக்கில் 2 மரங்களின் உற்பத்தி அண்ணளவாக (மெற்றிக்தொன்)

| மாவட்டம் | ஆண்டு | வாழை | மா |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 1992/93 | 471 | 507 |
| கிளிநொச்சி | 1992/93 | 414 | 290 |
| வவுனியா | 1992/93 | 262 | 340 |
| மன்னார் | 1992/93 | 84 | 153 |
| முல்லைத்தீவு | 1992/93 | 380 | .... |
| திருகோணமலை | 1992/93 | .... | .... |
| மட்டக்களப்பு | 1992/93 | 420 | .... |
| அம்பாறை | 1992/93 | .... | ... |

### விலங்கு வளர்ப்பு

பொதுப்படையாக நோக்கின் விலங்கு வேளாண்மையானது விலங்குகளை பாலுக்காக அல்லது இறைச்சிக்காக வளர்ப்பதனைக் கருதும். வடக்குக் கிழக்குப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் நிறுவனப்படுத்தப்பட்ட அல்லது பண்ணை அடிப்படையில் விலங்குகள் வளர்க்கப் படும். விலங்குகள் பெரும்பாலும் அடிப்படைத் தேவைக்காக அல்லது ஓரளவு இலாபம் பெறும் நோக்கில் வீட்டுத்துறையினராலேயே வளர்க்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றன. இங்கு வளர்க்கப்படும் கால்நடைகளாக மாடு, ஆடு போன்ற மிருகங்களும் கோழி போன்ற பறவை இனங்களும் வளர்க்கப்படுகின்றன. இவற்றினை சந்தைப்படுத்தும் போது குறைவான வருமானமே பெறப்படு கின்றது.

தற்போதைய சூழ்நிலைகளின் படி கால்நடை வளர்ப்புக்களிலே பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதனைக் காண லாம். இவற்றிற்கான உணவுகள். நோய்க்குரிய மருந்துகள், பராமரிப்புச் சீர்கேடுகள் என்பவற்றால் இவை பாதிப்படைவதால் உற்பத்தியின் அள வுகள் பாதிப்படைதலும், இவற்றின் உற்பத்திப் பொருட்களாக பால், இறைச்சி, முட்டை, தோல் போன் றவற்றை பழுதடையாமல் பாதுகாப்ப தற்கான வழிமுறைகள் இன்மையாலும் சந்தைப்படுத்தலில் உள்ள சீர்கேடு களாலும் மக்களின் நுகர்வு நாட்டத் திற்கு ஏற்ப வருமான மட்டம் இன்மை யானதாலும் இவற்றின் உற்பத்தி தொழில் ரீதியாக செயற்படாது இருக்கின்றது.

**மீன்பிடி**

இலங்கையின் இயற்கைச் செல் வங்களுள் மீன்வளமும் முக்கிய இடத் தைப் பெறுகின்றது. வடகிழக்குப் பிரதேசம் இவ்வளத்தைப் பெரும்பா லும் தன்னகத்தே கொண்டுள்ளது. வடகிழக்குப் பகுதியில் குறிப்பிடக் கூடியளவு கடல் உற்பத்திகளை வழங் கும் பிரதேசங்களாக யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருமலை, மட்டக்களப்பு ஆகியவை காணப்படு கின்றன. இவ்விடயங்கள் உயர் மீன் உற்பத்தியில் முக்கியமானவை ஆகும்.

இப்பிரதேசத்தில் மீன்பிடித்தல் நடவடிக்கை மரபு ரீதியான தொழில் நுட்பத்தையும், நவீன முறையான தொழில் நுட்பத்தையும் கொண்டு செயல்படுத்தப்படினும் கூடியளவு மரபு ரீதியான தொழில் நுட்பத்தையே பயன்படுத்துகின்றனர். மரபு ரீதியான தொழில் நுட்பமானது தோணி, வள்ளம், படகு, கட்டுமரம் என பலவகையான பாரம்பரிய முறையில் பலவிதமான வலைகள் பயன்படுத்தப்ப டுகின்றன. அவை பருத்தி நூலினா லோ, சணல்நூலினாலோ பின்னப்படு கின்றன. இப்பாரம்பரிய முறைகளுள் தூண்டிலிட்டு மீன் பிடித்தல், கரை வலை மீன் பிடித்தல் முக்கியமானவை. நவீன முறையான மீனவத் தொழிலில் இழு கப்பல்களும் இயந்திரப் படகு களும் பயன்படுத்தப்படுகின்றன. இதில் இயந்திரப் படகுகள் திரளாக மீன் உள்ள இடங்களை நாடிச் சென்று அவற்றைப் பிடிப்பதற்கு பயன்படுத் தப்படுகின்றன.

இங்கு ஆழ்கடல் மீன்பிடித்தல் குறைவாகவே காணப்படுகின்றது. பெரும்பாலும் மீன் பிடித்தொழிலா ளர்கள் இப்பிரதேசத்தில் வறியவர் களாகவும் வள்ளங்களை வாடகைக்கு அமர்த்தி தொழில் செய்பவர்களாயும் உள்ளனர். அத்துடன் ஆண்பாலாரே பெரும்பாலும் மீன் பிடித்தொழிலில் ஈடுபடுபவர்களாக காணப்படுகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனர். சிறியளவில் காணப்படுகின்ற பதப்படுத்தல், கருவாடு தயாரித்தல் போன்ற தொழில்களிலும் மற்றும் பிடிக்கப்பட்ட மீன்களை விற்பனை செய்வதிலும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஈடுபடுகின்றனர். உவர் மீனவக் கைத்தொழில் மூலம் இறால், சிங்கிறால், நண்டு, கணவாய் போன்ற பெறுமதி மிக்க மீன் இனங்கள் பெறக்கூடியதாக காணப்படுகின்றன. இவ் வடகிழக்குப் பிரதேசமே இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகின்ற பதப்படுத்தப்பட்ட இறால், கணவாய், சிங்கிறால், கடலட்டை போன்றவற்றை வழங்கி வருகின்றது. அத்துடன் இவ் வடகிழக்குப் பாகத்தில் ஆழமான பகுதிகளுக்குச் சென்று மீன்பிடிப்பதற்கு வள்ளங்களை உபயோகிக்கின்றனர். யாழ்ப்பாணத்தீபகற்பத்தை அடுத்துள்ள கரையோரங்களில் சிப்பிப் படிவுகள் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மண்டைதீவின் கரையோர தரிசு நிலங்களில் கிடந்த சிப்பிப் படிவுகள் எடுக்கப்பட்டு கோழித்தீனிக்காகவும் சுண்ணாம்பிற்காகவும் உபயோகிக்கப்படுகின்றன. இதனை விட மன்னார் வளைகுடாக் கரையில் பெருமளவு முத்துச் சிப்பிகள் பெறப்படுகின்றன.

(மீன்பிடித்தொழிலை வெகு சுலபமாகவும், விரைவாகவும் வடகிழக்கு பிரதேசத்தில் முன்னேற்றக் கூடிய தொழிலாக இது காணப்படுகின்றது. நவீன இயந்திரங்களையும், சாதனங்களையும் உபயோகிக்க வேண்டும்) ஆராய்ச்சி நிலையங்களை உருவாக்கம் செய்யலாம். அத்துடன் பயிற்சி கல்லூரிகளை நிறுவி தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கல் என்பனவற்றின் மூலமே முன்னேற்றுவிக்கலாம். இப்பிரதேசங்களின் உவர்நீர் மீன் உற்பத்தி பற்றிய விபரமும் மீனவத்தொழிலில் ஈடுபடுவோரின் அளவையும் நோக்குவோம்.

(அண்ணளவாக கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி மெற்றிக் தொன்னில்)

| மாவட்டம் | மொத்தமீன் உ.தி (1990) | மீனவத்தொழிலில் ஈடுபடுவோர் (1999) |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 31369 | 7614 |
| மன்னார் | 7408 | 4593 |
| மட்டக்களப்பு | .... | 15137 |
| திருகோணமலை | 9287 | 9748 |
| முல்லைத்தீவு | 3296 | ... |

**காட்டியல்**

காடுகள் என்ற ரீதியிலும் அவை சார்ந்த உற்பத்திகள் என்ற ரீதியிலும் பெருமளவான குறிப்பிடக் கூடிய சந்தை நோக்கிய உற்பத்திகள் காணப்படவில்லை. வரண்ட பிரதேச காடுகளில் கருங்காலி, முதிரை, பாலை போன்றன சிறிதளவான அளவும், முட்காடுகளில் கள்ளி, நாகதாளி போன்றனவும் வடகிழக்கு பிரதேசத்தில் சிறிதளவு காணப்படுகின்றன. அத்துடன் இங்கு சிறிதளவான மூலிகைகளும் வீட்டுத்துறையின் பெருமளவான எரிபொருள் தேவையான விறகும் முக்கியம் பெறுவனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏனையவை**

**வீட்டுத்தோட்டம்**

வீட்டுத்தோட்டத்தில் இலை வகை, கிழங்கு வகை பயிற்றை, அவரை வகை போன்றவற்றுடன் முயல், கோழி, ஆடு, மாடு, பன்றி, நன்னீர் மீன், பழவகை போன்றவை வளர்க்கப் படுகின்றன. இவ்வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையானது இப் போது வதிவிட வேளாண்மையென பரவலாக எல்லாத் தொழில்களையும் உள்ளடக்கி யதாக அமைகின்றது. வீட்டுத்தோட்டம் சுயதேவை பூர்த்தியினையே முக்கிய நோக்காகக் கொண்டது. சிலர் அதை வர்த்தக நோக்குடனும் செயற்படுத்து கின்றார்கள். பொதுவாக வீட்டுத் தோட்டத்தில் இடம் பெறும் பயிர்களா வன.

1) பழவகை - பப்பாசி, வாழை, எலுமிச்சை, தோடை, மாதுளை.
2) இலை வகை - அகத்தி, பசளி, முசுட்டை, முருங்கை.
3) சுவைச்சரக்கு - மிளகாய், வெங்கா யம், இஞ்சி
4) கிழங்குவகை - மரவள்ளி, கருணை, இராசவள்ளி, வற்றா ளை.
5) காய்வகை - கத்தரி, வெண்டி, பாகல், தக்காளி, புடோல், முதலி யனவாகும்.

இவ் வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் போது பல பிரச்சனைகள் காணப்படுவதால் அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் நாம் செயற்பட வேண்டும். அதாவது விலங்குகள், பறவைகள் என்பவற்றில் இருந்து பயிரை பாதுகாக்க வேண்டும். உரிய காலத்தில் கிருமிநாசினி பயன் பாடு, போன்ற நடவடிக்கையை ஒழுங்காக செய்வதன் மூலம் வீட்டுத் தோட்ட உற்பத்தியை அபிவிருத்தி செய்யமுடியும்.

**தென்னை, பனை**

வடக்கு கிழக்கு பிரதேசத்தில் தென்னை, பனை மரங்கள் உற்பத்தி கள் குறிப்பிடக் கூடியளவு பங்கை வகிக்கின்றன. அதாவது வர்த்தகப் பயிராகிய பனையும் பெருந்தோட்ட பயிராகிய தென்னையும் ஆகும் இவ் உற்பத்திகள் பெரியளவில் நிறுவனப் படுத்தப்படாவிடினும் சிறியளவு நிறுவனப்படுத்தப்பட்டுள்ளன. இவை சிறியளவான தோப்புக்களாக சிதறியும் சில இடங்களில் செறிந்தும் காணப்ப டுகின்றன. ஒப்பீட்டு ரீதியில் இப்பிர தேசத்தில் தென்னையிலும் பார்க்க பனைமரங்கள் எண்ணிக்கையில் அதிக மானவை ஆகும். மொத்த நிலப்பரப் பில் குறிப்பிடக்கூடியளவு அதாவது 10, 955, 000 ஏக்கர் விஸ்தீரணத்தில் தென்னை பனைமரங்கள் காணப்படு கின்றன (இராணுவ நடவடிக்கைக்கு முதல்)

தேங்காயின் நேரடி நுகர்வு தவிர தென்னை சார்ந்த தும்பு, கயிறு, மது போன்ற கைத்தொழில் ரீதியான உற்பத்திகளும் இதனைவிட கொப் பறா, தேங்காய் எண்ணெய், தேங்காய் துருவல் பிண்ணாக்குகள், வினாகிரி, சிரட்டை, என்பனவும் உற்பத்தி செய்ப் படுகின்றன பனையிலிருந்து பனம் பழம், பனாட்டு, பனங்கிழங்கு என நேரடி மரப்பாலனையும் மது உட்பட அது சார்ந்த உற்பத்திகளும் காணப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. தென்னை, பனை உற்பத்திகள் இப்பகுதியில் உட்பகுதி நுகர்விற்கே பெருமளவில் பயன்படுகின்றன. வெளிச்சந்தை நோக்கிய உற்பத்திகள் பெருமளவில் காணப்படவில்லை. (இப்பிரதேசத்தில் தென்னை, பனை பற்றிய விபரம் அண்ணளவாக இராணுவ நடவடிக்கைக்கு முதல்)

| மாவட்டம் | தென்னைநிலப்பரப்பு ஏக்கர் | பனை நிலப்பரப்பு ஏக்கர் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 10031 | 40000 |
| மன்னார் | 1181 | 15000 |
| வவுனியா | 425 | 50 |
| முல்லைத்தீவு | 2206 | 5000 |
| கிளிநொச்சி | .... | .... |
| திருகோணமலை | 1808 | 250 |
| மட்டக்களப்பு | 4092 | 50 |
| அம்பாறை | 3888 | .... |

யுத்த காலத்தில் தென்னை, பனை மரங்கள் அழிக்கப்பட்டதனால் அவை இன்று வெட்ட வெளியாக காட்சி தருகின்றன. ஏ.9 வீதி பயணத்திற்கு அனுமதிக்கப்பட்ட பின்னர் பயணம் செய்யும் மார்க்கத்தில் தென்னை மரங்களுக்கு ஏற்பட்ட பேரழிவை அனைவரும் பார்க்கலாம். தென்னை மரநடுகை ஆரம்பிக்கப்படல் வேண்டும் இது விடயத்தில் தென்னை அபிவிருத்திச் சபை கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

யுத்த கால கட்டத்தில் பாதுகாப்பு அரண்கள், முகாம்கள் அமைப்பதை சாட்டாக வைத்து சீருடையினர் கண்டபடி பனை மரங்களைத் தறிக்கத் தொடங்கினர். இதனால் அச்சமடைந்த மக்கள் தமது மீதியாகவுள்ள மரங்களையும், அறாவிலைக்கு விற்றதை அக்காலத்தில் காணமுடிந்தது. சமாதானம் மலர்ந்த பின்னர் புதிதாக வீடுகள் நிர்மாணிப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. தற்சமயம் பனை மரம் தறிப்பதற்கு போதிய கட்டுப்பாடுகளும் இல்லை. அத்துடன் மரமீள் நடுகை குறித்து பெரும் கவனம் செலுத்தியதாகவும் தெரியவில்லை எனவே எதிர்கால சந்ததியின் நன்மை கருதி நாம் பனை வளத்தை பாதுகாப்பதோடு புதிதாக பனை மர நடுகையை மேற்கொள்ள வேண்டும்.

**பரிந்துரைகள்**

எமது பாரம்பரிய பிரதேசத்தில் விவசாயதிட்டமிடல் பொருளாதார அபிவிருத்திக்கு இன்றியமையாதது. இவற்றை திட்டமிடுவதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தலாம். இன்றைய விவசாய அமைப்பு முறையில் பல பாரிய குறைபாடுகள் காணப்படுகின்றன. சிற்றுடமை விவசாயிகள் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகின்றனர்.

1) விவசாயதிட்டங்களை ஒழுங்காக நெறிப்படுத்தாமை.
2) காலநிலையில் நிச்சயம் அற்ற தன்மை. காலநிலையில் நிச்சயமற்ற தன்மையினால் பயிர் அழிவு உற்பத்திக் குறைவு, கடன் பழு ஆகியன விவசாயிகளை பாதிக்கின்றன.
3) நிறுவனரீதியில் காணப்படும் ஊழல்களும் மோசடிகளும்.
4) நீர்ப்பாசன திட்டங்களின் சிக்கலான அமைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) திட்டமிட்ட முகாமைத்துவமின்மை.

6) செறிவான பயிர்ச்செய்கை முறைகளை மேற்கொள்ளாமை.

7) விவசாயிகளுக்கு போதிய கல்வியறிவு இன்மை.

8) மண்வள ஆய்வுகள் பற்றி அறியாமை.

9) உள்நாட்டு யுத்தத்தால் சந்தைப்படுத்தல் போக்குவரத்து வசதியின்மை.

10) விலைத் தளம்பல் என்பன ஆகும்.

கிராமிய விவசாயத்துறையில் இத்தகைய குறைபாடுகள் காணப்படுவது நமது பொருளாதாரத்தை பெரிதும் பாதித்து உள்ளது. எனவே இக்குறைபாடுகளை நீக்குவதற்கு பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும்.

1) நிலமற்ற விவசாயிகளை பாதுகாப்பதற்கு நில சீர்த்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2) செறிவான பயிர்ச்செய்கை முறைகளை மேற்கொள்வதற்காக கலப்புப் பிறப்பாக்கம் செய்த நல்ல இன வித்துக்களை அறிமுகம் செய்தல்.

3) காப்புறுதி திட்டங்களை மேற்கொள்ளல்.

4) நிறுவன ரீதியான துறைகள் மூலம் கடன் வழங்கல்.

5) விவசாயிகளின் கல்வி அறிவை பெருக்குதல்.

6) சந்தைப்படுத்தல் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல்.

7) உத்தரவாத விலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

8) பாடசாலையில் விவசாயக் கல்வியை கட்டாயமாக்குதலுடன் பல் கலைக்கழகங்கள் மூலம் விவசாய ஆய்வுகளை மேற்கொள்ளல்

9) காட்டுவளமும் பொருளாதாரத்தில் முக்கியமானது என அறியவைத்தல்.

10) இரசாயன முறை மூலம் விதை பதனிடுதல் பயிர் நோய்களைப் பற்றி ஆய்வு செய்தல்.

11) கடல்வளம் புரதச் சத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றாக இருப்பதால் சமூக ரீதியில் உள்ள ஏற்றத் தாழ்வை நீக்கி கடல் வளத்தின் முக்கியத்துவத்தை உணரச் செய்தல்.

எனவே மேற்கூறப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளையும் ஆலோசனைகளையும் கவனித்து சரியான முறையில் நடவடிக்கைகள் இன்றைய கால கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டால் வடக்கு கிழக்கு பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்துறை குறிப்பிடத்தக்க பங்கை பெறும் என்பது ஐயம் இல்லை.

## உசாத்துணை நூல்கள்


1) Kadal Ozai, Fisheries Diploma students union, university of Jaffna.
2) பொருளியல் நோக்கு - 1997
3) பொருளியல் நோக்கு - 1998
4) யாழ்ப்பாணப் புவியியலாளன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு மாகாண மீன் உற்பத்தியும் சந்தைப்படுத்தலும்

# Fish production and Marketing in North and East province

*Kanagarathinam Kamalathasan*

*3rd Year(2003*
*Economics (Special),*
*Department of Economics,*
*University of Jaffna.*

## அறிமுகம்

பூமியிலே நீரானது 3/4 பகுதியாகக் காணப்படுகின்றது. இதில் கடல் என்பது இயற்கையான அல்லது சுயமான அமைப்பாகும். கடற்கரைக்கும் ஆழமான பகுதிக்கும் இடையே விசேட புவியியல் கட்டமைப்பு உண்டு. இக் கட்டமைப்புக்கு உள்ளே பல பொருளாதார சிறப்பியல்புகள் காணப்படுகின்றன. மனிதனின் வாழ்வாதாரப் பொருளாதாரத் துக்கு கடல் வளம் இன்றியமையாத ஒன்றா கும். உதாரணமாக மருத்துவ நோக்கத் திற்கான அல்காக்கள், தாவரங்கள், விலங்கு கள் போன்ற மூலிகைப் பொருட்களை பெறுகின்ற ஊற்றாகவும் இவ்வாறு உயிருள்ள, உயிரற்றவை உள்ளிட்ட அனைத்து வளங்களும் காணப்படுகின்றன. கடல் வளமானது பிரதான புரத உணவாகவும் கடற்தொழில் துறையில் ஈடுபடுபவர்களிற்கு பெரும் பொருளாதார களமாகவும் மனிதனுக்கு உணவு வழங்குகின்ற வயல்களாகவும் விளங்கு கின்றன. முழுமையாக நோக்கும் போது கரையோரப் பிரதேசங்களிலும் தீவுப் பிரதேசத்திலும் கடல் வளத்தையே தமது ஜீவனோபாய தொழிலாகக் கொண்டு உள்ள 200 கோடிக்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். (பொருளியல் நோக்கு 1997) குறிப்பாக தென் கிழக்காசியாவில் மட்டும் 50 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கடல் வளத்தை நம்பி தமது ஜீவனோபாயத்தை நடத்துகின்றனர் மீன் உற்பத்தியானது அப்பிராந்தி யத்தில் 660 கோடி டொலரினை தேசிய வருமானத்தில் தனது பங்களிப்பினை வழங்குகின்றது (டி. சில்வா 1997)

கடல் வளத்தின் சிறப்பியல்பினை எடுத்து நோக்குவோமாயின் உயிரியல் சார்ந்த வளங்களில் இதுவும் ஒன்றா கும். மேலும் புதுப்பிக்கக் கூடிய வளங் கள் ஆகவும் மக்களின் வேலைவாய்ப்பு வழங்கும் மூலங்களில் இதுவும் ஒன் றாக காணப்படுகின்றது. ஒரு நாட்டின் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கினை வகிப்பதுடன் நிலைத்து நிற்கும் பொருளாதாரத்தின் அடித்தள மாகவும் காணப்படுகின்றமையினால் சிறப்புப் பெறுகின்றது. சிறப்பினைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு மீன் உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் எனும் விடயத்தினை நோக்குவோம்.

இவ் விடயத்திற்குள் மீன் உற்பத்தியும் அதன் போக்கும் சந்தைப்படுத்தலும் அது எதிர் நோக்கும் பிரச்சினைகளும் அதனை தீர்க்கும் வழிகளும் எனும் விடயங்களை விரிவாக பின்வருமாறு நோக்கலாம்.

**இலங்கையின் மீனவர்களில் வடக்குகிழக்கு மீனவர்களின் பங்கு**

நாரா (Nara) அறிக்கையின் பிர காரம் இலங்கைத்தீவின் கரையோர நீளம் ஏறக்குறைய 1739. 3km ஆகும். இதில் வடக்கு கிழக்கு கடலின் கரையோர நீளம் 1161.6 km ஆகும். இலங்கையின் உவர் நீர் ஏரிகள் 158016. (hectare) ஆகும். இதில் வடக்கு கிழக்கு உவர்நீர் ஏரிகள் 109736 (hectare) ஆக காணப்படுகின்றது. இவ்வாறு வடக்கு கிழக்கு கரையோர நீளம் மற்றும் உவர் நீர் ஏரிகள் என்பன வற்றினை வரையறுக்கலாம்.

மீன் உற்பத்தியினை கூறுவதற்கு முன்னதாக மீனவர்களின் குடித்தொகை யினை குறிப்பிடவேண்டும். இதற்கு இசைவாக வடக்கு கிழக்கு கரையோர மீனவர்களின் எண்ணிக்கையினை சுட்டிக் காட்டக் கூடியதாக உள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக இக் கரையோரப் பகுதியில் மக்கள் வாழ்வதற்கான புவியியல் காரணிகள் சாத்தியமானதாகக் காணப்படுகின்றது. 1999 ஆண்டிற்கான மதிப்பீட்டின் படி மட்டக்களப்புப் பகுதியில் அதிகூடுத லான குடும்பங்கள் வாழ்கின்றார்கள். அதாவது மாவட்டரீதியாக நோக்கும் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் 13762 மீனவக் குடும்பங்களும் அதில் மீனவத்தொழிலில் ஈடுபடுவோரின் அளவு 15137 ஆகவும் உள்ளது. அதாவது வடக்குகிழக்கில் வாழும் மீனவகுடும்பங்களின் இவ் மாவட்டம் 29% பங்கினை வகிக்கின்றது. மாறாக முல்லைத்தீவில் மீனவ குடும்பங்களின் எண்ணிக்கை 864 ஆகவும் மீனவ வேலையில் ஈடுபடுவோர் 950 பேரும் காணப்படுகின்றனர். இவ் இருமாகாணங் களின் மீனவசனத்தொகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மீனவின்பங்கு 18% குறைவானதாக காணப்படுகின்றது. இதனை அட்டவணை ரீதியாக பின்வருமாறு நோக்கலாம்.

| Fisheries | Fishing Household | Active Fishing | Populetion Fishing Household |
|---|---|---|---|
| Kalmunai | 13265 | 14592 | 59693 |
| Batticaloa | 13762 | 15137 | 61929 |
| Trincomalee | 8123 | 9748 | 36552 |
| Jaffna | 6922 | 614 | 31149 |
| Manner | 4175 | 4593 | 18788 |
| Total | 208111 | 52634 | 208111 |

Source:- Statistics unit. - ministry of the fisheries and Aquatic Resources Development



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காட்டப்பட்ட அட்டவணையின் படி ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பி டும் போது இவ் இரு மாகாணங்களில் கடல் தொழில் செய்வோர் எண்ணிக்கை குறைவாக காணப்படுகின்றது. அதாவது கடல் தொழிலில் மொத்தக் குடும்பங் களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது 49.9% ஆனோர் இவ் இரு மாகாணங்களில் இருந்து பங்குபற்றுகின்றார்கள். இவ்வாறு இவ்இரு மாகாணங்களிலும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோர் எண்ணிக்கை குறைவடைவதற்கு பின்வருவனவற்றை காரணமாகக் குறிப்பிடலாம். கடந்த காலங்களில் ஏற்பட்ட கொடூரமான யுத்தமாகும். இதனால் கரையோர மக்கள் பாதுகாப்பு நோக்குடன் அன்னிய நாடுகளிற்கும் அயல் பிரதேசங்களிற்கும் புலம் பெயர்ந்து வாழ்கின்றார்கள். ஆனால் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகின்ற போது இவ் இரு மாகாணங்களிலும் மீன் வளம் கூடுதலாக காணப்படுகின்றது. இதற்குக் காரணம் கடலின் இயற்கையான புவியியல் பாங்காகும்.

உதாரணமாக தென் மேற்பருவக் காற்று மற்றும் வடகீழ் பருவக்காற்று காரணமாக இவ் வடகீழ் மாகாணத்தில் மீனவர்களின் பாதுகாப்பு இயல்பான சூழல் என்பன சாத்தியமாகக் காணப் படுகின்றன இதன் காரணமாகத்தான் அன்னியர்கள் இப்பிரதேச மீன் வளங்களைச் சூறையாடிச் செல்கிறார் கள் இப்பிரதேசத்தினைப் பொறுத்த வரையில் அன்னியர் சூறையாடல் என்பது முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகக் காணப்படும்.

**1) மீன் உற்பத்தியும் அதன் போக்கும்.**

உள்நாட்டில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக இம் மாகாணங்களில் மீன் உற்பத்தி காலரீதியாக தளம்பல டைந்து செல்கின்றது. வடக்கு - கிழக்கு மீன் உற்பத்தியின் போக்கினை மூன்று கட்டங்களாக நோக்கலாம் முதலாவ தாக சுதந்திரத்துக்கு முற்பட்ட காலம் முதல் 1957ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மீன் உற்பத்தி பொது வாக வளர்ச்சியடைந்து செல்கின்றது. இரண்டாம்கட்டத்தினை நோக்கும்போது 1960இற்கும் 1983ஆம் ஆண்டிற்கு இடைப் பட்ட காலப்பகுதியாகும். இக்காலப் பகுதியில் மீன் உற்பத்தியில் விரை வான வளர்ச்சி ஏற்பட்டது. மூன்றாவது கட்டத்தில் 1984 - இன்று வரையுள்ள காலத்தில் உற்பத்தி தளம்பல் நிலை ஏற்பட்டு வந்தகாலமாகும்.


**கட்டம் I**

இக்காலப் பகுதியில் மக்கள் இலாப நோக்கம் இன்றி சுயதேவை யினை பூர்த்தி செய்வதனை நோக்க மாகக் கொண்டுள்ளனர். மீன் பிடி முறைகள் உபகரணங்கள் என்பன மரபுரீதியானதாகக் காணப்பட்டது. இக்காலப்பகுதியில் இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியானது 50,000 மெற்றிக் தொன்னுக்குக் குறைவாகவே காணப்பட்டது. குறிப்பாக 1957 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58584 தொன்கிடைத்ததாக அறிக்கைகள் கூறுகின்றன. இதே போன்று. 1951 ஆம் ஆண்டு இலங்கையின் கரையோர மீன் உற்பத்தி 35653 மெற்றிக் தொன் ஆகக்காணப்பட்டது. இதில் வடக்கு கிழக்கில் கரையோர மீன் உற்பத்தி 21233 மெற்றிக்தொன் ஆகவும் காணப்பட்டது. அதாவது கரையோர மொத்த உற்பத்தியில் வடக்கு கிழக்கு கரையோரப் பங்கு59.5% ஆக காணப்பட்டது. எனினும் 60களில் மொத்த கரையோர மீன் உற்பத்தி 53876 மெற்றிக் தொன் ஆகவும் இதில் வடக்கு கிழக்கு 34698 மெற்றித் தொன் அளவினை பங்களிப்புச் செய்தது. அதாவது கரையோர உற்பத்தியில் 64.3% வடக்குகிழக்கு கரையோர மீன் உற்பத்தியின் அளவாகும். இதனை பின்வரும் வரைபடம் மூலம் காட்டலாம்.




வரைபடத்தின் படி நோக்கும் போது மீனுற்பத்தி மெதுவாக அதிகரித்துச் சென்றுள்ளது. இவ்வாறு குறைந்த வளர்ச்சியுடன் அதிகரித்து செல்லு வதற்கான காரணங்களாக மரபு வழியில் அமைந்த இயந்திரம் பூட்டப் படாத சிறிய வள்ளங்கள் கட்டு மரங்கள் உதவியுடன் கரைவலை, வீச்சுவலை, கட்டுவலை போன்ற வலைகள் மற்றும் கைத்தூண்டில்கள் போற்றவை மீன் பிடியில் ஈடுபட்டமைக்கு காரணமாக அமைந்தன மேலும் கரையோரத்தில் சிறிய பரப்புக்களிலேயே மீன்பிடி நடைபெற்றது. முக்கியமாக கரை வலை மூலமே இலங்கை மொத்த உற்பத்தியில் 40% பெறப்பட்டது. இவ்வாறு மீனுற்பத்தி முறைகளிலும் பதனிடல் முறையிலும் மரபு வழி முறை பின்பற்றப்பட்டு வந்தமையினாலும் படகுகளின் எண்ணிக்கை மிகக்குறைவாகக் காணப்பட்டமையினாலும் உற்பத்தி மிக மெதுவான வளர்ச்சியினைக் கொண்டதாகக் காணப்பட்டது.

**கட்டம் II 1960 - 1984 இடைப்பட்ட காலம்.**

இக் கால கட்டத்தில் கரையோர மீன் உற்பத்தி விரைவாக வளர்ச்சியடைந்து சென்றுள்ளது. இத் தீடீர் வளர்ச்சிக்கு பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம். நவீன இயந்திரம் பயன்படுத்தப்பட்டமை. குறிப்பாக இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகள் பயன்படுத்தப்பட்டமை. மேலும் உள்ளிளை இயந்திரப் படகுகள் (IBM) அறிமுகப்படுத்தப்பட்டமை. மற்றும் சிந்தட்புக் நூலினையிளை வலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகப்படுத்தியமை குளிரூட்டல் வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தமை. நிறுவனரீதியான தொழிற்சாலைகள் நிறுவப்பட்டமை. சந்தைப்படுத்தல் வாய்ப்பு போன்றவற்றினால் இக்காலத்தில் மீன் உற்பத்தி வளர்ச்சியடைந்தமையாகும்.

மேலும் 1960இல் மொத்த கரையோர உற்பத்தியில் 64.3% வடக்கு கிழக்கு மீனுற்பத்தி பங்களிப்பினைச் செய்தது 1975 இல் மொத்தக் கரையோர உற்பத்தியில் 49% வடக்கு கிழக்கு உற்பத்தியின் வீதமாகவும் காணப்படுகிறது. 1977 ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த கரையோர மீன் உற்பத்தி 125386 மெற்றித் தொன். இதில் வடக்கு கிழக்கு கரையோர மீன் உற்பத்தி 66459 மெற்றிக் தொன் அளவாக உள்ளது.

**இக் கால கட்டத்தின் மீன் உற்பத்தியின் போக்கினை வரைபடம் ஊடாக காட்டலாம்.**

| ஆண்டு | உற்பத்தி மெற்றித் தொன் |
|---|---|
| 60 | 34698 |
| 75 | 55882 |
| 77 | 66459 |
| 78 | 72423 |
| 84 | 77745 |



வரைபடத்தின் படி உற்பத்திப் போக்கினை நோக்கும் போது 1960ஆம் ஆண்டில் இலங்கையின் வடகிழக்கு மாகாணம் கரையோர மீனுற்பத்தியில் 64.3% வீதமாகவும் வடமேற்கு மாகாணம் மீனுற்பத்தியில் 20.1% வீதமாகவும். தென்மாகாணம் மீனுற்பத்தியின் 8.9% வீதமாகவும் மேற்கு மாகாணம் 6.6% வீதமாகவும் பங்களிப்பினைச் செய்துள்ளது. வடமாகாணம் 44.5% வீதமான உயர்ந்தளவு பங்களிப்பினைச் செய்து உள்ளது.

1975ஆண்டினை எடுத்து நோக்கும் போது வடக்குகிழக்கு மாகாணம் மீன் உற்பத்தியில் 49%மாகவும், வடமேற்கு மாகாணம் மீனுற்பத்தியில் 30% வீதமாகவும் தென்மாகாணம் மீனுற்பதியில் 13.4% வீதமாகவும் மேற்கு மாகாணம் உற்பத்தியில் 7.3% வீதமாகவும் பங்களிப்பினைச் செய்து உள்ளது. வடமாகாணம் 35.5% கூடுதலான பங்களிப்பினை வழங்குகின்றது.

1977 ஆண்டில் வடகீழ்மாகாண மீனுற்பத்தியானது 73.9% பங்களிப்பினை செய்து உள்ளது. வட மேற்கு மாகாணம் மீனுற்பத்தியில் 13.3% வீதமாகவும் தென்மாகாணம் மீனுற்பத்தியில் 13.8%மாகவும் மேற்கு மாகாணம் 19%மாகவும், பங்களிப்பினைச் செய்து உள்ளது. வடக்கு மாகாணம் மட்டும் 57.2% வீதபங்களிப்பினைச் செய்து உள்ளது.

1987ம் ஆண்டினை நோக்குவோமாயின் வடகீழ்மாகாண மீன் உற்பத்தியானது 53.7% ஆகவும், வடமேற்கு மாகாணம் 13% ஆகவும், தென்மாகாணம் மீன் உற்பத்தியில் 15.5% ஆகவும், மேற்குமாகாணம் மீன் உற்பத்தியில் 17.3 ஆகவும் பங்களிப்புச் செய்துள்ளது. மேலே கூறப்பட்டது போன்று வடக்கு மாகாணம் 36.3% பங்களிப்பினைச் செய்துள்ளது.

1984 ஆண்டினை எடுத்துக் கொள்வோமாயின் வடகீழ் மாகாணம் மீனுற்பத்தியில் 53.1% வீதமாகவும். வடமேற்கு மாகாணம் மீனுற்பத்தியில் 24.7% வீதமாகவும் தென்மாகாணம் 10.8% வீதமாகவும், மேற்கு மாகாணம் மீனுற்பத்தியில் 11.2% வீதமாகவும் பங்களிப்பு செய்து உள்ளது. இதிலும் வடமாகாணம் 32.3% கூடுதலான பங்கினை வகித்துள்ளது.

இரண்டாம் காலகட்டத்தினை தொகுத்து நோக்கும் போது பல்வேறு துறைரீதியாக வளர்ச்சியடைந்த போதும் கூட அரசு எதிர்பார்த்த இலக்கினை அடைந்து கொள்ள முடியவில்லை. காரணம் 1983இல் இலங்கையில் வடக்கு கிழக்கில் ஏற்பட்ட இனக்கலவரத்தாலும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இராணுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளாலும் வடக்கு கிழக்கு கரையோர மீனுற்பத்தி வீழ்ச்சிய டைந்தது.


**மூன்றாவது கட்டம் 1984 - இன்றுவரையான காலப்பகுதி**

இக் காலப்பகுதியில் மீனுற்பத்தி யானது ஒரு தளம்பல் நிலையினைக் கண்டுள்ளது. இலங்கையில் தீவிர மடைந்துள்ள இனப்பிரச்சனை காரண மாகவும் வடக்கு கிழக்கு பகுதியில் தொடர்ந்து யுத்த நெருக்கடிகளின் விளைவாகவும் மீனுற்பத்தி தளம்பல் அடைந்து சென்றுள்ளது. 1983இல் ஏற்பட்ட இனக் கலவரம் காரணமாக மீனுற்பத்தியானது 1984 ஆம் ஆண்டில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டது. இதற்கான காரணம் வடக்குகிழக்கு பகுதியிலேற் பட்ட இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக அப்பகுதி மீனவர்கள் தமது மீன்பிடி உபகரணங்களை இழந்த நிலையில் அகதிகளாக இடம் பெயர்ந்து சென்றமையினாலும் அரசு விதித்த கடல் வலயச் சட்டம் மீன்பிடி தடைகள் இயந்திர பாவனை தடை பொருளாதாரத் தடை போக்கு வரத்துத் தடை போதிய சந்தை வாய்ப்பின்மை எரிபொருட்கள் மீதானதடையும் அதன்விலையில் உயர்வு போன்ற காரணங்களினால் மீனுற்பத்தி வீழ்ச்சி யடைந்தது. குறிப்பாக யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, இயல்பாக கிடைத்த மீனுற்பத்தி மோசமாக வீழ்ச்சியடைந்து உள்ளது. 1984 ஆண்டு 77745 மெற்றித்தொன், ஆக இருந்த மீனுற்பத்தியானது 1990ஆம் ஆண்டில் 38175 மெற்றிக் தொன் ஆக வீழ்ச்சியடைந்து உள்ளது. 1994ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கு கரையோர மீன் உற்பத்தி 45235 (மெற்றிக் தொன்) ஆக காணப்பட்டது. 1995 இல் 25676 மெற்றிக்தொன் ஆக வீழ்சியடைந்தது. 1998இல் 30400 மெற்றித்தொன் ஆகவும் காணப்பட் டது. 2000 ஆண்டில் மீனுற்பத்தியினது 43710 மெற்றிக் தொன் ஆகவும் காணப்படுகின்றது. 2002 ஆண்டு 84440 மெற்றிக் தொன் ஆக வளர்ச்சியடைந்து உள்ளது. இதற் கான காரணத்தினை நோக்குவோமா யின் "சமாதான ஒப்பந்தம் கைச்சா திடப்பட்டபின்னர் மீனுற்பத்தி சற்று உயர்வாக காணப்படுகின்றது. இப்பிரதேசத் தில் இயல்பு வாழ்க்கை ஏற்படும் போது மீனுற்பத்தி அதிகரிக்கும் இதனூடாக பொருளாதார வளர்சியினை ஏற்படுத்த முடியும். இதனை வரைபட ரீதியாக நோக்கலாம்.

| ஆண்டு | உற்பத்தி அளவு (மொ.தொ) |
|---|---|
| 1984 | 34698 |
| 1990 | 38175 |
| 1994 | 45235 |
| 1995 | 25676 |
| 1996 | 6599 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைபடத்தில் காட்டியவாறு உற்பத்தி போக்கினை நோக்கும் போது இலங்கையில் கரையோர உற்பத்தியானது வடகீழ் மாகாணம் 1990 ஆம் ஆண்டு 28.4 % வீதமாகவும் வடமேல் மாகாணம் 27.7% வீதமாகவும் தென் மாகாணம் 24.5% வீதமாகவும் மேற்கு மாகாணம் 19.2% வீதமாகவும் காணப்படுகின்றது. இக் காலத்தில் தென் மாகாணம் 25.1% வீதமாக கூடுதலான பங்கினை வகிக்கின்றது.

1994 ஆம் ஆண்டினை எடுத்து நோக்கும் போது வடக்கு கிழக்குமா காணம் மீனுற்பத்தியில் 25.9% வீதமாகவும் வடமேல் மாகாணம் 27.5% வீதமாகவும் தென்மாகாணம் மீனுற்பத் தியில் 25.1% வீதமாகவும் மேற்குமா காணம் 21.3% வீதமாகவும் காணப்படு கின்றது. 1995, 96, 98 ஆகிய ஆண்டுகள் முறையே வடக்கு கிழக்கு மாகாணங் களில் 16.2%, 15.3% 17.97% வீதமாக வும் காணப்படுகின்றது. வட மேல் மாகாணம் 31%, 29.3%, 25.94% வீதமா கவும் தெற்குமாகாணம் 29%, 30.5%, 31.1%, வீதமாகவும் மேற்கு மாகாணம் 28.8% 24.3%, 24.1% வீதமாகவும் காணப்படுகின்றது.

இவ்வாறு வடக்கு கிழக்கு மீனுற் பத்தியின் போக்கினை காலகட்டரீதியாக நோக்கும் போது வீழ்ச்சியடைந்து செல்கின்றமையினைக் காணலாம் இதற்கு முக்கியகாரணம் இனக்கலவரமும் இராணுவ நடவடிக்கையும் ஆகும். அதாவது தமிழர் வாழ்கின்ற பொருளா தாரத்தினை சீர்குலைக்கும் நோக்குட னும் இராணுவம் தமது பாதுகாப்பு நோக்குடனும் இப்பிரதேச கரையோர மீன்பிடி வீழ்ச்சியடைந்து சென் றுள்ளது.

மேலும் அண்மை ஆண்டுகளின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கணிதரீதியாக நோக்குவோம்.

| வருடம் | எண்ணிக்கை x | உற்பத்தி y | xy | $x^2$ | $y^{-1}$ | பருவகால மாறுதல் வீதம் | விகிதாசார மாறுதலை சராசரிப் பகுத்தல் |
|---|---|---|---|---|---|---|---|
| 1994 | 1 | 45235 | 45235 | 1 | 32586.8 | 138.8% | 45230.4 |
| 1995 | 2 | 29280 | 58560 | 4 | 33947.6 | 86% | 29194.9 |
| 1996 | 3 | 30680 | 92040 | 9 | 35308.4 | 103% | 36685.42 |
| 1997 | 4 | 29900 | 119600 | 16 | 36669.2 | 81% | 29702.05 |
| 1998 | 5 | 37490 | 187450 | 25 | 38030 | 98.6% | 37497.58 |
| 1999 | 6 | 41090 | 246540 | 36 | 39390.8 | 104% | 40966.43 |
| 2000 | 7 | 43710 | 305970 | 49 | 40751.6 | 107.25% | 43604.21 |
| | $\Sigma x$ 28 | $\Sigma y$ 257385 | $\Sigma xy$ 1055395 | $\Sigma x^2$ 13 | | | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| $\hat{y} = \hat{P}o + \hat{P}_1 x$<br>$\hat{P}o = \dfrac{Zx^2 2y - ZxZxY}{nZx^2 - (Zx)^2}$<br>$\hat{P}_1 = \dfrac{nzxy - zxzy}{nzx^2 - (zx)^2}$ | மாற்று விகிதாசாரம்<br>$\dfrac{45235 \times 100}{32586.8}$<br>$= 138.8\%$ | $\dfrac{29280 \times 100}{33947.6}$<br>$= 86.25$<br><br>$\dfrac{29900 \times 100}{36669.2}$<br>$= 81.53$ |
| $\hat{P}o = \dfrac{131 \times 257385 - 28(1055395)}{7 \times 131 - (28)^2}$<br>$= \dfrac{33717435 - 29551060}{917 - 784}$<br>$= \dfrac{4166375}{133}$<br>$= 31326 - 12782$<br>$\hat{P}o = 3132611$ | $\dfrac{36680 \times 100}{35308.4}$<br>$= 103.88$<br><br>$\dfrac{374\,90 \times 100}{38030}$<br>$= 98.58$<br>$98.6\%$ | $\dfrac{41090 \times 100}{39390.8}$<br>$= 104.3$<br><br>விகிதாசார மாறதலை சராசரிப்படுத்தல்<br><br>$\dfrac{138.3}{100} \times 32586.8$<br>$= 45230.4$ |
| $\hat{P}1 = \dfrac{7 \times 1055395 - 28 \times 257385}{7 \times 131 - (28)^2}$<br>$= \dfrac{7387765 - 7206780}{917 - 784}$<br>$= \dfrac{180982}{133}$<br>$= 1360.7766917\%$<br>$= 1360.76\%$<br>$\hat{Y} = 31326 + 1360.76\%$ | $\dfrac{43710 \times 100}{40751.6}$<br>$= 107.25$ | $\dfrac{86}{100} \times 339476$<br>$= 29194.936$<br><br>$\dfrac{103.9}{100} \times 35308.4$<br>$= 36685.4$<br><br>$\dfrac{81}{100} \times 36669.2$<br>$= 29702.05$ |
| | | $\dfrac{98.6}{100} \times 38030$<br>$= 37497.58$<br><br>$\dfrac{104}{100} \times 393908$<br>$= 40966.43$<br><br>$\dfrac{107}{100} \times 40751.6$<br>$= 436042.21$ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைபடத்தின்படி A,B,C,D,E,F,G எனும் புள்ளிகள் உண்மையான புள்ளிகளாகும் S - S எனும் நேர்கோடு மதிப்பிடப்பட்ட வரைகோடாகும். இரண்டிற்கும் இடைப்பட்ட வித்தியாசம் பருவகாலங்களால் ஏற்பட்ட மாற்றங்களாகும். அதாவது வடக்கு கிழக்கினை பொறுத்த வரையில் உள்நாட்டு குளப்பங்கள் மற்றும் காலநிலை பாதகமான தன்மையினை காட்டுகின்றது. 1994 ஆம் ஆண்டில் உண்மையான உற்பத்தி உயர்வாகவும் மதிப்பிடப்படும் உற்பத்தி குறைவாகவும் காணப்படுகின்றது. அக்காலப் பகுதிக்கு பின்னர் உள்நாட்டில் ஏற்பட்ட யுத்தநெருக்கடிகள் காரணமாக உண்மை உற்பத்தி குறைவடைந்து சென்று 1999 ஆம் ஆண்டில் இருந்து மீண்டும் உண்மை உற்பத்தி உயர்வாக காணப்பட்டது. இக்காலத்தில் சமாதான சூழ்நிலமையின் ஆரம்பகாலமாகையால் மீனுற்பத்தி உயர்வாக உள்ளது.

### III சந்தைப்படுத்தல் Marketing

வடக்கு கிழக்கு மீன் சந்தைப்படுத்தலை மூன்று பிரிவுகளாக பிரிகலாம். வடக்கு கிழக்கு பிரதேசத்தில் உள்ள சந்தைப்படுத்தல், இது, இவ் மாகாணங்களிற்கு உள்ளே விற்பனை செய்வதாகும். வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்கு வெளியிலான சந்தைப் படுத்தல். ஏனைய மாவட்டங்களை நோக்கிய சந்தைப்படுத்தல் வெளிநாட்டுச் சந்தை என மூன்று வகையாக வகுக்கலாம். எனவே இவ் மூன்று சந்தையினை பின்வருமாறு நோக்குவோம்.

வடக்கு கிழக்கு எல்லைக்குள்ளான சந்தைப்படுத்தலானது பல்வேறு முறையில் செயற்படுவதனைக் காணலாம். அதாவது துவிச்சக்கர வட்டியில் மீனை கொண்டு விற்பனை செய்தல் மற்றையது ஒரு இடத்தினை தெரிவு செய்து அதில் விற்பனையினை மேற்கொள்வர். உதாரணமாக யாழ்ப்பாணம், கிளிநெச்சி, முல்லைத் தீவு போன்ற இடங்களின் குறித்த சந்தைமுறையினை கொண்டுள்ளது ஏனெனில் இப்பிரதேசம் மூடப்பட்ட பொருளாதாரமாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய மாகாணங்களிற்கு இடையிலான சந்தைப்படுத்தலை நோக்கும் போது வடக்கு மாகாணம் தவிர்ந்த கிழக்கு மாகாணத்தில் இருந்து இந்த சந்தை முறைமை நடைபெற்றுள்ளது உதாரணமாக திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளில் இருந்து கொழும்பு சந்தையினை நோக்கி வியாபாரம் செய்யப்படுவதை காணலாம் மூன்றாவதாக மீன் ஏற்றுமதி இறக்குமதி தொடர்பினை சந்தைப்படுத்தல் ஆகும் வடக்கு கிழக்கினைப் பொறுத்தவரையில் இச் சந்தைமுறை நடைமுறைச் சாத்திய மற்றதாக காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வடக்கு கிழக்கு சந்தைப்படுத்தலில் மீனுற்பத்தியன் நிரம்பல்**

மொத்தநிரம்பலில் அதன் சதவீத பங்களிப்பினை அட்டவணை ஊடாக நோக்கலாம்.

Fish transported to fish market in 1998

| Areas from fish come | Fish Supply Kg | | Annual fish supply kg | % |
|---|---|---|---|---|
| | Daily kg | Monthly | | |
| Manner | 9500 | 247000 | 2964000 | 4.4% |
| East am 'cryogen | 59500 | 1547000 | 18564000 | 28% |
| Total | 69000 | 1794000 | 21528000 | 32.5% |

Source prepared by the socio economic division / Nara with the assistance of Statistical.

வடக்கு கிழக்கு சந்தைப்படுத்தலில் ஒவ்வொருநாளும் 69000 kg மீன் சந்தைப்படுத்தப்படுகின்றது. மாதாந்தம் 1794000kg மீன் விற்பனை செய்யப்படுகிறது. வருடாந்த ரீதியாக நோக்கும் போது 21528000kg மீன் சந்தைப்படுத்தப்படுகின்றது. மொத்த மீன் சந்தைப்படுத்தலில் 32.5% இந்த இருமாகாணங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றது. எனவே இவ்மாகாணங்களில் பிடிக்கப்படும் மீனினை. சந்தைப்படுத்த முடியாமல் பல்வேறு சிக்கல்களை அனுபவிக்கின்றார்கள்.

மீனுற்பத்தியிலும் சந்தைப்படுத்தலிலும் பல்வேறு வகையான அபிவிருத்தித் திட்டங்கள் கொண்டு வரப்பட்டபோதும் மீனுற்பத்தி அதிகரிக்கவில்லை. உதாரணமாக நிறுவன ரீதியான உதவித்திட்டம், ஐந்தாண்டுத் திட்டம், மானியத்திட்டம் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் கொண்டு வரப்பட்ட போதும் மீனுற்பத்தி குறிப்பிடக்கூடிய வளர்ச்சியினை அடையவில்லை சமூகவியல் ரீதியாக நோக்கும் போது சாதிவர்க்க வித்தியாசம் இம் மாகாணங்களில் காணப்படுகின்றது. இந்த வர்க்க வேறுபாடு காரணமாக இத்தொழில் செய்பவர்களுடைய பங்கு குறைவடைந்து சென்றுள்ளது சமூக நோக்கத்தின் அடிப்படையில் நோக்குகின்ற போது இத்தொழில் இழிவான மூடநம்பிக்கையுடன் மக்கள் வாழ்கின்றதனை பார்க்கலாம்.

வேறும் பல காரணங்கள் காணப்படுகின்றன. தற்போதைய அந்நிய வருமானத்தின் அதிகரிப்புத் தன்மை காரணமாக இத்தொழில் செய்ய வேண்டும் என்ற நாட்டம் அருகி வருகின்றது. உதாரணமாக இத் தொழில் செய்வோரின் உறவினர்கள் வெளிநாடுகளில் வாழ்கின்ற போது இங்கு உள்ளவர்களின் வாழ்க்கைச் செலவு அவர்களில் தங்கியுள்ளது. எனவே தொழில் செய்யும் ஆற்றல் குறைவடைந்து செல்கின்றது. இதனாலும் மீனுற்பத்தி குறைவடைந்து செல்கின்றது.

**மீனுற்பத்தியும் சந்தைப்படுத்தல் எதிர் நோக்கும் பிரச்சனைகளும் தீர்வுகளும்.**

மீனுற்பத்தி சந்தைப்படுத்தல் தொடர்பான பொருளாதாரப் பிரச்சனையாக நிதிபற்றாக் குறையாகக் காணப்படுகின்றது. அதாவது வடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கினைப் பொறுத்தவரையில் வெளிநாடுகளிடம் கையேந்தும் நிலைமை காணப்படுகின்றது. உலக நிறுவனங்கள் மூலம் நிதி உதவி கிடைக்கின்ற போதும் சிறந்த குடும்பக் கட்டுப்பாட்டு தன்மை. நுகர்வு பழக்க வழக்கம், மதுவிற்கு அடிமையாதல் போன்றகாரணங்களால் நிதியினை தகுந்தவழியில் பயன்படுத்த முடிய வில்லை. மேலும் மீனவர்கள் மத்தியில் சேமிப்பு நாட்டம் அற்றவர்களாக காணப்படுகின்றனர். இதனால் மேலும் வறுமையான நச்சுவட்ட வாழ்கையி னையே வாழ்கின்றார்கள். எனவே வளர்ந்துவருகின்ற ஏனையதுறை களோடு ஒப்பிடும் போது மீனவர்களு டைய நிதியானது பாரிய பிரச்சனை யானதாக காணப்படுகின்றது.

இதற்கான தீர்வினை எடுத்து நோக்கும் போது மீனவர்களின் நிதிப்பற்றாக்குறையினை தீர்க்கக் கூடிய வகையில் தகுந்த திட்டங்களை மேற்கொள்ளுதல். மீனவக் குடும்பங் களிடையே சேமிப்புப் பழக்கத்தை தூண்டக்கூடிய வகையில் திட்டத் தினை மேற்கொள்ளுதல். அதாவது மீனவருக்கான மானியக் கொடுப்பன வினைக் கொடுப்பதன் மூலம் மீன்பிடித் தொழிலில் ஊக்குவிப்பினை மேற் கொள்ளுதல் முதலீட்டினை அதிகரித் தல் போன்றவற்றினால் இவர்களின் நிதிப்பற்றாக் குறையினை நிவர்த்தி செய்யமுடியும்.

2) கடல் பாதுகாப்பு வலயசட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதையடுத்து உற்பத்தியானது பாரிய வீழ்ச்சியினைக் கண்டுள்ளது. 18.11.1985 அன்று பாதுகாப்புகாவல் வலயம் ஒன்று உருவாக் கப்பட்டது. இப்பாதுகாப்பானது 1995 ஆம் ஆண்டு கடல் எல்லை முழுவதும் இராணுவவேலிகளும் காவலரண்களும் காணப்பட்டது. சில பிரதேசங்களில் முற்று முழுதான தடையும் காணப்பட்டது. உதாரணமாக முல்லைத்தீவு மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம் முற்றாக தடை செய்யப்பட்டபகுதியாகும்.

இதற்கான தீர்வு முறையினை நோக்கும் போது நடைமுறையில் உள்ள கடல்பாதுகாப்பு வலயம் தளர்த்தப் படவேண்டும். மீனவர்களை கடற்றொழில் செய்ய அனுமதிக்க வேண்டும். கடல் தூரத்திற்கான கட்டுப் பாடுகளை தளர்த்த வேண்டும். இவ்வாறு மீனவர்கள் சுதந்திரமாக நடமாடுவதன் மூலம் மீன் உற்பத்தி யினை அதிகரிக்க முடியும். இதனூடாக அவர்களது வாழ்க்கைத்தரத்தினை அதிகரிக்க முடியும்.

3) தொழினுட்ப ரீதியான பிரச்சனை இப்பிரதேசத்தினைப் பொறுத்த வரை யில் காணப்படுகின்றது. வேறு நாடு களோடு ஒப்பிடும் போது இங்கு இப்பிரச்சனை பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது அதாவது கடலுக் குள் நீண்ட நாட்களாக நின்று கடல் தொழிலினை செய்யக் கூடிய நவீன கப்பல் வசதிகள் திசையறி கருவிகள், சேதம் இன்றி மீன்களை பிடிக்கக் கூடிய உபகரணங்களைப் பயன்படுத்துதல். இவ்வாறு நுட்பமான தொழினுட்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகள் இப்பிரதேசத்தில் காணப்பட லில்லை. வடக்கு கிழக்கு பிரதேசத்தில் மீனவர்களிடையே தனித் தனியான மீன்பிடிக் கலங்கள் இல்லாத காரணத் தினாலேயே ஒரு சிலருடைய படகுகளி லேயே ஏனையோர் தொழிலுக்குச் செல்கின்றார்கள். இதற்கான தீர்வு முறையினை நோக்கும் போது வெளி நாடுகளிடம் இருந்து நவீனகரமான இயந்திர உபகரணங்களை கொள் வனவு செய்தல், அவற்றை இயங்கச் செய்வதற்கான பயிற்சிகள். தொழி நுட்பக் கல்லூரிகள் நிறுவுவதன் மூலம் தொழினுட்பம் தொடர்பான பிரச்சனை யினை தீர்க்க முடியும்.

4) வடக்கு கிழக்கினை பொறுத் தவரை உட்கட்டுமான வசதிகள் இல்லாதநிலைமை காணப்படுகின்றது எனவே ஒரு பொருளாதார துறைசார் வளர்ச்சிக்கு உட்கட்டுமானம் என்பது இன்றியமையாத ஒன்றாகும். துறை முகங்கள். தொலைத்தொடர்பு, கலங் கரை விளக்கு போன்ற வசதிகளை செய்வதன் மூலம் மீன்பிடி தொழிலாளர் களின் பாதுகாப்பு மற்றும் ஏனைய வசதியினை பெறமுடியும் தென்கிழக் காசியா நாடுகளினை எடுத்து நோக்கும் போது துறைமுகவசதிகள் பாரிய முதலீட்டினைக் கொண்டதாக அமைக் கப்பட்டு உள்ளது.

தொலைத் தொடர்பினை எடுத்துக் கொண்டால். வெளிநாட்டு மீனவர்கள் தொலைத் தொடர்பு கருவிகளை வைத்திருப்பதன் மூலம் காலநிலை மாற்றங்களை உடனுக்குடன் அறிந்து அதற்கு ஏற்ற வகையில் தமது தொழிலினை மேற் கொள்ள முடியும். ஆனால் வடக்கு கிழக்கில் இவ்வாறான வசதிகள் இல்லாமை பெரும் பிரச்சனை யாகக் காணப்படுகின்றது.

இதற்கான தீர்வினை எடுத்து நோக்கும் போது ஒவ்வொரு மீன் பிடி தொழில் செய்பவர்களிடையேயும் தொலைத் தொடர்பு கருவிகள், மற்றும் திசையறி கருவிகள் என்பன காணப்பட வேண்டும். அதாவது தொலைபேசியின் முக்கியத்துவத்தினை நடைமுறைரீதி யாக மக்களிற்கு உணர்த்துதல். வெளி நாடுகளிடம் இருந்து நவீன தொலைத் தொடர்பு கருவியினை பெற்றுக் கொடுத்தல் போன்ற நடவடிக்கையினை அரசாங்கம் ஏற்படுத் திக் கொடுக்க வேண்டும். இதன் மூலம் இப்பிரச்சனை யினைத் தீர்க்க முடியும்.

5) வடக்கு கிழக்கினைப் பொறுத்த வரை சமூகம், அரசியல் காரணிகளின் செயற்பாடு பெரும் பிரச்சனையாகக் காணப்படுகின்றது. அதாவது சமயம். சாதியமைப்பு, மக்களின் நுகர்வு பழக்க வழக்கம் போன்ற காரணிகள் முக்கியமான இடத்தினை வகிக்கின் றன.

மத அடிப்படையில் எடுத்துக் கொண்டால் குறித்த சில மதப்பிரிவினர் மீன் பொருளை நேரடியாக உணவாக உட்கொள்வதில்லை. இதன் காரணமாக அத்தகையோர் மீன்பிடித் தொழிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுவது இல்லை. அத்துடன் வடக்கு கிழக்கில் மீன்பிடித்தொழில் ஒரு புறக்கணிக்கப்பட்ட துறையாகவே சமூகத்தினால் கருதப்படுகின்றது. மேலும் இத்தொழிலை செய்வோர் சாதியடிப்படையில் மிகத்தாழ்ந்தவர்களாக கருதப்படுகின்றது. இதன் காரணமாக குறிப்பிட்ட வர்க்கத்தினரே மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். ஏனையோர் கரையோரப் பகுதியில் வாழ்கின்றவராகிலும் சரி, மற்றும் தொழில் முதலீட்டு வசதியுடையவர்களாயினும் சரி இத்தொழில் மூலம் கூடுதலான வருமானம் ஈட்டக் கூடிய வாய்ப்புக்கள் இருந்த போதிலும் சமூகஅந்தஸ்து காரணமாக இத்தொழிலினை புறக்கணிக்கின்றார்கள். இப்பிரச்சனை இம் மாகாணங்களின் இன்றும் இளையோடிக் காணப்படுகின்றது.

இதனை தீர்ப்பதற்கான வழிகளாக எல்லா மக்களிடையேயும் சமச்சீரான மதிப்பீட்டினை மேற் கொள்ளக் கூடிய வகையில் பல்வேறு திட்டங்கள் கொண்டு வரவேண்டும். அதாவது சாதி ஒழிப்புத் திட்டம் கொண்டு வரப்பட வேண்டும். எல்லாத்துறைகளும் சமனான மதிப்பீட்டினை மக்களிடையே புகட்டவேண்டும் இவ்வாறான செயற்பாட்டினைச் செய்வதன் மூலம் இப்பிரச்சனையினை ஓரளவேனும் தீர்த்துக் கொள்ள முடியும்.

6) அரசியல் காரணிகளில் உயிர் உடமைகளின் பாதுகாப்பு சூழல் பாதுகாப்பு வளப்பாதுகாப்பு போன்ற காரணிகளால் குறிப்பிட்ட கடல் பிராந்தியம் மீன்பிடித்தொழிலுக்கு தடையாக இருப்பது ஓர்பிரச்சனையாகும். மற்றும் வன்செயல் மற்றும் இயற்கை அனார்த்தங்களால் குறித்த சமுத்திர சூழலில் உள்ளோர் வேறுபட்ட சமுத்திர சூழலுக்கு இடம் பெயர்வு போன்ற காரணிகளும் அதனால் குறிப்பிட்ட ஒரு கடல் சூழலில் பயன்படுத்துகின்ற மீன்பிடிக் கருவிகள் முறைகள் வேறு இடங்களில் பயன்படுத்தத் தடையாக உள்ளது. இத்தகைய கருவிகளைத் தாம் வாழும் புதிய சமுத்திர சூழலில் பயன்படுத்துவதற்கு ஏற்ற முறையில் மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால் மீனவர்களின் செலவு உயர்வடைகிறது. மேலும் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசியற் பிரதேசங்கள் பெரும் தாக்கத்தினை அனுபவித்து வந்தமை ஓர் எடுத்துக் காட்டாகும். இவ்வாறு அரசியல் பிரச்சனை இவ்மாகாணத்தில் காணப்படுகிறது.

இதற்கான தீர்வு முறையினை நோக்கும் போது அரசியல் கலவரங்களை முற்றுமுழுதாக தணிக்க வேண்டும் அதாவது தற்போது நடைபெற்று வரும் கடல் சமர்களை கண்காணிப்புக் குழுமூலம் தணிப்பதன் ஊடாக இப்பிரச்சனைக்கு தீர்வு காணலாம்.

7) வடக்கு கிழக்கினைப் பொறுத்த வரையில் இறைக் கொள்கைரீதியாக பிரச்சினை காணப்படுகின்றது. இன்றைய நிலைமையினை எடுத்து நோக்கும் போது இலங்கை அரசாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவான மீன் உற்பத்தி கொள்கை யினை வரைந்து உள்ளது ஆனால் இக்கொள்கைகள் மக்கள் நலன் பேணுவதாகக் காணப்படவில்லை. அதாவது மக்களால் உருவான அரசு மக்கள் நலன் பேணுவது கடமையாகும் ஆனால் இந்நிலைமைக்கு எதிரான ஒரு நடவடிக்கையினை இம்மாகாணங் களில் அரசு மேற்கொள்கின்றது. இதனால் குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் நலன் அனைத்தும் பறிக்கப்படு கின்றமை பாரிய பிரச்சனையாக உள்ளது.

இதற்கான தீர்வு முறையினை நோக்குவேமானால் அந்த அந்த மாகாணங்களில் வாழ்கின்ற மக்களின் நலன் புவியியல் அமைப்பு என்பன வற்றை நேரில் பார்வையிட்டு தமது கொள்கையினை வகுக்க வேண்டும். அதாவது இனரீதியான வர்க்க வேறு பாடின்றி நேரில் பார்வையிட்டு பொருத்தமான இறைக் கொள்கை யினை வகுக்க வேண்டும்.

8) வடக்கு கிழக்கில் மீன்பிடி கைத் தொழில் என்பது இன்றைய நிலமை யில் பாரிய பிரச்சனையாக உள்ளது. இன்று கைத்தொழில் மயமாகி வரு கின்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது இப்பிரதேசத்தில் குறிப்பிடக் கூடியள வேனும் கைத்தொழில் நிலைமைகள் காணப்படவில்லை. அதாவது மீன்பதப் படுத்தல், உபகரணங்களை உற்பத்தி செய்தல் இதன் மூலம் மக்கள் வேலை வாய்ப்பு என்பது குறைவானதாக காணப்படுகின்றது. அத்துடன் பெறுமதி மிக்க மீனினங்கள் காணப் படுகின்ற போதும் வெளிநாடுகளிற்கு ஏற்றுமதி செய்து அந்நிய வருமானத் தினைப் பெற முடியாமல் காணப் படுகின்றது. இதனால் இப்பிர தேசத்தில் மக்கள் தமது சுய தேவையி னைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இதற்கான தீர்வினை நோக்கும் போது இம் மாகாணங்களில் மீனவக் கைத் தொழில் நிலையங்கள் என்பன நிறுவுதல் வேண்டும். மேலும் வெளி நாட்டு உதவியினைப் பெற்று இங் குள்ள பெறுமதியான மீன்களை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதனை ஊக்குவிக்க வேண்டும். இதனால் பாரிய அன்னிய செலாவணியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

9) போக்குவரத்து என்பது மீன் சந்தைப்படுத்தல் தொடர்பான ஒரு பிரச்சனையாகும். அதாவது கடல் மார்க்கமாகவோ, தரைமார்க்கமாகவோ மீன்களை விற்பனை செய்வதற்கான வாய்ப்பு இன்மை பிரச்சனையாக உள்ளது இம்மாகாணத்தில் போக்கு வரத்து வசதி என்பது மிகவும் சீரழிந்து உள்ளது. எனவே மீன்கள் பழுதடைய முன்னர் மக்கள் மத்தியில் விற்பனை செய்யமுடியாது உள்ளது. இதனை தீர்ப்பதனால் சிறந்த போக்குவரத்து வீதிகளை அமைப்பதன் மூலம் நல்ல பலன்களை அடைய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) மீனவர்களின் குடும்ப வாழ்க்கையினை நோக்கும் போது மிகவும் வறுமையினால் தாக்கப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர் அத்துடன் பழக்கவழக்க ரீதியாக நோக்கும் போது மதுவுக்கு அடிமையாகுதல், கடற்கரையோரச் சூழல் மாசுபடுத்தப்பட்ட நிலையில் காணப்படுவதுடன் சிறிய வயதில் திருமணம் செய்தல், குழந்தைகளை அளவுக்கு மேலதிகமாக பெறுதல், சிறந்த சுகாதார வசதிகள் என்பன காணப்படுவது இல்லை. இவ் வாழ்க்கைப் பிரச்சனை என்பது அதிகமாக மீனவக்குடும்பங்களில் காணப்படுகின்றது. வருமானத்துக்கு மேலான செலவு என்பன காணப்படுகின்றன. இதற்கான தீர்வு முறையினை நோக்கும் போது மக்களின் பழக்க வழக்க ரீதியாக சீர்திருத்த சட்டத்தினைக் கொண்டு வருதல் வருமானத்துக் ஏற்றவாறு செலவு செய்தல். சேமிப்பினை ஊக்குவித்தல், சூழல்பாது காப்புத் திட்டதினை மேற்கொள்ளுதல் கல்விகற்பதற்கான கால அளவினை அதிகரித்தல் திருமணத்திற்கான வயது எல்லையினை உயர்த்துதல் குடும்ப கட்டுப்பாட்டினைப் பேணுதல் சேரி வாழ்க்கையில் இருந்து நகர வாழ்க்கைக்கு ஏற்றவாறு வாழ்தல், குடும்ப அங்கத்தவர் இடையே நெருக்கமான உறவுகளைப் பேணுதல் போன்ற செயல்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதன் மூலம் இப்பிரச்சனைக்கு தீர்வு காணமுடியும்.

# Refereneees


1) Sri Lanka. Fishers Year Book - 2000.

2) மதுரை ஏ.எஸ் 1995 இலங்கை மீன்பிடி துறையின் இன்றைய நிலை ஒரு நோக்கு சிந்தனை III 79 - 85 யாழ் - பல்கலைக்கழகம்

3) KADAL OZAI.

Fisheries Diploma students Onion University of Jaffna.

4) சமுத்திரவியல் கலாநிதி ஏ.எஸ் ஆனந்தன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகிழக்கு பிரதேச அபிவிருத்தியில் பனை வளத்தின் பங்கு

# The Role of the Palmyra Resource in North East Regional Development.

*Miss. T.Jeyanthiny,*
2nd Year(2003
*Economics (Special),*
*Department of Economics,*
*University of Jaffna.*

மனித மேம்பாட்டுக்கான பொருளாதார வளர்ச்சியில் அவ்வப் பிரதேசத்தில் இருக்கும் மூல வளங்களுக்கும் மனிதனுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மனிதன் ஆதிகாலந் தொட்டே அம்மூலவளங்களில் இருந்து தனக்கு தேவையான உணவு உடை, உறைவிடம் போன்றவற்றை பெற்று வந்துள்ளான். இயற்கை மூலவளங்களில் இருந்து இவற்றைப் பெறும் போது தமக்குத் தெரிந்த முறைகளை கையாண்டு வருகின்றான். எமது நாட்டைப் பொறுத்த வரையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள இயற்கை வளங்களில் கடல்வளம், குளங்கள், மணல், கனிப்பொருள்கள், நெல் உற்பத்தி, காட்டுவளம், விவசாயம், தென்னை பனைகள் போன்றன முக்கியமானவை. இவ்வாறு பலவளங்கள் காணப்பட்ட போதும் அவற்றினை முழுதாக பயன்படுத்தப்படுவதாக அமையவில்லை.

இயற்கையானது ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஒவ்வொரு கொடைகளை வழங்கி இருக்கும் போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் திறமையாக பயன் படுத்தப்படாத வளமாக பனை வளம் காணப்படுகின்றது. இன்றைய பொருளாதார நெருக்கடி வாய்ந்த சூழ்நிலையில் இப்பனை வளத்தின் சிறப்பினை உணர்ந்து அதன் மூலம் வடக்கு கிழக்கு பிரதேசங்கள் பல பயன்களை அடைந்து செல்லக் கூடியதாக இருக்கும். வரண்ட பிரதேசங்களுக்கு அதுவும் யாழ்ப்பாணத்துக்கு என வழங்கப்பட்ட முக்கிய வளமாக இப்பனை வளம் காணப்படுகிறது. யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பனை வளத்தால் நிச்சயமாக அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் இப்பனம் கைத்தொழில் பல உப கைத்தொழில்களை ஏற்படுத்தக் கூடியது. பலருக்கு வேலை வாய்ப்புக் களையும் வழங்கும் தன்மையுடைய தாகும்.இலங்கையில் உள்ள சுமார் 111 இலட்சம் பனைகளில் 99% பனைகள் வடக்குக் கிழக்கிலும் மீதி 1% புத்தளம், அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளிலும் வளர்கின்றன. வடக்கு கிழக்கு மாகாணங்களில் யாழ் மாவட்டத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனைகள் கூடுதலாக உள்ளன. இவை பெருமளவு அபிவிருத்தி செய்யப்படவில்லை. ஏனைய பெருந்தோட்டப் பயிர்களைப் போன்று பனைவளத்திற்கு என்று ஆராய்ச்சி நிலையம் உருவாக்கப்படவில்லை. இலங்கையைப் பொறுத்தமட்டில் தனிநபரால் மேற்கொள்ளப்பட்ட தொழில் கூட்டுறவு நடவடிக்கையாக மேற்கொள்ளப்படுகின்றது. 1972ம் ஆண்டு பனை தென்னை வள அபிவிருத்திச்சங்கம் பனை வளத்தை பாதுகாத்து அதன் பலனை நல்ல அறுவடையை செய்ய எழுந்தது ஆகும். பனையும் தென்னையும் எமது நாட்டின் பெறுமதியான செல்வங்கள். இவற்றின் மூலம் எத்தனையோ குடும்பங்கள் தமது வாழ்க்கையை ஓட்டுகின்றன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் வீடு கட்டும் தேவைக்காக பனைகள் அழிகிக்கப்படுகின்றன. வடக்கு கிழக்கு மாகாணங்களில் முழுக்க முழுக்க பனை மரத்தையே பாவிக்கின்றார்கள். பனங்காணிகளில் வீடுகட்டும் தேவைக்காக பனை மரங்கள் அப்புறப்படுத்தப்படுகின்றன. போர் நடவடிக்கைகள் முகாம் விஸ்தரிப்புகள், பதுங்குகுழி போன்றவற்றிற்காகவும் பனைகள் அழிக்கப்படுகின்றன. செல், குண்டு வீச்சு தாக்குதல்கள், இயற்கை அழிவு போன்றவற்றினாலும் வருடமொன்றுக்கு சுமார் 2 இலட்சம் பனைகளுக்கு குறையாமல் அழிவடைகின்றன. இதனால் மழைவீழ்ச்சி குறைவுகள் சூழல் பாதிப்படைகின்றது.

வடகிழக்கு பிரதேசங்களில் பனை வளரும் இடங்களாக யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, பளை, பூநகரி, தீவகம் போன்ற பிரதேசங்களை குறிப்பிடலாம்.

## மூலவள நிலை புள்ளி விபரம்

| மாவட்டம் | பனைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 3 500 000 |
| 2. கிளிநொச்சி | 3 500 000 |
| 3. மன்னார் | 3 000 000 |
| 4. முல்லைத்தீவு | 500 000 |
| 5. வவுனியா | 8 000 |
| 6. அனுராதபுரம் | 40 000 |
| 7. மட்டக்களப்பு | 200 000 |
| 8.அம்பாறை | 40 000 |
| 9.திருகோணமலை | 210 000 |
| 10.புத்தளம் | 120 000 |
| 11.அம்பாந்தோட்டை | 2 000 |
| மொத்தம் | 11120 000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்மாவட்டத்தில் பனைமரப்பரம்பல்

| பிரதேச செயலாளர் பிரிவு | பனைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. நெடுந்தீவு /வேலணை | 824 100 |
| 2. ஊர்காவற்றுறை | 256 200 |
| 3. தெல்லிப்பளை | 705 000 |
| 4. உடுவில் | 102 200 |
| 5. சங்கானை | 310 600 |
| 6. சண்டிலிப்பாய் | 239 900 |
| 7. கோப்பாய் | 180 700 |
| 8. யாழ்ப்பாணம் | 3 900 |
| 9. நல்லூர் | 51 600 |
| 10.சாவகச்சேரி | 321 500 |
| 11.கரவெட்டி | 246 800 |
| 12.பருத்தித்துறை | 167 500 |
| 13.மருதங்கேணி | 90 000 |
| மொத்தம் | 3500 000 |

வடகிழக்கு பிரதேசங்களில் உள்ள பனை வளத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பொருளாதார வளத்தினை உயர்த்தலாம். இவ்வகையில் பனையிலிருந்து கிடைக்கும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களை பல்வேறு வகையில் பகுத்து நோக்கலாம். உணவுக் கூறுகளில் பனம்பழம், பனாட்டு, பனங்கட்டி, பனஞ்சீனி, மதுபானம், பதநீர், கள் என்பனவற்றையும் தும்பு மரம், கைப்பணிப் பொருட்கள் கடகம், பெட்டி, கைக்கூடை, சுளகு, வெங்காயக் கூடு, தொப்பி போன்ற பன்ன வேலைப் பொருட்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனம்பொருள் உற்பத்தி - யாழ் மாவட்டம்

| பொருட்கள் | அளவு | 1998 | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|---|---|
| 1. புழுக்கொடியல்(உலர்ந்தது) | kg | 12500 | 140 000 | 71 625 | 100 000 |
| 2 புழுக்கொடியல் மா | kg | 1500 | 1200 | 846 | 1 500 |
| 3. வெல்லப்பாகு | Bot (650ml) | 50 00 | 40 00 | 25 000 | 30 000 |
| 4. பழத்தின்கூழ் | Litre | 2 500 | 3 000 | 5 000 | 1 500 |
| 5. ஜாம் | Bot | 500 | - | 150 | 100 |
| 6. பாணிப்பனாட்டு | k.g | 10 000 | 6 000 | 3590 | 1 500 |
| 7. பனாட்டு | k.g | 30 000 | 42 000 | 24 900 | 300 000 |
| 8. வெல்லம் | k.g | 20 000 | 25 000 | 2 700 | 10 000 |
| 9. மென்பானம் | Bot(300ml) | 120 000 | 30 000 | 18 000 | 100 000 |
| 10.ஒடியல் | k.g | 100 000 | 125 000 | 60 000 | 100 000 |
| பனஞ்சீனி | k.g | 500 | 600 | 50 | 500 |
| 12.ஒடியல்கூழ் | Dish | 30 000 | 35 000 | 15 000 | 5000 |
| 13.பனம் பற்பசை | Tubes | - | 1 200 | 1 500 | 1 000 |

Source :- Palmyrah Development Board, Jaffna

இலங்கையில் பனைவளம் தொடர்பான அபிவிருத்தி விருத்தியடையாமைக்கான காரணங்களாக தாபன ஒழுங்கமைப்பு இன்மை. சிறு தோட்டங்களாக இருத்தல் அத்துடன் பனை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம் இல்லை. ஏற்றுமதி முயற்சிகள் தனிப்பட்டவர்களால் சிறு சிறு அளவில் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் ஏற்றுமதி பன்முகப்படுத்தப்படவில்லை. உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்து அதனால் வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு வெவ்வேறு நிறுவனங்கள் மிகவும் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றன. இன்னும் செயற்பட வேண்டும். நிறுவனங்கள் என்ற வகையில்

1.இலங்கை பனை அபிவிருத்திச் சபை
2.தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை சங்கங்களின் சமாசம்
3. கூட்டுறவுத் திணைக்களம் (தெங்கு பனம்பொருள்)
4. யாழ் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை
6. இலங்கை விஞ்ஞான தொழிநுட்ப ஆராய்ச்சி நிறுவனம்
7. சிறு கைத்தொழில் இலாகா
8. தனியார்
9. ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்கள்

இந்நிறுவனங்கள் ஆற்ற வேண்டிய செயற்பாட்டு வரிசைகளில் ஏற்கனவே உள்ள பனைகளை அழியாது தடைசெய்தல் வேண்டும். மீள் நடுகையை தூண்ட வேண்டும். புதிய பயிராக்க நடைமுறைகளை மேற்கொள்ளல். பனை வளர்ப்பவர்களுக்கு பயிராக்க நடைமுறை பற்றிய ஆலோசனை வழங்குதல். வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பனம் விளை பொருட்களுக்கான உற்பத்தி நிலையங்களை உருவாக்குதல் சந்தை வாய்ப்புக்களை உள்ளூர் வெளியூர் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு விஸ்தரிப்பதுடன் பனை கைத்தொழில் விருத்திக்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். விவசாயிகளுக்கு உற்பத்தி பதனிடல் விற்பனை என்பவற்றில் போதிய பயிற்சிகளை அளிப்பதுடன் தேவையான உதவி சேவைகளை செய்தல் கடன் விலைத் திட்டத்தை தாபித்தல் உத்தரவாத விலைத்திட்டத்தை உருவாக்க வேண்டும். பனம் பொருள் உற்பத்தியை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றுமதி நிலையம் ஒன்றினை உருவாக்கல் வேண்டும்.

இவ்வகையில் பனை அபிவிருத்தி சபை, மாதிரிப் பனந்தோட்டங்களை உருவாக்கி வருகின்றது. வளம் குறைந்த விவசாயத்திற்கு ஒவ்வாத நிலங்களில் பனையை வளர்க்க வேண்டும். பெருந்தோட்டப் பயிராக வளர்க்க வேண்டும். அவற்றில் அடர்த்தி அவற்றிற்கான ஊடுபயிர், கீழ்பயிர், மற்றும் விலங்கு வேளாண்மையையும் பனந்தோட்டத்தில் அறிமுகப்படுத்த வேண்டும்

பனை அபிவிருத்திச் சபையின் மாதிரிப் பனந்தோட்டங்கள்

| இடம் | பிரதேச செயலர் பிரிவு | விஸ்தீரணம் | ஸ்தாபித்த ஆண்டு |
|---|---|---|---|
| 1. மாமுனை | வடமராட்சி கிழக்கு | 50 ஏக்கர் | 1982 |
| 2.புளியங்குளம் | வவுனியா | 50 ஏக்கர் | 1985 |
| 3.பிள்ளையாரடி | மட்டக்களப்பு | 50 ஏக்கர் | 1986 |
| 4.நறுவிக்குளம் | மன்னார் | 15 ஏக்கர் | 1988 |
| 5.வவுனிக்குளம் | முல்லைத்தீவு | 10 ஏக்கர் | 1986 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை 1987ம் ஆண்டு தொடக்கம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளினால் அபிவிருத்தி தொடரவில்லை. பனை வளத்தைப் பயன்படுத்தி பல கைத்தொழில்களை மேற்கொள்ளமுடியும். (E.gபனஞ்சீனி) இவ்வகையில் உற்பத்தி செய்யப் பட்டால் வேறு நாடுகளிற்கு மேலதிகமான பனஞ்சீனியை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யலாம். சாவகச்சேரி, பளை, பருத்தித்துறை, அச்சுவேலி ஆகிய இடங்களில் இருக்கும் சீனித் தொழிற்சாலையை அபிவிருத்தி செய்தால் அன்னியச் செலாவணியை ஈட்டமுடியும். பதநீரை போத்தலில் அடைக்கவோ அல்லது அருந்தவோ முடியும். பனை மரங்களில் இருந்து பெறப்படும் கள்ளை மென்பானமாக பயன்படுத்த முடியும். மிகுதி கள்ளை வடிசாலைகளுக்கு அனுப்பி சாராயத்தை உற்பத்தி செய்யலாம். கைதடி, திக்கம், ஊர் காவற்றுறை, பளை ஆகிய இடங்களில் உள்ள வடிசாலைகள் மூலம் மது உற்பத்தி செய்யப்படுகிறது. சாராய உற்பத்தியில் தன்னிறைவு கண்டு வெளிநாடுகளுக்கு சிறந்த ரக குடிவகைகளை ஏற்றுமதி செய்து பணம் சம்பாதிக்கக் கூடிய வாய்ப்புக்கள் பெறப்படுகின்றது.

சீவல் தொழிலாளர்களுக்கு தேவையான கடன் வசதிகள், வாழ்க்கைத்தர உயர்வுகள் மூலமும் இத் தொழிலை முன்னேற்றகரமாக மேற்கொள்ள முடியும். நாளொன்றுக்கு பெறும் கள்ளின் அளவை அதிகரிப்பதன் மூலமே கைத்தொழில்களை ஊக்குவிக்கலாம். ஒரு குறிப்பிட்ட மக்கள் மட்டுமே பனை வளத்தை பயன்படுத்துகிறார்கள் இதனால் பனை வளம் அபிவிருத்தி செய்யப்படவில்லை. அரச நடவடிக்கையால் உருவாக்கப்பட்ட மரவரி முறையானது இத்தொழிலில் ஈடுபட்டவர்களை தொழிலை மட்டுப்படுத்த செய்யதுடன் தவறணை நடாத்தும் முதலாளிகளை உருவாக்குவதற்கு வழிசமைத்தது. இத்தவறணை முதலாளிகள் பனந்தொழில் சமூகத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து அவர்களின் உற்பத்திகள் அனைத்தையும் தாம் கொள்வனவு செய்து விற்பனை செய்தமையால் தொழிலாளர் சமூகம் சுரண்டலுக்குள் தள்ளப்பட்டது. 1972ம் ஆண்டு இதனை நீக்க கூட்டுறவு அமைப்பு உருவாக்கப்பட்டது. இது முதலாளிகளின் பிடியிலிருந்து பனந்தொழிலாளர்களை காப்பாற்ற உருவாக்கப்பட்டது.

1990ம் ஆண்டில் இருந்து மக்கள் சேவை நிறுவனமாக மாற வேண்டும் என்ற நோக்கில்

1. கள் உற்பத்தி விற்பனை
2. கள் போத்தலில் அடைத்தல்
3. சாராய உற்பத்தி
4. பதநீர் உற்பத்தி விற்பனை
5. பாணி உற்பத்தி விற்பனை
6. சீனி உற்பத்தி விற்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.பனங் கற்கண்டு உற்பத்தி விற்பனை.
8.பனங்களி, பனாட்டு, பனங்கிழங்கு, ஒடியல்மா, புழுக்கொடியல், உற்பத்தி
9.தும்பு, ஈர்க்கு, ஓலைப் பொருள் உற்பத்தி
10.உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உணவுப் பொருள் உற்பத்தி
11.மட்பாண்ட உற்பத்தி செங்கல் உற்பத்தி

இவ்வுற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றது. 1978ம் ஆண்டு பனை அபிவிருத்தி சபை ஸ்தாபிக்கப்பட்டது ஒரு முன்னேற்றகரமான செயலாகும். 1993 கணிப்பீட்டின்படி இலங்கையில் 12 மில்லியன் பனைகளில் 2.5 மில்லியன் பனைகள் அழிக்கப்பட்டுவிட்டன.

பனை அபிவிருத்தி சபையானது 2004ம் ஆண்டிற்கான திட்டங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடுகின்றது.

1.உற்பத்தி சந்தைப்படுத்தல் செயற்பாடுகளுக்குத் தேவையான உட்கட்டமைப்புகளை ஸ்தாபித்தல்.
2.பனை சார்ந்த கைத்தொழில் பேட்டைகளை அமைத்தல்
3.வடிசாலைகளின் தரத்தினை உயர்த்துதல்
4.பனங்கள்ளை போத்தலில், தகரத்தில் அடைக்கும் பிரிவினை விரிவுபடுத்தல்.
5.வினாகிரி உற்பத்தி நிலையங்களை மீளப் புனரமைத்தல்
6.பனம் பதநீர் போத்தலில் அடைக்கும் நிலையங்களை விரிவுபடுத்தல்
7.பனம் இனிப்பு வகைகள் தயாரிக்கும் அலகுகளை ஸ்தாபித்தலும் விரிவுபடுதலும். (பனம், வெல்லம், பாணி, கல்லாக்காரம்,சீனி, பனங்களி பாது காப்பு, ரொபி, சொக்லட், பனாட்டு, பாணிப்பனாட்டு, மென் பானம்)
8.பனங்கிழங்கிலிருந்து தயாரிக்கப்படும் உணவு உற்பத்தி நிலையங்களை விரிவுபடுத்தல்.
9.பனைசார் கைப்பணிப் பொருட்கள் உற்பத்தியினை விரிவுபடுத்தலும் புதிய தொழிநுட்பங்களைப் புகுத்தலும், பயிற்சி வழங்கலும்.
10.பனைசார் ஆராய்ச்சியினை மேற்கொள்ளல்
11.கால்நடைத் தீவனம் உற்பத்தி நிலையங்களை ஸ்தாபித்தல்
12.பனம் உற்பத்திப் பொருட்கள் காட்சியறையினையும் விற்பனை நிலையத்தினையும் ஸ்தாபித்தல்

இவ்வாறு பனை அபிவிருத்தியானது பனை வளத்தை பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த உற்பத்திப் பொருளாக மாற்றும் போது வடக்கு கிழக்கின் அருஞ் செல்வமான பனை வளத்தின் மூலம் அபிவிருத்தியடையலாம் என்று கூறினால் மிகையாகாது.

***உசாத்துணை நூல்கள்***


1. நேர்காணல். (யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க முகாமையாளர்)
2. பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் வெள்ளி விழா மலர் - 1997
3. பனை வளம் - ஆசிரியர் க.சி.குலரத்தினம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்திய அபிவிருத்தியும், சூழல் பிரச்சனைகளும்

# Regional Development and Environmental Problems

*Mr.A. Thayaparan,*
*Lecturer.*
*Vavuniya Campus*
*Vavuniya*

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அந்நாட்டினது வெவ்வேறு பிராந்தியங்களினதும். அப்பிராந்தியங்களுக்கிடையிலான அபிவிருத்தி செயன்முறைகளும் இன்றியமையாதது. பல வளர்ச்சியடைந்த நாடுகளது அபிவிருத்தி அனுபவங்களின் படி அந்நாடுகள் அவற்றின் பிராந்திய அபிவிருத்தி என்பதை அடிப்படையாகக் கொண்டு அதனூடாக அந்நாடுகள் வளர்ச்சியடைந்திருப்பதை அவதானிக்கலாம். ஒருநாட்டின் பிராந்திய அபிவிருத்தி என்பது பலவேறு துறைசார்ந்த வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இடம் பெறலாம். குறிப்பாக விவசாயத்துறை, கைத்தொழில்துறை, வர்த்தக மற்றும் சேவைகள் போன்ற துறைகளின் வளர்ச்சியினூடாக அந் நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படுவதுடன் பிராந்தியங்களில் அபிவிருத்தியேற்படவும் வாய்ப்புருவாகிறது. இன்றைய அபிவிருத்திப் பொருளாதாரங்களில் ஒரு நாட்டின் பிராந்திய அபிவிருத்திக்கு அந்நாட்டினது அரசாங்கம் அதிக முன்னுரிமையளித்து வரும் அதேவேளையில் தனியே உள்நாட்டு ஆதரவுடன் மட்டுமன்றி, வெளிநாடுகளது நிதி, தொழில்நுட்ப ஆலோசனைகளுடன் கூடிய பல துறையிலும் நிபுணத்துவம் பெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களது ஆதரவுடனும் தமது பிராந்திய அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதைக் காணலாம்

- பிராந்திய அபிவிருத்திகளினூடாக ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் அதே வேளை மறுபுறத்தில் அதை மேம்படுத்துவதற்காக எடுக்கப்படும் முயற்சிகள் அப்பொருளாதாரத்தின் சூழலிலும் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றன. எனவே தான் ஒரு நாட்டின் பிராந்திய அபிவிருத்திக்காக எடுக்கப்படும் முயற்சிகள் - நடவடிக்கைகள் -கொள்கைகள் அதன் அபிவிருத்திக்கு உதவும் அதே வேளை அவை சூழலிலும் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தி வருவதால் அத்தாக்கங்களை இயன்றளவு குறைக்கும் விதத்திலும் அத்தகைய கொள்கைகள் - திட்டங்கள் அமைய வேண்டும் என்பதை சூழல்பொருளியலாளர்கள் (Environmental economists) வலியுறுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றர். இவ்வகையில் இலங்கையைப் பொறுத்தும் அதன் பொருளாதார அபிவிருத்திக்கு அதன் மாகாணங்களுக்கிடையிலான பிராந்திய அபிவிருத்தி குறிப்பாக இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தால் சின்னா பின்னமாக்கப்பட்டுள்ள வட- கிழக்கு மாகாணங்களின் பிராத்திய அபிவிருத்தி என்பது மிகவும் அத்தியாவசியமான ஒரு முன் தேவையாகவுள்ளதைக் காணலாம். இந்தவொரு பின்னணியில் இலங்கையைப் பொறுத்து அதன் வட - கிழக்கு மாகாணங்களின் பிராந்திய அபிவிருத்திக்காக எடுக்கப்படும் கொள்கைகள் - திட்டங்கள் அவற்றின் சூழலிலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதால், அத்திட்டங்களை அமுல்படுத்த முயலும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய சில விடயங்கள் பற்றியும், அதனால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள், அவற்றை இயன்றளவு கட்டுப்படுத்துவதற்கான சில வழிமுறைகள் என்பவை பற்றி இக்கட்டுரை மிகச்சுருக்கமாக விளக்குகிறது.

இலங்கையைப் பொறுத்து அதன் உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்தியை மீளக்கட்டியெழுப்ப வேண்டியது இன்றியமையாததாகும். இவ்வகையில் இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பிராந்திய அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு முயற்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இத்தகைய அபிவிருத்தி முயற்சித்திட்டங்களை முன்னெடுக்கும் போது அவை இயன்றளவுக்கு அப்பிராந்தியங்களில் சூழல் பாதிப்புகளை குறைக்கக்கூடிய வகையில் அத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு வடிவமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். மேலும் பிராந்திய அபிவிருத்தி தொடர்பான திட்டமிடல்களை வகுக்கும் போது, அப்பிராந்தியங்களின் ஒவ்வொரு பிரதேசங்களினதும் புவியியல் அமைப்பு, பௌதீகவளம், இயற்கை வளங்கள் போன்ற முக்கிய சில விடயங்களை கருத்திற் கொண்டு அதற்கேற்ற வகையில் அபிவிருத்தி திட்டமிடல்களை மேற்கொள்ளலாம் உதாரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்து, அங்குள்ள புவியியல் அமைப்பு விவசாயத்தை மூலப்பொருட்களாகக் கொண்ட சிறுகைத்தொழில்கள் மற்றும் ஏனைய சிறிய கைத்தொழில்கள் போன்றவற்றையும் அவை தொடர்பான அபிவிருத்தி முயற்சிகளையும் ஸ்தாபிப்பதற்கு பொருத்தமானது இத்தகைய அபிவிருத்திதிட்டங்கள் இயன்றளவு சூழலுக்கு குறிப்பாக நீர், காற்று மற்றும் மனித குடியிருப்புகள் மீது ஏற்படுத்தும் பாதிப்பை குறைக்க அல்லது கட்டுப்படுத்தக் கூடிய வகையில் வடிவமைக்கப்படல் வேண்டும். மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்து சனத்தொகை அடர்த்தியாகவுள்ள பிரதேசங்களில் மீண்டும் மீண்டும் புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுத்து சனத்தொகை செறிவு குறைவாகவுள்ள அப்பிரதேசத்தின் ஏனைய பகுதிகளிலும் இத்தகைய திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலமும் இயன்றளவுக்கு சூழல்பாதிப்பினை தவிர்க்க இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிராந்திய அபிவிருத்தியை மேற்கொள்ள முயலும் போது அப்பிராந்தியத்தின் பௌதீகவளம், இயற்கைவளம் அவற்றின் தன்மை போன்றவற்றையும் கருத்திற் கொள்ளல் அவசியமாகும் உதாரணமாக பயிர்ச்செய்கைக்கு பொருத்தமற்ற நிலங்களில் அதிகளவு முதலீடு செய்து, அதில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் முயற்சியை விடுத்து அத்தகைய நிலங்களில் புடவைக்கைத் தொழில்கள், பழச்சாறு உற்பத்தி, நிறுவனங்கள் போன்றவற்றை ஆரம்பிப்பதன் மூலம் அத்தகைய பிரதேசங்களிலுள்ள இளைஞர் - யுவதிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க முடிவதுடன் அப்பிராந்தியங்களது சமூக, பொருளாதார அபிவிருத்தியையும் முன்னேற்ற முடியும். இவ்வாறு ஒவ்வொரு பிராந்தியங்களிலும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முனையும் போது, அப்பிராந்தியங்களது புவியியல் அமைப்பு பௌதீக, இயற்கை வளங்கள், சனத்தொகையின் செறிவு, போன்ற சில விடயங்களை கவனத்திற் கொள்ளல் அவசியமாகும். தவிர அபிவிருத்தி முயற்சிகள் குறித்த அந்த பிராந்தியத்தின் குறிப்பிட்டசில பகுதிகளில் மட்டும் குவிந்ததாக அல்லது மையப்படுத்தியதாக அமையாது, அவை பரவலாக்கப்பட்ட அல்லது பன்முகப் படுத்தப்பட்ட வகையில் மேற்கொள்ளப்படுவதும் முக்கியமாகும்.

துறைசார்ந்த ரீதியாக பிராந்திய அபிவிருத்தியை மேற்கொள்ளும் ஒரு சூழ்நிலையில் அந்தந்தத்துறைகளுக்கு பொருத்தமான பிரதேசங்களை தெரிவு செய்வதும் முக்கியமானதொரு பணியாகும். உதாரணமாக விவசாயத் துறையின் மூலம் பிராந்திய பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு கிளிநொச்சி போன்ற பிரதேசங்கள் மிகவும் பொருத்தமானதாக அமையலாம். விவசாயத் துறையினூடாக அபிவிருத்தி எனும் போது விவசாயத் துறையின் மேம்பாட்டுக்காக பயன்படுத்தப்படும் இரசாயன. கிருமி மற்றும் களைநாசினிகளது பயன்பாடு விவசாயப் பொருட்களது உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்திடினும் மறுபுறத்தில் அவற்றின் பயன்பாடு சூழலுக்கு பாதிப்பைக் கொண்டுவரலாம். அதிலும் மனித சுகாதாரம் (human health) நீர், காற்று போன்றவற்றில் மாசுபடுத்தல்களை ஏற்படுத்தலாம். எனவே இவற்றை பாவிக்கும் போது இயன்றளவு சூழலின் பாதிப்பை குறைக்கக் கூடிய வகையில் மேற்கொள்வது விரும்பத்தக்கது. அத்துடன் விவசாயத் துறையினது அபிவிருத்தித் திட்டங்கள் முடிந்தளவுக்கு ஊழியச் செறிவான தொழில் நுட்ப முறைகளை மையமாக வைத்து வகுக்கப்படுவதன் மூலம் இப்பிராந்தியங்களது வேலையின்மைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சனைகளையும் ஓரளவுக்குக் குறைக்க முடியும் இவ்வகையில் பிராந்திய அபிவிருத்தி திட்டமிடல்களில் பிராந்தியங்களின் தெரிவும் அப்பிராந்தியங்களுக்கு பொருத்தமான அபிவிருத்தித்திட்டங்களின் தெரிவும் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் அவை சூழலில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பது தொடர்பான மதிப்பீட்டை முன் கூட்டியே மேற்கொள்வதும் அவசியமாகும். அதுமட்டுமன்றி இத்தகைய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முன்னர் அவை சூழலுக்கு பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தாது என்ற வகையிலோ அல்லது குறைந்த அளவிலான பாதிப்பை ஏற்படுத்தும் என்ற வகையிலோ அதனை உத்தரவாதப்படுத்தும் முகமாக அது தொடர்பான திணைக்களங்கள் அல்லது சூழல் சபைகள் (Environmental Council) போன்றவற்றை ஸ்தாபித்து அவற்றின் அனுமதி அல்லது ஆலோசனைகள் என்பவற்றை பெற வேண்டியதும் முக்கியமாகும். இத்தகைய சபைகள் சூழல் தொடர்பான தொழிற்பாடுகள், பிரச்சனைகள் போன்றவற்றை தீர்க்கும் வகையில் குறைந்தது மாதம் ஒரு முறையாவது சந்தித்து இது தொடர்பான கலந்துரையாடல்களையும் தேவைப்படுமிடத்து, அமுல்படுத்தப்பட வேண்டிய சூழல் கொள்கைகளையும் தேவையானதும், பொருத்தமானது மான பிரதேசங்களில் அவற்றை அறிமுகப்படுத்தும் அதிகாரங்களைக் கொண்டவகையிலும் ஸ்தாபிக்கப் படுவது இன்றியமையாதது.

இயற்கை வளங்களைப் பொறுத்து சில வளங்கள் புதுப்பிக்கக்கூடிய வளங்களாகவும். சில வளங்கள் மீள புதிப்பிக்க முடியாத வளங்களாகவும் காணப்படுகின்றன. இது அவை மீள உருவாக்க எடுக்கப்படும் காலத்தை அடிப்படையாகக் கொண்டு எடுத்து விளக்கப் படுகிறது. இந்த வகையில் மீன்வளம் குறிப்பிடத்தக்கது. வடகிழக்கு பிராந்திய அபிவிருத்தியை பொறுத்து முல்லைத்தீவு போன்ற பிரதேசங்கள் மீன் போன்ற கடல் வளத்திற்கு பொருத்தமானது என்ற அடிப்படையில் இத்தகைய பிரதேசங்களில் மீன்பிடித்துறை சார்ந்த தொழிற்சாலைகள் தொழில்கள் போன்றவற்றுக்கு அதிக முன்னுரிமையளிப்பதன் மூலம் அப்பிராந்தியங்களின் அபிவிருத்தியை முன்னெடுக்கலாம் எனினும் இங்கு மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்யும் போது குறித்த தொரு பிரதேசத்தில் தொடர்ந்து மீன்பிடிப்பதன் மூலம் அது அந்தப்பகுதியின் மீன் வளத்தை பாதிக்கச் செய்யும். தவிர நவீன தொழில்நுட்ப இயந்திரங்களது பாவனை, கடல் நீரை மாசடையச் செய்வதன் மூலம் அப்பகுதியைச் சூழ வாழ்ந்து வரும் மக்களது சூழல்பாதுகாப்பில் ஒரு அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் இதனை கருத்திற் கொண்டு அரசு "கடல் வலய பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் இத்தகைய அச்சுறுத்தல்களை இயன்றளவுக்கு கட்டுப்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையாண்டுகளாக இலங்கையைப் பொறுத்து அங்கு நிலவிவரும் சமாதான சூழ் நிலையின் காரணமாக இடம் பெயர்ந்து வாழ்ந்து வந்த மக்களது மீள்குடியேற்றம் குறிப்பாக வட- கிழக்கு மாகாணங்களில் அதன் சனத்தொகையின் அதிகரிப்பு, அங்கு பல பிரச்சனைகளை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக நகர்ப்புறங்களில் அதிகரித்துவரும் சனத்தொகையின் பெருக்கம் அங்கு சனநெரிசல்கள் இட நெருக்கடி, வாகனப்பயன்பாடுகளது அதிகரிப்பு, நீர் மாசுபடல் மற்றும் சுகாதார வசதியீனங்கள் போன்ற பல பாதிப்புக்களை ஏற்படுத்தி வருவதைக் காணலாம். அதேவேளை அதிகரித்து வரும் மீள்குடியேற்றம் காரணமாக கட்டிடவாக்கம் வீடமைப்பு போன்ற இதர தேவைகளுக்கான கேள்வியை அதிகரிக்கச்செய்வதனூடாக. சூழலிலும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. மேலும் குறித்த சில பிரதேசங்களில் அதிகளவு மக்கள் நெருக்கமாக குடியிருக்க விரும்புவதும், நெருக்கமாக குடியிருப்பதும் மனித சுகாதாரத்துக்கு கேடு விளைவிப்பதாக அமைகிறது. எனவே சனத்தொகையின் செறிவினை ஏனைய பகுதிகளுக்கும் பரவலாக்குவதன் மூலம் நகர்ப்புறங்களின் சனநெருக்கடியை குறைத்து அதனால் விளையும் சூழல் பாதிப்பை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும்.

பிராந்திய அபிவிருத்தியேற்பட்டு வரும் ஒரு சூழ்நிலையில் அங்கு பல மாற்றங்கள் இடம்பெறலாம். குறிப்பாக சனத்தொகை வளர்ச்சி மனித மூலதனத்தின் முன்னேற்றம் மற்றும் கிராமியப் புறங்களின் வளர்ச்சி போன்றவை இயற்கை வளங்களுக்கான கேள்வியை தூண்டச் செய்கின்றன. இவை பெரும் பாலும் வீட்டுத்துறை, வேலைத் தளங்கள் அயல்புறங்கள் மற்றும் நகர்ப்புறம் சார்ந்த ரீதியிலேயே இடம் பெறுகின்றன. இத்தகைய மாற்றங்கள் பின்னர் பரந்தளவில் சூழல் பிரச்சனைகள் உருவாகுவதற்கு காரணமாக அமைந்து வருகின்றன. பிராந்திய பொருளாதார அபிவிருத்தி விரும்பத்தக்கவொரு நடவடிக்கை எனினும் இந்த நடவடிக்கைகள் பொருளாதார ரீதியில் மட்டுமன்றி, சமூகத்திலும் ஒரு விரிவான தாக்கத்தை உண்டு பண்ணுகிறது. விசேடமாக மனித சுகாதாரம் (Human health) ஏனைய நலன் இழப்புக்கள் மற்றும் கிராமிய - நகரப்புறங்களின் சுற்றுப்புற அபிவிருத்தி போன்றவற்றிலும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதைக் காணலாம். உதாரணமாக பிராந்திய பொருளாதார அபிவிருத்திக்காக நகர்ப்புறமொன்றில் அமைக்கப்படும் தொழிற்சாலை நடவடிக்கைகளால் அங்கு வளிமாசுபடும் வாய்ப்புண்டாகிறது. வளி மாசுபடுதலின் விளைவாக அது மனித சுகாதாரத்தின் மீது நேரடியான தாக்கத்தையும் மனித வளத்தின் உற்பத்தித்திறன் இழப்பினால் மறைமுகமான தாக்கத்தையும் கொண்டு வருகிறது. இவ்வகையில் எமது வட-கிழக்கு மாகாணங்களில் அதிகரித்து வரும் சனத்தொகையின் செறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடமைப்பு மற்றும் கிராமியப் புறங்களது வளர்ச்சி போன்றவை குறித்த சிலபிரதேசங்களை மட்டும் மையப்படுத்தியதாக இடம் பெற்று வருவதை அவதானிக்கலாம். இது அப்பகுதிகளில் பல விதமான நெருக் கடிகளை ஏற்படுத்தி சூழலை மாசடை யச் செய்கிறது. எனவே வட - கிழக்கு மாகாணங்களது பிராந்திய அபிவி ருத்தியை ஏற்படுத்த முனையும் திட்ட மிடலாளர்கள் இதை கவனத்திற் கொண்டு தமது திட்டமிடல்களை பன்முகப்படுத்தப்பட்ட வகையில் மேற்கொள்வதன் மூலம் அப்பிராந்தி யத்தின் அபிவிருத்தியையும் பன்முகப் படுத்த முடியும்.

எவ்வாறெனினும் பிராந்திய பொருளாதார அபிவிருத்தி என்ற இலக்கை அடைவதற்காக விரிவாக்கம் கண்டு வரும் கைத்தொழில் துறைகள தும் தொழிற்சாலைகளதும் பரவலாக் கம் அப்பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தி வரும் மேலதிக செலவுகளில் ஒரு சில செலவுகளை நாம் இலகுவில் கணிப்பிட்டுக் கொள்ள முடியும். உதாரணமாக சூழல் மாசுபடுவதால் ஒருவருக்கு ஏற்படும் மருத்துவச் செலவு போன்ற சில செலவுகளைக் குறிப்பிடலாம். ஆனால் பெரும்பாலான ஏனைய செலவு களை கணிப்பிடுவதில் நடை முறைப் பிரச்சனைகள் அதிகம் காணப்படுகின்றன. இதன் அடிப்படையில் பிராந்திய பொருளாதார அபிவிருத்திக்காக ஒரு திட்டத்தை அமுல்படுத்த முனையும் போது அதன் செலவு நலன் அணுகுமுறையினை மேற்கொள்ள வேண்டிய ஒரு நிலையில் இத்தகைய சூழல் செலவுகளை சரியான முறையில் கணிப்பிடுவதென்பதும் சிக்கலான தொரு விடயமாகவே அமைகிறது.

பிராந்திய அபிவிருத்தியை ஏற்படுத்த எடுக்கப்படும் ஒவ்வொரு நடவடிக்கைகளாலும் விளைவிக்கப் படும் சூழல் தொடர்பான பிரச்சனைகள். செலவுகள் போன்றவை கிராமத்துக்கு கிராமம், நகரத்துக்கு நகரம், மற்றும் பிராந்தியங்களின் புவியியல் அமைப்பு என்பவற்றைப் பொறுத்து மாறுபட லாம் இத்தகைய மாற்றங்கள் கிராமங் களின் பிராந்தியங்களின் விஸ்தீர ணம், அவற்றின் வளர்ச்சி வீதம், அங்கு வாழும் மக்களின் வருமான மட்டம், காலநிலை மற்றும் நிறுவன அமைப்பு களின் செயலாற்றல் போன்ற சில காரணங்களால் செல்வாக்கு செலுத்தப் படுகிறது. குறிப்பாக உள்ளூர் அரசுகள் (Local Governments) மிகவும் பலவீனமா கவுள்ள போது, அந்நாட்டில் ஏற்படும் விரைவான பொருளாதார வளர்ச்சி, சனத்தொகை வளர்ச்சி போன்றவை அப்பிராந்தியங்களின் அபிவிருத் தியை பின்தள்ளச் செய்வதோடு அங்கு மோசமான சூழல் பிரச்சனைகளையும் உண்டாக்கி விடுகின்றன. மேலும் பிராந்தியங்கள் பெரியளவிலான நகர்ப் புறங்களைக் கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலையில் இத்தகைய சூழல் பிரச்சனைகளை இயன்றளவு குறைப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கான "சூழல் முகாமைத்துவம்" (Environmental Management) என்பதை பேணுவதென்பதும் கடினமானதொரு விடயமாகவே அமைகிறது. இதன் அடிப்படையில் எமது வட - கிழக்கினைப் பொறுத்தும் போரினால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள இப்பிராந்தியங்களது பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்த வேண்டியது அவசிய மாகும். இதன் மூலம் எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையும் நாம் முன்னேற்ற முடியும். எனவே வட - கிழக்கு மாகாணங்களது பிராந்திய அபிவிருத்திக்கு முன்னுரிமையளிக்கும் எந்தவொரு திட்டமிடலாளர்களும் தமது திட்டங்களினால் சூழலுக்கு விளையும் அல்லது விளையவிருக்கும் பாதிப்பை கணிசமான அளவு குறைக்கக்கூடிய வகையிலான சூழல் முகாமைத்துவம் என்பதை பேணுவதற்கும் முன்னுரிமையளிக்கும் பட்சத்தில் இப்பிராந்தியங்களது சூழல் பாதிப்பினை இயன்றளவு குறைக்க முடியுமென எதிர்பார்க்கலாம்.

பிராந்திய அபிவிருத்தி என்பது பல்வேறுதுறைகளின் வளர்ச்சிச்செயன் முறையூடாக அங்கு வாழும் மக்களின் வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பினூடாகவும் பிரதிபலிக்கப்படலாம். இதன் அடிப்படையில் ஒரு பிராந்தியத்தின் சூழல் பிரச்சனைகளை தீர்மானிக்கும் ஒரு முக்கிய காரணியாக அதன் வருமான மட்டம் என்பது விளங்குகிறது. பொதுவாக ஒரு நகர்ப்புறத்தினது அல்லது பிராந்தியத்திலுள்ள மக்களினது வருமான அதிகரிப்பு சூழல் பாதிப்பில் பல வகையான தாக்கங்களைக் கொண்டு வரலாம். சில சந்தர்ப்பங்களில் வருமான அதிகரிப்பு ஆரம்பத்தில் சூழல் பாதிப்பை அதிகரிக்கச் செய்து பின்னர் படிப்படியாக வீழ்ச்சியடையச் செய்யலாம். வேறு சில வகையான சூழல் பிரச்சனைகள் வருமான மட்டத்துடன் அதிகரிக்கின்ற போக்கினைக் கொண்டிருக்கலாம். இவ்வகையில் வெவ்வேறுபட்ட நாடுகளது வருமான மட்டத்தை அடிப்படையாகக்கொண்டு அப்பிராந்தியங்களில் ஏற்பட்டு வரும் சூழல் பாதிப்புகள் வேறுபட்டமைவதை "சூழல் குறிகாட்டிகள்" (Environmental indicators) மூலமாக நாம் அறிந்து கொள்ளலாம். எனினும் அபிவிருத்தியடைந்த நாடுகளின் அனுபவங்களை நோக்குமிடத்து அவை தமது சூழல் பாதிப்புகளை முதலில் ஏற்றுக் கொண்டு, அப்பாதிப்புக்களின் மத்தியில் வளர்ச்சிக்கான முயற்சிகளை மேற்கொள்கின்றன. குறித்ததொரு வளர்ச்சிக்கட்டத்தை அடைந்து உயர்வான வருமான மட்டத்தை அடைந்த பின்னர் வளர்ச்சியடைந்த தமது நவீன தொழில்நுட்ப முறைகளை பின்பற்றி முன்னர் ஏற்பட்ட பாதிப்புகளை சீர் செய்ய முனைந்தமையைக்காணலாம்.

பொதுவாக பிராந்திய அபிவிருத்தியேற்படுகையில் கிராம - நகர மக்களின் வருமான அதிகரிப்பு சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Energy) நீர் (water) மற்றும் கட்டிடவாக்கத்துக்கு தேவையான மூலப்பொருட்கள் போன்ற வளங்களின் நுகர்வை அதிகரிக்கச் செய்வதனூடாக சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனினும் இப்பிராந்தியங்களில் வாழும் செல்வந்தர்களைப் பொறுத்து அவர்கள் தமது வருமானத்தில் ஒரு பகுதியை சூழல் பிரச்சனைகளால் தமக்கு ஏற்பட்டு வரும் சூழல் ஆபத்துகளிலிருந்து (Environmental hazards) தம்மை பாதுகாத்துக் கொள்ள பயன்படுத்தும் சக்தியை பெற்றிருப்பர். மேலும் பிராந்தியங்களுக்கிடையிலான அபிவிருத்தியின் போது இடம் பெறும் போக்குவரத்து வசதிகளது விரிவாக்கம் நகர்ப்புற மக்களுக்கான நீர் விநியோக முறைமைகள், நகர்ப்புற சுற்றுப்புறங்களில் காணப்படும் கழிவுநீர் நிலைகள் போன்றவையும் அப்பிரதேசத்தின் நீர், காற்று, போன்ற வளங்களில் மாசுபடுத்தலை ஏற்படுத்தி அம்மக்களது வாழ்க்கை முறைமையிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதே போல் பிராந்திய அபிவிருத்தியின் போது. இடம் பெறும் மின்சார விநியோகம், சுத்தமான ஒரு எரிபொருளாக இருந்த போதும், அதை உற்பத்தி செய்யப்பயன்படும் மின் சக்தி வலு இயக்கத்தின் செயன்முறைகள் வளிமாசடைய வழி வகுக்கிறது. இவ்வாறு ஒரு நாட்டின் பிராந்திய அபிவிருத்தியேற்பட்டு, வரும் ஒரு சூழ்நிலையில் அங்கு வளர்ச்சி கண்டு வரும் சனத்தொகையானது நகர பிராந்திய ரீதியாக வளி, நீர் போன்றவற்றில் மாசுபடுத்தலையும் உற்பத்தியின் போது மிஞ்சும் கழிவுப்பொருட்களது உருவாக்கத்தால் வரும் ஆபத்துக்கள் போன்றவற்றை அதிகரிக்கச் செய்வதைக் காணலாம். இத்தகைய பிரச்சனைகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நகர்ப்புறங்களில் விரைவான கைத்தொழில் மயமாக்கம் ஏற்படும் போதும் மத்திய கிழக்கு ஐரோப்பிய பொருளாதாரங்களிலும் மிகவும் கடுமையான முறையில் மேற்பார்வை செய்யப்பட்டு வருவதைக் காணலாம். நகர்ப்புறங்களினது உட்கட்டமைப்பு வசதிகளின் மூலதனம் தொடர்பான பற்றாக்குறைவு அதிகரித்து வரும் வீதிப்போக்குவரத்து வலைப்பின்னல்கள். கழிவுநீரை சுத்தமாக மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் தொழில் நுட்ப செய்முறைமைகள், நெகிழ்வுடன் கூடிய பலவீனமான சூழல் பாதுகாப்பு சட்டங்கள் போன்றவையும் இத்தகைய பிரச்சனைகள் மேலும் தூண்டப்படுவதற்கு காரணமாக அமைகின்றன. எமது வட-கிழக்கு பிராந்தியங்களிலும் தற்போது. அதிகரித்து வரும் வீதிப்போக்குவரத்து, வாகனப் பயன்பாடு போன்றவை இப்பிராந்தியங்களிலும் சூழல் மாசுபடல் போன்ற பிரச்சனைகளை ஏற்படுத்த வாய்ப்பளிக்கிறது. இதனைக் கருத்திற் கொண்டும் எதிர்கால நலனினை கவனத்திற் கொண்டும் இவற்றை சரியான முறையில் மேற்பார்வை செய்ய வேண்டிய தேவை இன்று எழுந்துள்ளதைக்காணலாம்.

இலங்கையின் வட - கிழக்கு மாகாணங்களைப் பொறுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பிராந்தியங்களில் பாரியளவில் சூழல் பிரச்சனைகள் இன்னும் ஏற்பட வில்லையென்றே கூறலாம். ஏனெனில் இப்பிராந்தியங்களில் சுற்றுப்புறச் சூழலை பாதிக்க கூடியவகையில் தொழிற்சாலைகளோ அல்லது புதிய கைத்தொழில் முயற்சிகளோ இடம் பெறவில்லை எனினும் இப்பிராந்தி யங்களைப் பொறுத்து அதன் குறித்த சில பிரதேசங்களில் சுத்தமான, தரமான நீர், பற்றாக்குறைவாகவோ அல்லது இல்லாமலோ இருப்பதனை நாம் அவதானிக்கலாம். எனவே தொழிற் சாலைக் கழிவுகள், இரசாயன உற்பத்தி கள் போன்றவற்றால் நீர் மாசுபடும் என்பது இப்பிராந்தியங்களில் ஒரு சூழல் பிரச்சனையாக இதுவரை இருந் து வரவில்லை. எனினும் காடழிப்பு, வளி மாசுபடுதல் போன்றவற்றால் இப்பிராந்தியங்களின் சூழல் பாது காப்புக்கு அச்சுறுத்தல் நிலவி வரு வதைக் காணலாம். குறிப்பாக வீடமைப்பு, கட்டிடவாக்கம் போன்ற தேவைகளுக்காக காடழிக்க வேண்டிய தேவையிருக்கிறது. சூழல் மாசுபடும் என்பதற்காக, எமது தேவைகளை பூர்த்திசெய்யாமல் இருக்கமுடியாது எனவே எமது தேவைக்காக காடழிக்கும் அதே நேரம் அக்காட்டு வளத்தை மீள உருவாக்கும் நோக்கில் "மீள் மர நடுகைத்திட்டங்களையும் நடைமுறைப் படுத்த வேண்டிய தேவையுள்ளது. இத்தகைய திட்டங்களை அவ்வப் பிராந்தியங்களில் மரநடுகைக்குப் பொருத்தமான பிரதேசங்களை தெரிவு செய்து அதை அமுல்படுத்துவதன் மூலம் எமது வட- கிழக்கு சூழல் பாதுகாப்பையும் நாம் இயன்றளவுக்கு நிச்சயப்படுத்திக் கொள்ள இயலும்.

வட-கிழக்கு பிராந்தியங்களைப் பொறுத்து. வளிமாசுபடுவதால், அங்கு சூழல் பாதிப்புக்கு அச்சுறுத்தல் உருவாகியிருப்பதை நாம் அடுத்ததாக சுட்டிக்காட்டலாம். குறிப்பாக தற்போது இயங்காமல் இருக்கும் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை. பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை போன்றவை மீள இயங்கத்தொடங்கும் பட்சத்திலோ அன்றி வேறு பல புதிய தொழிற்சாலைகளோ தோற்றம் பெறும் பட்சத்திலோ அப்பிராந்தியங்களில் வளி மாசடையும் தன்மையேற்படலாம் தொழிற்சாலைகளில் இருந்து வெளி யேறும் புகையினாலோ அல்லது அவற்றின் கழிவுப்பொருட்களாலோ சுற்றுப்புறச் சூழலில் வளிமாசடையச் செய்யலாம். இன்றைய உலகில் வளிமாசுபடுதலை அளவிடக்கூடிய நவீன தொழில்நுட்பக்கருவிகள் பயன்பாட்டில் உள்ளன. இதன் அடிப்படையில் வளி மாசுபடுதலின் அளவை அளவிடும் கருவியின்துணை கொண்டு குறித்த அந்த சூழலின் வளிமாசுபடுவதற்கான மட்டத்தை முன்னரே கணிப்பீடு செய்து, அந்த மட்டத்தை அடையும் வரைக்கும், நாம் தொழிற்சாலையினது உற்பத்தி நடவடிக் கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளலாம் குறித்த அந்த மட்டத்திற்குப் பின்னர் வளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசடையும் தன்மையேற்படுமானால், அத்தகைய ஒரு சூழ் நிலையில் குறித்த அந்த உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்தியை கட்டுப்படுத்தவோ அல்லது அதை குறைக்கும் வகையிலான சட்டதிட்டங்களையோ அமுல்படுத்த முயற்சிக்கலாம். இதன் மூலம் குறித்த அந்த தொழிற்சாலைகளால் வெளிவிடும் புகை, மற்றும் கழிவுகளால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை கட்டுப்படுத்திக் கொள்ள இயலும் எமது வட-கிழக்குப் பிராந்தியங்களைப் பொறுத்தும் இத்தகைய வசதிகளை செய்வதன் மூலம் அப்பிராந்தியங்களின் அபிவிருத்தியை முன்னெடுத்துச்செல்ல முடியும் எனவே வட- கிழக்கு பிராந்தியங்களில் தொழிற்சாலைகளின் உருவாக்கத் தினூடாக பிராந்திய அபிவிருத்தியை ஏற்படுத்த முயலும் திட்டமிடலாளர்கள், அவற்றை ஸ்தாபிக்கும் அதே நேரம் சூழல் பாதிப்பை அளவிடக்கூடிய பொருத்தமான அளவீடுகளைப் பயன்படுத்துவதும் சூழல் பாதிப்பை மதிப்பிடக்கூடிய அல்லது மதிப்பிடும் குழுக்களை நியமித்து அவர்களது உதவியைப் பெற்று அவற்றின் ஆலோசனைகள் அனுமதிகள் மூலம் தமது திட்டங்களை மேற்கொள்வதும் இன்றியமையாதது. இத்தகையதொரு முன்னேற்பாடுகளை மேற்கொள்வதன் மூலமும் நாம் வட- கிழக்கு பிராந்திய அபிவிருத்தியை முன்னேடுத்துச் செல்ல முடியும்.

வட-கிழக்கு பிராந்தியங்களைப் பொறுத்து கடல் வளம் போன்ற இயற்கை வளங்களில் ஏற்படும் பாதிப்பினூடாகவும் இப்பிராந்தியங்களின் சூழல்பாதிப்பு ஏற்படவாய்ப்பிருப்பதையும் நாம் அடுத்ததொரு முக்கிய அம்சமாகக் குறிப்பிடலாம். குறிப்பாக மீன்வளத்தைப் பொறுத்து அதிகளவு வருமானத்தை உச்சப்படுத்தும் நோக்கில் மீனவர்களால் பயன்படுத்தப்படும் இழுவைப்படகுகளின் (Drawlers) பாவனை மீன்களது இனப்பெருக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துவதுடன், மீன்களது வாழ்விடங்கள் அழிக்கப்படவும் காரணமாகிறது. இந்நிலையில் எமது பிராந்தியங்களின் இயற்கை வளங்களில் ஒன்றான கடல் வளம் பாதிப்படைய வாய்ப்புண்டாகிறது. எனவே மீன்பிடித்துறையினது அபிவிருத்தியின் ஊடாக இப்பிராந்தியங்களது அபிவிருத்தியை மேற்கொள்ளத் திட்டமிடும்திட்டமிடலாளர்கள், இதனை கருத்திற்கொண்டு, மீன்வளங்களின் பெருக்கத்திற்கும் அதன் வாழ்விடங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத வகையிலான மீன்பிடி முறைகளை கவனத்திற் கொள்வதும் அவசியமாகும், இதே போல, இப்பிராந்தியங்களில் மீன்பிடியைப் பொறுத்து அது பெருமளவில் கரையோர மீன்பிடிமுறையிலேயே அதிகளவுக்கு தங்கியுள்ளதும் மீன் வளத்தைப் பாதிக்கச் செய்யலாம். எனவே தனியே கரையோர மீன்பிடி முறையை விடுத்து, ஆழ்கடல் மீன்பிடிமுறையினையும் அபிவிருத்தி செய்வதன் மூலம் அதிகளவுக்கு சூழலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இப்பிராந்தியங்களது அபிவிருத்தியை மேம்படுத்த முடியும். எனவே எமது வட-கிழக்கு பிராந்தியங்களின் அபிவிருத்தியை மேற்கொள்ளத் திட்டமிடும் திட்டமிடலாளர்கள். அத்தகைய திட்டங்கள் அந்த பிராந்தியங்களின் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத விதத்தில் சூழல் கொள்கைகளையும் அது தொடர்பான விதிமுறைகள். திட்டங்களையும் வகுப்பது மிகவும் அவசியமானதாகும்.

எனவே ஒரு நாட்டின் அரசாங்கம் பிராந்திய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் அதே நேரம் அத்திட்டங்கள் தனியே நிகழ்கால சந்ததியினரின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்ற இலக்கினை மட்டுமன்றி அவை எதிர்காலத் சந்ததியினரின் தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாகவும் எதிர்கால தேவைகளைப் பாதிக்காத வகையிலும் வடிவமைக்கப்படல் வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. இதை மையமாக வைத்தே பிராந்திய அபிவிருத்தியினால் சூழலில் ஏற்படும் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்தக்கூடிய வகையில் சூழல் கொள்கைகளை அப்பிராந்தியங்களில் அமுல்படுத்த வேண்டுமென்ற கருத்து தற்போது மேலோங்கி வருகின்றது. குறிப்பாக சூழல் முகாமைத்துவத்தின் திறனை மேம்படுத்தல் தொழில்நுட்பத்தின் பரிமாற்றம், சூழல் தொடர்பான கல்வியை வழங்குதல் போன்ற சில சூழல் கொள்கைகளை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. தவிர ஏனைய நாடுகளது தேசிய, பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் குறித்த முன்னுரிமை அபிவிருத்தித்திட்டத்தின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பாக சுத்தமான நீர்வள விநியோக முகாமைத்துவம், நிலவள அபிவிருத்தி, நகரமயமாக்கம். நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் தகவல் அனுபவ அறிவு போன்றவற்றின் பரிமாற்றம் என்பவற்றை குறித்ததொரு பிராந்தியம் தானும் அடைந்து கொள்ளும் விதத்தில் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ள எத்தனிக்கலாம் அத்துடன் சூழல் பாதுகாப்புக்கான சில நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வதன் மூலம் இதை இயன்றளவு கட்டுப்படுத்த முயலலாம். குறிப்பாக சூழல் ஒழுங்கு விதிகளை கடைப்பிடிப்பதற்கு கட்டாயப்படுத்தல். வரியற விடுதல் போன்றவற்றை குறிப்பிடலாம் எனினும் இத்தகைய செயற்பாடுகளை கிராமியப் புறங்களிலும் பார்க்க நகர்ப்புறங்களில் மேற்கொள்வது சுலபமானது என்பது இங்குகுறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட சில கொள்கைகளைத்தவிர ஒரு நாடு தனது பிராந்தியத்தின் சூழல் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ சூழல் கொள்கை திட்டமிடல்கள், புதிய கொள்கைக் கருவிகள் போன்றவற்றின் பயன்பாட்டை மேம்படுத்துவதன் மூலம் சூழல் கொள்கைகள் அந்த நாட்டின் பிராந்திய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கிறது. இவை துறை சார்ந்த கொள்கைகளாகவும் அமையலாம்.

❖ போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி, போன்ற துறைசார்ந்த கொள்கைகளில் ஒழுங்கிணைப்பை, சூழல் முகாமைத் துவத்தின் மூலம் மேம்படுத்தல்

❖ துறைசார்ந்த பிராந்திய அபிவிருத்தி கொள்கைகளிலும், திட்டமிடல் களிலும் தந்திரோபாயமான சூழல் மதிப்பீடுகளை மேம்படுத்தல்

❖ தேசிய மட்டத்தில் வினைத்தி றனான சூழல் முதலீட்டு தந்தி ரோபாயங்களை அபிவிருத்தி செய்தல் (Effective environmental Investment)

❖ இயற்கை வள பாதுகாப்பை ஏற்படுத்த வசதி செய்தல்

❖ வினைத்திறனான சூழல் கொள்கை களது அபிவிருத்திக்கும் அதனை அமுல்படுத்த தேவையான அனுபவத் தையும், நிபுணத்துவத்தையும் பரிமாற்றம் செய்தல்

போன்ற மேலும் சில நடவடிக்கை களை மேற்கொள்ளலாம் இவற்றுள் பொருத்தமானதும், எமது பிராந்தியங் களில் அமுல்படுத்தப்படக் கூடியது மான கொள்கைத் தெரிவுகளை மேற்கொள்வதன் மூலம் நாமும் எமது வட – கிழக்கு மாகாணங்களது பிராந்திய அபிவிருத்தியை திட்டமிடு வதுடன் அதன் சூழல் பாதுகாப்பையும் பேணிக்கொள்ள முடியும்.

தொகுத்து நோக்குமிடத்து எமது வட - கிழக்கு மாகாணங்களது பிராந்தி யங்களைப் பொறுத்து அங்கு அபி விருத்தியை ஏற்படுத்த முயலும் அதே வேளையில் அதை அடையும் நோக்கில் நகர்ப்புற மக்களது தேவைகள் பூர்த்தி செய்யப்படும் போது, அங்குஏற்படும் சூழல் மாசுபடுதல் பிரச்சனைகள் ஒருமுக்கியமான சவாலாக இருந்து வருகிறது. தவிர இப்பிராந்தியங் களின் வறுமையை தணிப்பதற்காக முயற்சிகளை மேற்கொள்ளும் போதும். வறுமைக்கும் சூழலுக்கும் இடையி லான தொடர்பை கருத்திற் கொண்டு அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதும் ஒரு இன்றியமையாத தேவையாகும். அதே போல பொருளா தார அபிவிருத்தி தந்திரோபாயங் களை கடைப்பிடிக்கும் போதும் சூழல் பாதுகாப்பைக் கவனத்திற் கொள்வதும் அவசியமாகும். பொதுவாக இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளது பிராந்திய அபிவிருத்திக்காக விரைவான வளர்ச்சி கண்டுவரும் கைத்தொழிலாக்க செய்முறைகள் காடழிப்புப்போன்ற விரும்பத்தகாத விளைவுகளையும் ஏற்படுத்திவருகிறது. தமது பிராந்திய அபிவிருத்தியுடன் இணைந்தவகையில் இடம் பெறும் ஏனைய தேவைகளுக்கான கேள்வியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிப்பும் சூழல் பாதுகாப்புக்கான ஒரு அச்சுறுத்தலாகவே அமைகிறது. இதனை கருத்திற் கொண்டு, ஒவ்வொரு நாடுகளும் தமது சூழல்பாதுகாப்பை உத்தரவாதப் படுத்தும் வகையில் சூழல் பாதுகாப்பு கொள்கைகளை கடைப் பிடிக்க வேண்டியது இன்றியமையாத ஒரு தேவையாகும். இந்தவொரு பின்னணியில் இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தும் அவற்றின் பிராந்திய அபிவிருத்திக்கு முன்னுரிமையளிக்க வேண்டிய தேவையுள்ள அதே நேரம், அப்பிராந்தியங்களது சூழல் பாதுகாப்பை உறுதி செய்வதும், அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதும் முக்கியமானதொரு பணியாகும்.


Referebce

1. Tom tietenberg, Colby College, 5th edition, "Environmental and Natural Resource economics"
2. Thomas sterner, Resource for the future, washington, DC, USA, "Policy instruments for environmental and Natural Resource management'
3. Tatyana P.Soubbotina, Katherine Sheram, Published by world Bank ISBN, 2000,October, 'Beyond economic growth: meeting the challenges of Global Development"
4. Web sites

1. www.riverdale.k.or. us/~ellieaoq/ sri%20 Lanka htm, "Sri Lanka. environmental Issues"
2. www.k.shtpc. com/ free -Sri Lanka. htm. free srilanka.
3. www. Shonan - inet. or. lP/ ~ gef 20/ E/ ratnap.htm "urbanization and social changes in Srilanka"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு பிரதேச அபிவிருத்தியில் சிறு வணிக கைத்தொழிலின் பங்கு.

## The role of small Business and industry in North East Regional development

*Rajadurai Sivanathan,*
*3rd year (2003)*
*Economics (Special)*
*Department of Economics*
*University of Jaffna*

இன்று உலகில் பல்வேறுபட்ட வியாபார முறைகள் விருத்தியடைந்த நிலையில் உள்ள போதிலும் தொழில் முயற்சியாண்மையும் சிறுவணிகமும் இலங்கையில் முக்கியமான துறையாக காணப்படுகின்றது. இலங்கையில் மொத்த தேசிய உற்பத்தியில் 0.8% பங்களிப்பையும் மொத்த வேலை வாய்ப்பின் 40% வீதத்தையும் கொண்டு இருப்பதுடன் அன்னிய செலாவணி வருமானத்திலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைக் கொண்ட துறையாகவும் காணப்படுகின்றது. நாட்டினுடைய பொருளாதார விஸ்தரிப்பை அபிவிருத்தி செய்து வரும் துறையாக சிறுவணிகத்தில் முயற்சியாண்மை காணப்படுகின்றது.

ஒருவர் தனக்கு கிடைக்கக் கூடிய வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு பொருட்கள் சேவைகளை இலாப நோக்கில் உற்பத்தி செய்வதற்கும் வளங்களை ஆற்றல் மிக்கதான செயற்பாடாக்கவும் சிறப்பு செயற்பாடாகவும் ஈடுபடும் வியாபார முயற்சியாண்மையை நாம் வியாபார நிறுவனங்கள் என அழைக்கலாம். இந்த வகையான முயற்சியாளர்கள், சிறுவணிகத்தை ஆரம்பித்து அதனை வளர்ச்சியடையச் செய்கின்றார்கள்.

சிறுவணிகத்தை விபரிப்பது, வரை விலக்கணப்படுத்துவதைவிட இலகுவானது ஆகும். BOLTON அறிக்கையின் படி சிறுவணிகத்தை பின்வருமாறு வரையறுக்க முடியும்.

''சிறுவணிகம் ஒரு சிறிய நிறுவனமாகவும் சந்தையில் ஒப்பீட்டு ரீதியில் குறைந்தளவான பங்கையே வகிக்கின்றது''

"சிறு வணிகம் உரிமையாளராலோ அல்லது பங்காளர்களினாலோ தனிப்பட்ட முறையில் நிர்வகிக்கப்படுகின்றது. இது ஒரு ஒழுங்கான முகாமைத்துவ வழி முறையினால் ஒழுங்குபடுத்தப்படுவதில்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வமைப்பானது சுதந்திரமானது. இது பெரிய நிறுவனங்களின் சிறு பகுதியாக கருதாமல் அதன் முகாமையாளரால் அல்லது உரிமையாளரால் நிறுவனம் சம்பந்தமான தீர்மானங்களை எடுக்கும் பொழுது வெளிக் கட்டுப்பாடுகளால் கட்டுப்படுவதில்லை.

சிறுவணிகத்தை, வேலையாட்களின் எண்ணிக்கையையும், மொத்த முதலீட்டின் அளவினையும், கொண்டு, சுயதொழில் திட்டம், சிற்றளவுத்திட்டம், நடுத்தரள வுத்திட்டம், பேரளவுத்திட்டம் என வரையறை செய்து கொள்ளமுடியும். இலங்கையில் கைத்தொழில் விஞ்ஞான அலுவலக அமைச்சின் வரைவிலக்கணத்தின் படி மொத்த முதலீட்டின் அளவு

| திட்டத்தின் வகை | மொத்த முதலீட்டுத் தொகை |
|---|---|
| 1. சுய தொழில் திட்டம் | ரூபா 25,000ற்கும் குறைந்தது. |
| 2. சிற்றளவுத திட்டம் | ரூபா 25,000ற்கும் 25,00,000 இடைப்பட்டது. |
| 3. நடுத்தரளவுத் திட்டம் | ரூபா 25,00,000ற்கும் 4000,000 இடைப்பட்டது. |
| 4. பேரளவுத் திட்டம் | ரூபா 4000,000ற்கும் மேற்பட்டது |

எனினும் மேலே கூறப்பட்ட பிரமாணங்கள் மாற்றங்களைக் கொண்டவை. இவை வியாபாரத்தின் தன்மையைப் பொறுத்து மாற்றம் அடையும். தொழிலாளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது.

| திட்டத்தின் வகை | தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. சுய தொழில் திட்டம் | குடும்ப அங்கத்தவர்கள் |
| 2. சிற்றளவுத் திட்டம் | 02 - 12 க்கும் இடைப்பட்ட ஊழியர்கள் |
| 3. நடுத்தரளவுத் திட்டம் | 12 - 24 க்கும் இடைப்பட்ட ஊழியர்கள் |
| 4. பேரளவுத் திட்டம் | 24க்கும் மேற்பட்ட ஊழியர்கள் |

இப்பிரமாணங்களும் மாற்றமடையக் கூடியன. இவையும் வணிகத்தின் தன்மையைப் பொறுத்து மாற்றம் அடையலாம்.

சிறுவணிகத்தில் பொதுவாக காணப்படக்கூடிய விசேட குணாதிசயங்கள்.

1) நிறுவனம் உரிமையாளரால் / சொந்தக்காரரால் நிர்வகிக்கப்படுதல்.
2) நிறுவனத்தின் மூலதனத்தின் பெரும் பகுதி உரிமையாளரால் முதலிடப்பட்டு இருக்கும்.
3) பொருட்கள் / சேவைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் பகுதிகள் காணப்படும்.
4) வளர்ச்சியடையாத தொழில்நுட்பம் கொண்டதுறையாக காணப்படும்.

சிறந்த தொழில் முயற்சியாளனுக்கு இருக்க வேண்டிய அடிப்படை குணாதிசயங்கள்.

1) எந்தவொரு செயற்பாடுகளும் இல்லாத வியாபாரத்தை வெற்றிகரமாக மாற்றுவதற்கு தொழில் முயற்சியாளனின் புதிய கண்டுபிடிப்புக்கள், புதிய யுத்திகளை கையாளும்திறன், விடாமுயற்சி, தொழில் முயற்சியாளனின் ஊக்குவிப்பு திறன் என்பனவும் தொழில் முயற்சியில் அவருடைய ஈடுபாட்டையும் உறுதிப் பாட்டையும்குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) ஒரு தொழில் முயற்சியாளனுக்கு சுமூகமான சமூக இயல்பு முக்கிய காரணியாகும் தொழில் முயற்சியாளன் ஏனைய ஊழியர்களுடனும், வழங்குநர்களுடனும், அரச அதிகாரிகளினுடனும் ஏனையவர்களுடனும் சுமூகமான உறவைப் பேணுவதன் மூலம் சிறந்த வியாபார முகாமையாளராக தொழிற் பட முடியும்.

3) தொழில் முயற்சியாளனுடைய புதிய கண்டுபிடிப்புத் தன்மையானது அவருடைய புதிய பொருளை விருத்தி செய்வதிலும், அதற்கு கையாளும் தொழில் நுட்பமுறையிலும் அதோடு தொடர்புடைய செயற்பாடுகளிலும் தங்கியுள்ளது. இவை துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் போட்டித் தன்மை உள்ள தற்கால வியாபார சூழ்நிலைக்கு ஏற்புடையதாக அமைதல் வேண்டும். இவ்வாறான போட்டித் தன்மையான சூழ்நிலையில் தொழில் முயற்சி வெற்றிபெறுவதாயின் அவருடைய புதிய கண்டுபிடிப்புத் தன்மையிலும், விருத்தியிலும் பெருமளவு தங்கியுள்ளது. இது உற்பத்தி, மனித வளத்தினூடாக போட்டியாளர்களின் சாதக தன்மையை நோக்கி போட்டியாளர்களை விடமேலே உயர்வதற்கு வழிவகுக்கும்.

4) வெற்றிகரமாக இயங்கிக் கொண்டு இருக்கும் வியாபாரத்தில் சரியான நேரத்தில் சரியான தீர்மானம் எடுத்தல் எந்த தொழில் முயற்சியாளனுக்கும் பிரச்சனையாகவே உள்ளது. பிரச்சனை ஒன்று தோன்றும் போது அப்பிரச்சனைக்கு தீர்வு காணமுனைய முன்பு அப்பிரச்சனை தோன்றுவதற்கான அடிப்படை காரணங்கள் எவை என இனம் கண்டு அவற்றுக்கு தீர்வு காண முனைதல் வேண்டும். அல்லாத சந்தர்ப்பத்தில் பிரச்சனையை தீர்க்க முனையும் போது மேலும் பல பிரச்சனைகளுக்கு வழி வகுக்கும். தொழில் பிரச்சனைகளுக்கு வெற்றி கரமான தீர்வு காண்பது என்பது முயற்சியாளனுடைய தர்க்க ரீதி யான நிலைமைக்கு ஏற்ற முறையில் அவற்றை அணுகி அதற்கு ஏற்ற முறையில் முடிவு எடுப்பதில் தங்கியுள்ளது.

5) தொழில் முயற்சியாளின் முகாமைத்துவ அறிவினை கொண்டு இருக்க வேண்டும், அதாவது திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், வழி நடத்தல் / ஊக்கப்படுத்தல், கட்டுப்படுத்தல் போன்றவற்றின் செயற்பாடுகளில் போதியளவு அறிவினைக் கொண்டு இருப்பது ஒரு முயற்சியாளனுக்கு அவசியமானது ஆகும்.

**ஒரு தொழில் திட்டத்தை ஆரம்பிக்கும் போது தொழில் முயற்சியாளர்கள் எதிர் நோக்க வேண்டிய பிரச்சினைகள்.**

யாழ்மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சிறு தொழில் முயற்சியாளர்கள், வெளியகப் பிரச்சனைகள், உள்ளகப்பிரச்சனைகள் எதிர் கொள்கின்றார்கள் அவையாவன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) அமைவிடத்தை தெரிவு செய்வதில் உள்ள பிரச்சனைகள்.
2) சந்தையை கண்டுபிடிப்பதிலும் இனம் காண்பதிலும் உள்ள பிரச்சனைகள்
3) மூலப் பொருட்களை பெறுவதில் உள்ள பிரச்சனைகள்.
4) இயந்திர உபகரணங்களைப் பெறுவதில் உள்ள பிரச்சனைகள்.
5) திறன் உள்ள ஊழியர்களை பெறுவதில் உள்ள பிரச்சனைகள்
6) நிதி கிடைப்பனவில் உள்ள பிரச்சனைகள்
7) கட்டடத் தேவைகள் தொடர்பான பிரச்சனைகள்
8) எது எமது வணிகத்துக்கு சிறந்த தொழில்நுட்பம் என்பதில் உள்ள பிரச்சனைகள்.

போன்ற பல பிரச்சனைகளை பல வியாபார முயற்சியாளர்கள் எதிர் கொள்கின்றார்கள். ஒரு திட்டத்தை தெரிவுசெய்யும் போது இப்பிரச்சனைகளை எதிர் கொள்கின்றார்கள். இதனை காரணவிளைவு என்ற கொள்கையைப் பயன்படுத்தி காரணங்களையும் தாக்கங்களையும் அடையாளம் கண்டு பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு கொள்ளலாம். ஒரு திட்டத்தை ஆரம்பிக்கும் முன்பே எதிர் கொள்ள வேண்டிய ஆபத்துக்கள் பற்றி ஆய்வு செய்து அவற்றை எதிர் கொள்ள தயாராக இருப்பதன் மூலம் எதிர்கால ஆபத்துக்களை குறைத்துக் கொள்ள முடியும்.

வடக்கு கிழக்கு பிரதேசத்தில் சிறுவணிக முயற்சியின் தோல்விக்கான காரணம்.

**1) சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு போதிய பயிற்சியின்மை**

i தொழில் முயற்சியாளர் எவ்வாறு சிறுவியாபாரத்தைஆரம்பிப்பது?

ii எவ்வாறு முகாமை செய்வது?

iii பொருட்கள் சேவைகளை எவ்வாறு சந்தைப்படுத்துவது

iv சந்தைக்கு தேவையான பொருட்களை எவ்வாறு உற்பத்தி செய்வது

v வியாபாரம் சம்பந்தமான நடவடிக்கைகளையும் நிதி தகவல்களை எப்படி பதிவு செய்வது.

vi வியாபார திட்டத்தை எவ்வாறு திட்டமிடுவது, எதிர்வு கூறுவது.

vii நிதி உதவிகளை வழங்கும் நிறுனங்களுக்கு எவ்வாறு நிகழ்ச்சி திட்டத்தை தயாரிப்பது?

viii பரம்பரை ரீதியாக தந்தையின் முயற்சியை உரிய பயிற்சி இன்றி மகன் பொறுப்பெடுப்பதனாலும் அவர் தொழில் முயற்சி சம்பந்தமான போதிய அறிவின்மையால் தோல்வியடைகின்றது.

**2) முகாமைத்துவ குறைபாடுகள்.**

முகாமைத்துவ குறைபாடுகள் என்று நோக்கும் போது முயற்சியாளர்களினால் தனிப்பட்ட முறையில் ஏற்படுத்தப்பட்டதாக இருக்கும்

i குறித்த இலக்கு சந்தையை / வாடிக்கையாளரை அடையாளம் காணமுடியாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii வியாபார பகுதியை விபரிக்க முடியாமை.

iii அதிகாரத்தை பகிர்ந்தளிக்காமை.

iv விளம்பரத்தை ஒரு முதலீடாக கருதாமல் செலவாக கருதுகின்றமை

v விலையிடலில் உள்ள உபாயங்களை தேர்ந்து எடுப்பதில் உள்ள போதிய அறிவின்மை.

vi விநியோக வழிகளை விளங்கிக் கொள்வதில் உள்ள தாமதம்

vii திட்டமிடப்படாத எதிர்கால விரிவுபடுத்தல், ஊக்குவிப்பின்மை போன்றவை முகாமைத்துவ குறைபாடுகளுக்கு இட்டுச்செல்கின்றது.

**3) போதியளவு நிதி வசதியின்மை.**

சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு சில நிதி நிறுவனங்கள், நிதி வசதிகளை ஏற்படுத்தினாலும் அது எல்லா தொழில் முயற்சியாளர்களுக்கும் சென்றடைவதில்லை.

i நிதி வசதிகளை ஏற்படுத்தும் நிறுவனங்கள் முயற்சியாளர்களுக்கு தேவையான நிதி வசதிகளை வழங்குவதில்லை அதில் வரையறுக் கப்பட்டுகடன்வசதி வழங்குகின்றமை.

ii நிதி நிறுவனங்களில் தொழில் முயற்சியாளர்களின் நம்பிக்கை இன்மை காரணமாக அவை நிதி வசதிகளை வழங்கமுன் வருவதில்லை

iii நிதி நிறுவனங்கள் எதிர்பார்க்கின்ற முறையில் முயற்சியாளர்கள் நிதி நிறுவங்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியாமை

iv நிதி நிறுவனங்களில் காணப்படும் இறுக்கமான கட்டுப்பாடுகள்.

**4) போதிய சந்தை வாய்ப்பின்மையும், இறக்குமதி பிரதியீட்டுப் பொருட்களின் பிரதியீடும்.**

i சிறு தொழில் முயற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சேவைகளுக்கு போதியளவு சந்தை வாய்ப்பு இன்மை

ii இவ்வுற்பத்தி பொருட்களின் விலையில் காணப்படும் தளம்பல் நிலைமை

iii இப்பொருட்களுக்கான இறக்குமதி பிரதியீட்டுப் பொருட்கள் குறைந்த விலையில் காணப்படுகின்றமை, இதனால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் இவ்வுற்பத்திகளை கைவிடப்படுகின்றமை.

iv இவ்வுற்பத்திப் பொருட்களுக்கு வெளிநாட்டு சந்தை வாய்ப்பு குறைவாக காணப்படுகின்றமை.

**5) சமூக வரையறைகள்**

திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் பல்வேறு வகையான தொழில் வாய்ப்புகள் கிடைப்பதனால் பரம்பரை பரம்பரையாக செய்து வந்த தொழில்களை கைவிட்டு அரச வேலையினை பெரிதும் விரும்புகின்ற நிலைமை

சிறு தொழில் வாணிபத்தை மேற்கொள்வது ஒரு தாழ்வானது என்று முயற்சியாளர்கள் கருதுகின்ற நிலைமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய தோல்விகள் ஏற்படாது இருப்பதற்கான வழிவகைகளை கண்டுபிடித்து அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும் அவற்றுக்கான தீர்வுகள் என்ற வகையில் நோக்கும் போது.

1) சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு போதியளவு பயிற்சிகளை வழங்கக் கூடிய நிறுவனங்களை அமைத்து அவற்றின் மூலம் தொழில் முயற்சியாளர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல், அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் இத்தகைய முயற்சியில் ஈடுபடுகின்றமை.

eg:- பற்ரீசியன், T.R.R.O, Computer Centers, Jaffna Technical College, Jaffna College

போன்ற நிறுவனங்கள் போதிய பயிற்சிகளை வழங்குகின்றன. ஆனால் இவை எவ்வளவு தூரம் தொழில் முயற்சியாளர்களை சென்றடைகின்றது என்பதில் உள்ள பிரச்சனைகள்.

சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு போதியளவு பயிற்சிகளை வழங்குவதன் மூலம் சிறுவணிக தோல்வியை குறைத்து கொள்ள முடியும்.

2) வன்னி பிரதேசங்களிலும், ஏனைய பிரதேசங்களிலும் காணப்படும் மிகை உற்பத்தியான நெல்லினை/ அரிசியினை கொள்வனவு செய்து அவற்றை வறுத்து அரிசிமா ஆக்கி பைக்கற்றுக்களில் அடைத்து விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகள் தொடர்ந்து தமது விவசாயத்தினை மேற் கொள்வதற்கும், பின் அரிசி ஆலைகளுக்கு அவற்றினை மாற்றி மா ஆக்கும் போது தொழில் வாய்ப்புகள் பெருகுவதுடன், மிகை உற்பத்தியில் விவசாயிகள் பாதிக்கப் படமாட்டார்கள், அத்துடன் வறுத்த அரிசி மாவிற்கான கேள்வி நாட்டின் ஏனைய பகுதிகளில் அதிகமாக இருப்பதனை காணலாம்.

3) யாழ் மாவட்டத்திலும், வன்னிப் பிராந்தியத்திலும் காணப்படும் மிகையான பால் உற்பத்தியினை வேறு தேவைகளுக்கு பயன்படுத்தல் வேண்டும். அதாவது மிகையான பாலினை கொள்வனவு செய்து அவற்றினை தயிராக மாற்றி அமைத்து அவற்றினை மக்களுக்கு விற்பனை செய்ய முடியும், இதன் மூலமும் பால் உற்பத்தியால் பண்ணையாளர்கள் நட்டம் அடைவது தவிர்க்கப் படுகின்றது.

4) வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் காணப்படும் பெரும் வளமாக பனை வளம் காணப்படுகின்றது. அவ்வளத்தினை அதிகம் பயன்படுத்த முடியும், பனையின் கங்கு மட்டையை கொள்வனவு செய்கின்றார்கள், அவற்றினை பயன்படுத்தி தும்புகள் எடுக்கப்பட்டு தும்புத்தடி உற்பத்தி செய்கின்றார்கள். மேலும் பனை ஓலையில் இருந்து பாய், பெட்டி, கடகம், அழகு சாதனப் பொருட்கள் உற்பத்தி செய்ய முடியும் மேலும் யாழ்ப்பாணத்து பனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழத்தினையும் ஒடியல் போன்றவற்றினை தென்பகுதியில் உள்ள மக்கள் விரும்பி கொள்வனவு செய்கின்றார்கள் இதன் மூலம் குடிசைக் கைத்தொழிலை வளர்ச்சியடையச் செய்ய முடியும். குடிசைக் கைத்தொழிலை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் ஆயின் இறக்குமதி பிரதியீட்டு பொருட்களை தடைசெய்தல் வேண்டும், குறிப்பாக ஓலை பாய்க்கு பதிலாக பிளாஸ்ரிக் பாய் பயன்படுத்தப்படுகின்றது. அர்ச்சனைத் தட்டு பனை ஓலையால் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆனால் இன்று அவற்றுக்கு பதிலாக பிளாஸ்ரிக் அர்ச்சனை தட்டுக்கள் பயன்படுத்துகின்றமை.

(eg:- நயினாதீவு அம்மன் கோயிலில் காண முடியும்) எனவே பிரதியீட்டு பொருட்களை தடை செய்தல் வேண்டும். அத்துடன் பனை வளத்தினை பாதுகாத்தல் வேண்டும். இதன் மூலம் குடிசைக் கைத்தொழிலை வளர்க்க முடியும்.

5) குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும், வாழைப் பயிர் செய்கையை எடுத்து நோக்கின், அண்மைக் காலங்களில் வாழைப் பழத்தின் விலை 1kg 5/=, 6/= எனக் காணப்பட்டது. இவ்வாறான நிலமையில் இவற்றினைக் கொள்வனவு செய்து "Fruit Jam" உற்பத்திக்கு பயன்படுத்த முடியும், அது போன்று முந்திரிப் பழத்தையும் செய்தல் வேண்டும், இதற்கான தொழில் நுட்பத்தினை வெளி நாடுகளில் இருந்து கொண்டு வந்து வளங்களை பயன்படுத்தும் போது பலருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுவதோடு முயற்சியாளர்களை பாதுகாக்க முடியும்.

**❖ முகாமைத்துவத்தில் உள்ள குறைபாட்டை நீக்குதல் வேண்டும்.**

அதாவது அதிகாரங்களை ஏனையவர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். இதன் மூலம் நிறுவனங்களை ஒழுங்கு முறையாக செயற்படுத்த முடியும். அத்துடன் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் நிறுவனம் இயங்க வேண்டும் ஏனைய ஊழியர்களின் கருத்துக்களுக்கும் மதிப்பளித்தல், இத்தகைய நடைமுறைகள் மூலம், ஒருநிறுவனத்தின் முகாமையை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்த முடியும்.

❖ சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு போதிய நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும் தொழில் முயற்சியாளர்களுக்கு குறைந்த வட்டியில் கடன்களை வழங்குதல், நீண்டகால கடன்வசதிகளை வழங்குதல், முயற்சியாளர்கள் விரும்புகின்ற அளவில் கடன் வசதி கிடைக்கின்றமை போன்றவை மூலம், நிதி வசதிகளை விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் யாழ் மாவட்டத்தில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்கும் நிறுவனங்களாக பின்வருவனவற்றை குறிப்பிட முடியும். மக்கள் வங்கி, வர்த்தக வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, அபிவிருத்தி நிதிகூட்டுத் தாபனம், தேசிய அபிவிருத்தி வங்கி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய வங்கி, சமுர்த்தி வங்கி போன்றவற்றை குறிப்பிட முடியும்.

❖ சிறுதொழில் முயற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு போதியளவு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும், அதாவது யாழ்மாவட்டத்துக்கு வெளியே சந்தை வாய்ப்பை ஏற்படுத்தல் வேண்டும் அத்துடன் வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களை உருவாக்குவதும் இறக்குமதி பிரதியீட்டு பொருட்களை தடைசெய்தல் வேண்டும் அல்லது வரிகளை விதித்து அவற்றை கட்டுப்படுத்த வேண்டும்.

❖ சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படும் நிதி வசதிகளில் அரசியல்வாதிகளின் செல்வாக்கினை கட்டுப்படுத்தல் வேண்டும். அத்துடன் நிதி நிறுவனங்களின் மோசடிகளை நீக்குதல் வேண்டும்.

❖ சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக குறிப்பிட்டளவு மானியத்தை அரசாங்கம் வழங்குதல் வேண்டும்.

❖ சிறு தொழில் முயற்சியாளர்கள் நட்டம் அடையும் போது அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும், அதாவது நட்ட ஈட்டை வழங்குதல் வேண்டும், இதன் மூலம் சிறுவணிக தோல்வியை தவிர்த்துக் கொள்ள முடியும்.

❖ சிறுதொழில் முயற்சியாளர்கள் ஒரு குறிப்பிட்ட உற்பத்தியில் மட்டும் தங்கியிருக்காது பலவகையான உற்பத்தி பொருட்கள், சேவைகளை வழங்குவதன் மூலம், வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

❖ நவீன தொழில்நுட்பங்கள் வளர்ச்சியடைந்து கொண்டு செல்கின்ற நிலைமையில் பழைய தொழில்நுட்ப முறையே பெரும்பாலும் காணப்படுகின்றது. இந்நிலையில் பழைய நுட்ப முறைகளை கைவிட்டு புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தல் வேண்டும், அவற்றுக்கான பயிற்சிகளையும் வழங்குதல் வேண்டும்.

❖ சிறுதொழில் முயற்சியாளர்கள் சரியான நேரத்தில் சரியான முறையில் தீர்மானம் எடுக்கும் வல்லமையினைக் கொண்டு இருத்தல் வேண்டும். இங்கு உரிமையாளரோ முகாமையாளரோ வெளிக்கட்டுப்பாடுகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றை கவனத்தில் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்வதன் மூலம் வெற்றியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எமது பிரதேசத்தில் மனிதவளமும் ஏனைய வளங்களுமான உற்பத்தி வளங்கள் நாடு முழுவதும் பரவலாக காணப்படுகின்றது. இவற்றினைப் பயன்படுத்தா விடின் இவை பயனற்றவையாகவே காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக மனித வளமானது பல்வேறு தன்மைகளை கொண்டு காணப் படுகின்றது. சிறந்த தொழில் நுட்பம் தெரிந்த கலைஞர்கள், கைவினைஞர்கள் எமது பிரதேசத்தில் காணப்படுகின்றனர் இவர்களுக்கு செப்புவேலை, ஆபரணங்கள், அணிகலன்கள், தச்சுவேலை, மரவேலை போன்ற பல்வேறு வகையான தொழில் கள் காணப்படுகின்றன. இவற்றை சிறந்த முறையில் பயன்படுத்தும் போது வருமானம் அதிகரிப்பதுடன் எமது பிரதேசம் சிறந்த வளம் கொண்ட இடமாக மாற்றம் அடையும்.

பெரிய தொழில் நிறுவனங்களின் வருகையுடன் சிறிய தொழில் நிறு வனங்கள் சந்தையை விட்டு வெளி யேறிவிடுகின்றதா?

பெரிய வியாபார நிறுவனங்களின் வருகையுடன் சிறுவியாபாரங்கள் தொழிலை விட்டு விலகி விடுகின்றன என்ற கருத்து காணப்படுகின்றது. பொதுவாக நோக்குகின்ற போது பெரிய வியாபார நிறுவனங்களும் சிறிய வியாபார நிறுவனங்களும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டவையல்ல இவை ஒன்றில் இருந்து ஒன்று பல வழிகளில் வேறுபட்டவை ஆகும். மேலும் பெரிய வியாபார நிறுவனங் களின் வருகையினால் சிறிய வியாபார நிறுவனங்கள் வளர்ச்சியடைகின்ற நிலைமை காணப்படுகின்றது. உதாரண மாக. யுனிலிவர்ஸ் நிறுவனத்தை எடுத்துக் கொண்டால் இவர்களால் உற்பத்தி செய்யப்படும் சவர்க்காரம், பற்பசை, சம்போ, மாஜரீன் போன்ற பொருட்கள் எப்படி நுகர்வோரை சென்றடை கின்றது எனப் பார்த்தால் எமது பிரதேசத்தில் அமைத்துள்ள சில்லறை வியாபார நிறுவனங்களிடம் இருந்து கிடைக்கின்றது.

எமது பிரதான உணவான அரிசியை எடுத்துக் கொண்டால் நெல்லானது ஆயிரக்கணக்கான சிறு உற்பத்தியாளர் களால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவர்கள் தமது சொந்த தேவைக்கு மேலதிகமாக உள்ள நெல்லை விற்ப னை செய்கின்றார்கள். வன்னி பெரு நிலப்பரப்பில் உற்பத்தி செய்யப்படும் நெல்லானது மொத்த வியாபாரிகளினால் கொள்வனவு செய்து அவற்றை ஆலைக்கு எடுத்து சென்று பின்பு அரிசியாக்கி சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. பின்பு சில்லறை வியாபாரிகள் மூலம் நுகர்வோரை சென்றடைகின்றது.

இவ்வாறு நோக்கப்படுகின்ற போது பல வழிகளில் பெரிய நிறுவ னங்கள் சிறிய வியாபார நிறுவனத் தின் வளர்ச்சிக்கு உதவியாக உள்ளன. அதே போன்று சிறிய நிறுவனங்களின் சேவை பெரிய நிறுவனங்களுக்கு தேவைப்படுகின்றது.

எனினும் பெரிய நிறுவனங்களின் வளர்ச்சி சிறியவற்றுக்கு பாதகமாக அமையும் என்பதை முற்றாக மறுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. பெரிய நிறுவனங்கள் மூலதனச் செறிவு கொண்டவையாக காணப்படுகின்றன. இவற்றின் உற்பத்தி செலவு குறைவாக உள்ளபோது பொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்வார்கள் ஆனால் சிறிய நிறுவனங்களின் முதல் செறிவு குறை வாக காணப்படும் போது அவற்றின் உற்பத்தி செலவு அதிகமாக காணப் படும் இதனால் இவர்கள் பொருட்களை விற்பனை செய்யமுடியாத நிலையிலும் போட்டி போடமுடியாத நிலையிலும் சிறிய நிறுவனங்கள் சந்தையை விட்டு விலகி விடுகின்றன.

ஒரு முயற்சியாளனுக்கு தொழில் திட்ட அறிக்கை தயாரிப்பது பின்வரும் காரணங்களுக்கு மிக முக்கியமானது/ நன்மையுடையதாக காணப்படுகின் றது.

1) முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காணலாம். முதலீடு செய்யப்படக் கூடிய வரையறுக்கப்பட்ட வளங்க ளுக்கு ஏற்ப திட்டங்களை அடையா ளம் கண்டால், அவை வருமானத்தை பெற்றுத் தரும்.
2) முதலீட்டில் போதிய வருவாய் கிடைக்கின்றதா என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள முடியும்.
3) வரையறுக்கப்பட்ட வளங்களை எப்படி மிக திறமையாக பயன்படுத்த முடியும் என்பதைக் கண்டு கொள்ள முடியும்.
4) மொத்த முதலீட்டு செலவை அறிந்து கொள்ளலாம்.
5) முதலீட்டுத் தொகைக்கு மேலாக வெளியாரிடமிருந்து பெறவேண்டிய தொகையை நிர்ணயிக்க முடியும் (வங்கி, ஏனைய நிதி, மூலங்கள்)
6) திட்டத்தின் தந்திரோபாயங்கள், செயற்பாடுகள், பொறுப்புக்களை அடையாளம் காணலாம்.
7) நிகழ்ச்சி திட்டத்தை நடைமுறைப் படுத்தலாம்.

## உசாத்துணை நூல்கள்


1) Small Business Management - Longeneekermoore
2) தொழில் முயற்சியாண்மையும் சிறுவணிக முகாமைத்துவம்


by:- வ.கனகசிங்கம் B.B.A (EUSL)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு – கிழக்கு பிரதேச அபிவிருத்தியில் கைத்தொழில் நகரமயமாக்கம்

# Industrial Urbanization in North East Regional Development

*Mr.Santhirasegaram, Suseekaran*
*4th year (2003)*
*Economics (Special)*
*Department of Economics*
*University of Jaffna*

**அறிமுகம்**

வடக்குக் கிழக்குப் பிரதேச அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்படுகின்ற இக்கட்டுரையில் நகராக்கம் சம்பந்தமாகவே முக்கியமாக ஆராயப்படுகின்றது. ஒரு நாடு அபிவிருத்தி அடைவது என்பது குறித்த சில பிரதேசங்களிலும், அப்பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களிடமும் ஏற்படுகின்ற வளர்ச்சி மட்டுமன்றி நாட்டின் எல்லாப் பிரதேசமும், எல்லா மக்களும், எல்லா இனங்களும் பாரபட்சமின்றி ஏற்றத் தாழ்வின்றி சமாந்தரமாக வளர்ச்சியடைகின்ற நிலையே நாட்டினை அபிவிருத்தி என்ற நிலைக்கு எடுத்துச் செல்லும்.

அந்த வகையிலே பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி பற்றிய பெரும்பாலான ஆய்வுகள் தேசத்தை அடிப்படையாகக் கொண்டவையாகவே காணப்படுகின்றன. அபிவிருத்தியைத் திட்டமிடும்போது இடரீதியான, பிரதேச ரீதியான அம்சங்களைக் கருத்திலெடுப்பதும். அவற்றுக்கு முக்கியத்துவமளிப்பதும் சமீபகால வளர்ச்சிக் கோட்பாடுகளாக கடைப்பிடிக்கப்படுகின்றன.

அபிவிருத்தி என்பது தொகை வடிவில் அளவிடக்கூடிய வளர்ச்சியை மாத்திரமன்றி பண்பு ரீதியான, அம்சங்களாகிய வருமானப்பரம்பல், கேள்வி, தொழிற்படையின் சேர்க்கை, கைத்தொழில் அமைப்பு, போன்றவற்றிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் அமைப்பு ரீதியான உருமாற்றத்தை குறித்தும் நிற்கின்றது. இவ்வாறான அபிவிருத்தி ஒரு நாட்டின் குறிப்பிட்ட சில நிலையங்களில் மாத்திரம் குவிந்திருக்காது தேசிய மட்டத்திற் சமச்சீரான ஒரு முறையில் ஏற்படுவதை உத்தரவாதப்படுத்துவதே பிரதேச அபிவிருத்தியின் நோக்கமாகும்.

பிரதேச அபிவிருத்தி என்பது மனித நலனை (Human welfare) நோக்கமாகக் கொண்ட ஒரு செயற்பாடு மாத்திரமன்றி பொதுநலனில் ஏற்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற அதிகரிப்பு மட்டுமன்றி இதன் சமச்சீரான பரம்பலானது பல்வேறு பகுதிகள் மக்கட் பிரிவுகளிடையே ஏற்படுவதையும் குறிக்கும். ஒரு நாடு பல்வேறு பிரதேசங்களையும் பல்வேறு இன மக்களையும் கொண்டிருப்பின் மொத்த தேசிய உற்பத்தி (GNP)யில் ஏற்படும் அதிகரிப்பு உண்மையாகவே அங்கு வாழும் எல்லா மக்களினதும் உண்மையான நலனில் அதிகரிப்பை ஏற்படுத்தும் எனக் கருதிவிட முடியாது.

அபிவிருத்தியில் பிரதேச இடைவெளி தோற்றம் பெறுவதற்குக் காரணம் சமூக, அரசியல் காரணிகளே ஆகும். குறிப்பாக ஒரு பிரதேசம் இயற்கை வளங்களைப் பொறுத்தவரையில் மிகவும் செழிப்பானதாகக் காணப்பட்டாலும் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட ஒழுங்கான திட்டமிடலானது அப்பிரதேசத்திற்கென வகுக்கப்படாவிட்டால் அப்பிரதேசம் அபிவிருத்தியில் குன்றிவிடும். அரசியல் ரீதியாக ஆரோக்கியமற்ற சூழ்நிலைகள், இனங்களுக்கிடையிலான மோதல்கள் மொழி, இன வேறுபாடுகள், என்பனவும் பிரதேச அபிவிருத்தியைப் பாதிக்கின்றன.

இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்தபோதும் சமச்சீரான ஓர் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு ஆட்சியாளர்கள் முயற்சிக்கவில்லை. ஆட்சிப்பீடமேறுபவர்கள் நாட்டின் அபிவிருத்தியை ஒரு போதும் கவனத்திலெடுப்பவர்களாக இல்லாமல் தமது அரசியல் இலாபத்தினையே கருத்தில் எடுப்பவர்களாக இருக்கின்றனர். இலங்கையின் ஒவ்வொரு பிரதேசமும் வேறுபட்ட தன்மையைக் கொண்டுள்ள காரணத்தினாலும், வளங்களின் பரம்பல்பிரதேசங்களிடையே மாறுபட்டுச் செல்கின்ற காரணத்தினாலும், இனரீதியான பரம்பல் வேறுபட்டு இருப்பதனாலும் பிரதேச அபிவிருத்தி என்பது முக்கியமானதாகின்றது. ஆனால் அதற்கேற்ப கொள்கைகள் வகுக்கப்படுவதில்லை. குறிப்பிட்ட சில பெரும்பான்மையினரின் நன்மை கருதியே அபிவிருத்திக் கொள்கைகள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன.

சிறுபான்மை மக்களும் அவர்களின் பாரம்பரிய பிரதேசமும் என்ற அடிப்படையில் பாரபட்சமான முறையில் பின்பற்றப்படும் சில கொள்கைகள், நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணம் சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு பின்தங்கிச் செல்வதற்குக் காரணமாக அமைந்தது.

இந்தவகையில் வடக்கு கிழக்கு பிரதேசத்தினது அபிவிருத்தியின் முக்கியத்துவம் பற்றி தெரிவிக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும். மலரப்போகின்ற எதிர்கால நிர்வாகத்திலே வடக்கு கிழக்கு அபிவிருத்தியை உற்சாகப்படுத்த வேண்டியதும் இன்றியமையாத கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையிலே பிரதேச அபிவிருத்தியிலே முக்கியமான ஓர் கூறாக விளங்குவது நகராக்கம் ஆகும். வடக்கு கிழக்கிலே பாரிய நகரங்கள் பல காணப்படுகின்றபோதும் அவை அபிவிருத்திக்கு ஏற்றவையாகக் காணப்படாமை ஓர் குறைபாடாகும். திட்டமிடல் இன்றி தான் தோன்றியாக ஏற்பட்ட நகரங்களே எமது பிரதேசத்தில் காணப்படுகின்றன. மக்களது குடியேற்றங்கள் காரணமாக வியாபார நோக்கில் உருவாகிய நகரங்களே காணப்படுகின்றன. குறிப்பாக வட பகுதியை எடுத்து நோக்கினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சாவகச்சேரி, பருத்தித்துறை, முல்லைத்தீவு என்பனவே குறிப்பிட்டுக் கூறக்கூடிய நகரங்களாக விளங்குகின்றன. இதில் யாழ் நகரம் எந்தவித திட்டமிடலும் இன்றி வளர்ச்சியடைந்து செல்கிறது. இது மக்கள் குடியேற்றம் சார்பாகவே எழுந்து நிற்கின்றது. வியாபார நடவடிக்கையைத் தவிர வேறு எந்த நடவடிக்கையும் சிறப்பாக இடம் பெறுகின்றது எனக்கூறமுடியாது. இது யாழ் குடாநாட்டின் மையப்பகுதியிலே அமையாது ஓர் ஓரமாக அமைந்திருப்பதும் முக்கிய குறைபாடாகும்.

இந்த வகையிலே வடக்கின் நகரங்கள் பற்றி நோக்குகின்றபோது கைத்தொழில் சம்பந்தமாக ஏற்படுத்தப் பட்ட ஓர் நகரம் இல்லாதிருப்பது முக்கியமானதோர் குறைபாடாகும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்றவை எல்லாப் பொருட்களை வாங்கவும், விற்கவுமான ஓர் பகுதியாகவே விளங்குகின்றன. வடக்கிலே போதிய வளங்கள் இருந்தும் கைத்தொழில் ஊக்குவிக்கப்படாமல் இருப்பது முக்கியமான அபிவிருத்தி முட்டுக்கட்டையாகும். இந்த இடத்திலே வடக்கு கிழக்கு பிரதேசத்தில் நிர்வாக மையமாக மாங்குளம் நகரம் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே கைத்தொழில் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு வளர்த்தெடுக்கக் கூடியதான நகர மையம் ஒன்றைத் தெரிவு செய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

**வடக்கில் கைத்தொழில் நகர மயமாக்கத்தின் முக்கியத்துவம்:**

இன்றைய உலகில் நகராக்கம் வேகமாக இடம்பெற்று வருகின்ற வேளையிலே எமது பிரதேச அபிவிருத்திக்கும் புதிய நகரங்களின் தோற்றம், வளர்ச்சி என்பன முக்கியமானதாகின்றது. நாம் ஏற்கனவே நோக்கிய அரசியல், சமூக புறக்கணிப்பின் காரணமாக எமது பிரதேச அபிவிருத்தியை நாமே திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. அது மட்டுமல்லாமல் இன்னும் சில காரணங்கள் மூலம் நகராக்கத்தின் முக்கியத்தினை உணரவேண்டியுள்ளது.

ஒரு பிரதேசத்தினது தனித்துவம், அபிவிருத்தி, பொருளாதார கட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைப்பு என்பன சிறப்பாக இருக்க வேண்டுமெனில் அப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் தொகை என்பது முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இந்த வகையில் மக்கள் குடியேற்ற பரம்பலை பாதுகாக்க வேண்டிய தேவை இருக்கின்றது. மக்கள் வேலை வாய்ப்பினையும், சொகுசு வாழ்க்கை யினையும் விரும்பி நகரங்களை நோக் கிப் படையெடுப்பது என்பது நியதி. இந்த அடிப்படையிலே தான் வடக்கு கிழக்கு மக்களுக்குமென வேலைவாய்ப் பினையும், சொகுசு வாழ்க்கையி னையும் வழங்கக் கூடிய கைத்தொழில் மயமான, வியாபார நகரங்கள் இல்லை. இதனால் பெருமளவு மக்கள் கொழும்பு நகரை நோக்கி படையெடுத்துச் செல் கின்றனர். இவ்வாறு படையெடுத்துச் செல்வோர் உயர் சேமிப்பு உடைய வர்களாகவும், உயர் வருமானம் பெறுப வர்களாகவும் உயர் கல்வியறிவுடைய கல்விமான்களுமாக இருக்கின்றார்கள். இதனால் கொழும்பு பகுதியில் நிலங்கள் விலையேற்றம் அடைவது டன், வாடகை போன்ற ஏனைய செலவு களும் உயர்வடைய எமது பிரதேச மக்களின் சேமிப்பும், வருமானமும் தெற்கு முதலாளிகளிடம் சென்றடை கின்றது. இதனால் எமது பகுதி அபிவிருத்தி கீழ் நோக்கி தள்ளப்பட தென்பகுதி மிக வேகமாக முன்னேற்ற மடைகின்றது. அத்துடன் வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழும் மக்களில் நிலமற்றவர்களும், நகரங்களை நோக் கிப் படையெடுக்கின்றனர். இதனால் இவர்களுக்கான நிலங்களை இப்பகுதி களிலே பங்கிட்டு வழங்கி குடியேற்ற வும் முடியும். இதேபோல் இப்பகுதி மக்கள் தமது நிர்வாக தேவைகளை பூர்த்தி செய்யவும் பெரிய நகரங்களை நோக்கியே செல்ல வேண்டியுள்ளது. அதனை விட யுத்தம் காரணமாகவும் மக்கள் கொழும்பு நோக்கிச் செல்கின்ற னர் என்பதையும் கவனத்தில் கொள்ள லாம். இதனால் எமது பிரதேச மக்கள் கொழும்பு, மற்றும் வெளிநாட்டு நகரங் கள் நோக்கி படையெடுப்பதை தடுப்ப தற்காக எமது பிரதேசத்திலே நகராக் கம் முக்கிய தேவையாக உள்ளது.

அத்துடன் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கு கைத்தொழில் மயமாக்கப்பட்ட நகரம் ஒன்று தேவை. அதாவது வடக்கு கிழக்கு பகுதிகளிலே காணப்படுகின்ற இயற்கை வளங்க ளைக் கொண்டு உற்பத்தி செய்யக் கூடியவாறான ஓர் கைத்தொழில் மய மாக்கம் இடம்பெறுவது இன்றியமை யாதது. இலங்கை அரசினால் எமது வளங்கள் திட்டமிட்டு சுரண்டப் படுவதைத் தவிர்க்க வேண்டுமெனில் நகராக்கம் முக்கியமாகின்றது. எனவே எமது பிரதேச வளங்களின் மூலம் உச்ச பயன்பாட்டைப் பெற்று கைத்தொழில் மயமாக்கத்தின் மூலம் வேலையில்லாப் பிரச்சினையையும் தீர்த்து அபிவி ருத்தி நோக்கிச் செல்வதாயின் நகராக் கம் என்பது முக்கியமானதாகின்றது.

மேலும் 2015ம் ஆண்டளவில் ஆசிய நாடுகளிலே நகராக்கமானது 35% ஆக இருக்குமென எதிர்பார்க்கப்ப டுகின்றது. எனவே இந்த நிலையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பிரதேசமும் போட்டியிட வேண்டும். ஏனெனில் நகராக்கம் அதிகமாக உள்ள பிரதேசங்களை நோக்கியே வெளிநாட்டு, உள்நாட்டு முதலீடுகள் செல்லும். இதனால் எமது பிரதேசத்திலும், கைத்தொழில் மயமாக்கப்பட்ட நகரங்கள் இருக்கும் போது முதலீடுகளைக் கவர முடியும். இதனால் அபிவிருத்தி என்பதை எட்டிவிட முடியும்.

எமது பிரதேசத்திலே உற்பத்தி செய்யப்படுகின்ற விவசாயப் பொருட்களுக்கு போதிய சந்தை வாய்ப்பு கிடைப்பதில்லை. உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்கள் போதிய சந்தை வசதி, போக்குவரத்து வசதி என்பன இல்லாமல் தேங்கிக் கிடப்பதனை நாம் அவதானிக்கலாம். யாழ் வன்னிப் பிரதேசங்களிலே விளைவிக்கப்படுகின்ற விவசாய விளைபொருட்கள் சிறந்த சந்தை வசதி இன்றி இருப்பதை அவதானிக்கலாம். கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார். பகுதிகளில் விளைவிக்கப்படும் நெல்லானது தேங்கிக் கிடக்கின்றது. அரிசியாகக் கூட மாற்றக்கூடிய வசதியின்றி தேங்கிக் கிடக்கின்றன. அத்துடன் இப்பிரதேசங்களில் ஏராளமான பண்ணைகளில் பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. வாழைப்பழம், தோடம்பழம், மாம்பழம் போன்றவற்றுடன் வேறு பழவகைகளும் தேவையான அளவு கிடைக்கும். அத்துடன் பனம் பொருட்கள், தென்னையிலிருந்து கிடைக்கும் பொருட்கள் என்பனவும் தேவையான அளவு கிடைக்கும். அரிசியை பயன்படுத்தி மாவு, பிஸ்கட், வேறு சத்துணவு என்பவற்றையும் பழச்சாறு மற்றும் பல பயன்பாட்டுப் பொருட்களையும் உற்பத்தி செய்யமுடியும். அத்துடன் இறைச்சி, பால் என்பனவும் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனால் இந்த விவசாய விளை பொருட்களை மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யக் கூடியவாறு கைத்தொழில் நகரங்கள் உருவாக்கப்படும் போதும் விவசாய விளை பொருட்களுக்கும் சந்தை வாய்ப்பு கிடைக்கின்றது. அத்துடன் வேலை வாய்ப்பு என்பதையும் பெருக்க முடியும்.

இத்துடன் இன்னும் பல காரணங்கள் வடகிழக்குப் பகுதியிலே நகராக்கம் ஒன்றின் தேவையை எமக்கு உணர்த்துகின்றன. அதாவது வன்னி போன்ற பின்தங்கிய பிரதேசத்திலே ஒழுங்கான படிமுறை அமைப்புடைய மத்திய இடங்களில் நகராக்கங்களின் வளர்ச்சியானது மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் அடிப்படையானது என புவியியல் பேராசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதேபோல் ஏனைய வடக்கு கிழக்கு பிரதேசங்களில் ஏற்படுகின்ற நெரிசல் சம்பந்தமான நகராக்கப் பிரச்சினைகளை சமப்படுத்திக் கொள்ள வேண்டுமெனின் புதிய நகராக்கம் அவசியமாகின்றது. அந்த வகையிலே தற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது காணப்படுகின்ற யாழ்ப் பாணம், திருமலை, மட்டக்களப்பு போன்றவற்றின் நெரிசல் நிலையைக் குறைக்க முடிவதோடு, எதிர்காலத்தில் உருவாக இருக்கின்ற நிர்வாக மையங் களில் ஏற்படுகின்ற நெரிசலையும் குறைக்க முடியும். நிர்வாக மையங் களில் கைத்தொழில்களை மேற்கொள் வது என்பது பல்வித பிரச்சனைகளை தோற்றுவித்துள்ளமையை உலக வர லாறுகள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

இவற்றுடன் இலங்கைத்தீவு என்ற ரீதியில் ஒட்டு மொத்தமாக நோக்கு கின்ற போதும் இப் பிராந்திய நகராக்கம் என்பது முக்கியப்படுத்தப் படுகின்றது. அதாவது கொழும்பில் ஏற்பட்டு வரும் சனத் தொகையைக் குறைப்பதற்காக பிராந்திய ரீதியில் நகர மையங்கள் உருவாக்கப்பட வேண்டும் என கைத்தொழில் நகராக்க உபாயம் "A" குறிப்பிடுகின்றது. இதனடிப்படையில் தலைநகரில் கைத்தொழில் முயற்சியைக் குறைக்கும் முயற்சியிலும் மேலும் பிராந்திய நகரங்களை உருவாக்கும் முயற்சியி லும் U.D.A ஈடுபட்டுள்ளது. இருப்பினும் இது வடக்கு கிழக்கு பிரதேசம் நோக்கி எவ்வளவு தூரம் திருப்பப்பட்டுள்ளது என்பதானது கேள்விக்குரியதொன்றே.

அத்துடன் இன்றைய கால கட்டத் திலே உலகமயமாதலும். தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும் அபிவிருத் திக்கான இன்றியமையாத காரணி களாக பலராலும் குறிப்பிடப்படு கின்றன. எனவே இந்த உலகமய மாதல், தகவல் தொழிநுட்ப வளர்ச்சி என்ற இரண்டையுமே நகராக்க மூலமே ஏற்படுத்த முடியும். வடக்கு கிழக்கு பிரதேசத்தினைப் பொறுத்த வரையி லே இந்த இரண்டும் மிகவும் கீழ்நிலை யிலேயே இருக்கின்றன. எனவே நகராக்கத்தின் மூலம் உலக மயமாதல், தகவல் தொழிநுட்பம், என்பவற்றின் ஊடாக பின்தங்கிய கிராமப் பகுதிகள் பொருளாதார ரீதியாக மேம்பட வடக்கு கிழக்கு மக்கள் அனைவராலும் வாழ்க்கைத்தரத்தினை பேணவோ அல்லது உயர்த்தவோ முடியும்.

எனவே இவ்வாறான பல்வேறு காரணிகளினால் எமது வடக்கு கிழக்கு பிரதேச அபிவிருத்தியினை கருத்தில் கொள்கின்ற நாம் ஓர் கைத்தொழில் மயமாக்கப் பிரதேசம் ஒன்றினை, அல்லது கைத்தொழில் மயமாக்கக் கூடிய நகரம் ஒன்றினை நகராக் கத்திற்கேற்ற அம்சங்களின் உதவியு டன் தெரிவு செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பிரதேசம் பற்றிய கருத்துக்களை இனி நோக்குவோம்.

**தெரிவு செய்யப்பட்ட பிரதேசமும், நகரமயமாக்கத்திற்கான சாத்தியப் பாடுகளும்:**

ஓர் பிரதேசம் நகரமயமாக்கப்பட வேண்டுமெனில் நகரமயமாக்கத்திற் கான அவசியப் பண்புகளை இனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு அவை அப்பிரதேசத்திலே இருக்கின்றனவா? என்பதையும் அறிந்து கொள்வதன் மூலம் நாம் தெரிவு செய்த அல்லது செய்யப்போகின்ற பிரதேசத்தின் நகர மயமாக்கத்திற்கான சாத்தியப்பாட்டின் வீதாசாரத்தினை அறிந்து கொள்ளலாம் அல்லது தெரிவு செய்த நகரமாயின் சாத்தியப்பாட்டினை நிரூபிக்கலாம்.

இந்த அடிப்படையிலே மேற்கூறிய எமது நகரமயமாக்கத்திற்கு ஏற்ற வகையில் இனங்காண முடிந்த பிரதேசமாக பரந்தன் நகரம் தொட்டு இயக்கச்சி சந்தி வரையான ஆனையிறவு அடங்கலான பிரதேசத்தை குறிப்பிடலாம். இப்பிரதேசம் வீதியின் இருமருங்கும் காணப்படுகின்றது. இங்கு ஏராளமான நிலப்பரப்பு எதுவித பயன்பாடுமின்றிக் காணப்படுகின்றது. இந்த பிரதேச நகர மயமாக்கமானது பரந்தன் நகரத்தினை மையமாக அல்லது கேந்திர நிலையமாகக் கொண்டு உருவாக்கப்படலாம் தொடர்ந்து இப்பிரதேசத்தினை நகரமயமாக்கத்திற்கு இட்டுச்செல்வதற்கான அவசியப் பண்புகளின் சாத்தியப்பாடுகள் பற்றி நோக்குவோம்.

**நகரமயமாக்கத்திற்கான சாத்தியப்பாடுகள்:**

சாத்தியப்பாடுகள் என்றவகையில் நோக்குகின்றபோது நல்ல சந்தை வாய்ப்பும், கைத்தொழில் வளர்ச்சியும் ஏற்படவேண்டும். இந்த இரண்டையும் அடிப்படையாக வைத்து நோக்குகின்ற போது வன்னிப் பெருநிலப்பரப்பிலே விளைவிக்கப்படுகின்ற விவசாயப் பொருட்களுக்கு நல்லதோர் சந்தையாக மாற்றமடையும் போது சந்தை வளர்ச்சியுறும், அத்தோடு இவ்விவசாயப் பொருட்களை கைத்தொழில் பொருட்களாக மாற்றியமைக்கின்ற ஓர் கைத்தொழில் தன்மை ஏற்படுத்தப்படலாம். அதற்குத் தேவையாக விவசாய விளை பொருட்களை வன்னிப்பரப்பில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். அத்தோடு பளை, தென்மராட்சிப் பிரதேசங்களிலே காணப்படுகின்ற தென்னை, பனை விளை பொருட்களையும் மூலப்பொருட்களாகக் கொண்டு கைத்தொழில் முடிவுப் பொருட்களாக மாற்றியமைக்கும் போது சிறப்பானதோர் கைத்தொழில் மயமாக்கமும், நகரமயமாக்கமும் ஏற்படும். அத்துடன் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்கான சந்தை வாய்ப்பு என்று உள்நாட்டு, வெளிநாட்டு சந்தை வாய்ப்பு என்ற இரண்டுமே கிடைக்கக் கூடியதாக இருக்கும். யாழ்ப்பாண மாவட்டத்திற்கே அதிகமாக கேள்வி ஏற்படக்கூடிய வாய்ப்பும் இருக்கின்றது.

அடுத்து இப்பிரதேசத்திற்கான போக்குவரத்து வலைப்பின்னல் என்பதும் அபிவிருத்தி செய்வதற்கு சாத்தியமானதாகவே காணப்படுகின்றது. தரைப்பாதை போக்குவரத்தாயினும் சரி, கடற்போக்குவரத்தாயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி வலைப்பின்னல் அமைப்பில் ஏற்படுத்தக்கூடியதாகவே காணப்படுகின்றது. வலைப்பின்னல் போக்குவரத்து அமைப்பு என்பது நகரமயமாக்கத்திற்கு ஏதுவான ஓர் காரணியாகவே இருக்கின்றது. பரந்தன் பகுதியில் A9 நெடுஞ்சாலையும், முல்லைத்தீவு - பூநகரி மன்னார் வீதியும் இணையக்கூடியதாகவே இருக்கின்றது. அத்துடன் இப்பிரதேசத்தை சூழவுள்ள பகுதிக்கு பாதைகளும் இணையவாய்ப்புண்டு. அத்துடன் பரந்தன் பிரதேசத்தின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு செயற்கை துறைமுகத்தினை உருவாக்கக்கூடிய வகையில் ஆழமான சமுத்திர கரை வடமராட்சி கிழக்கு தாழையடிப் பகுதிகளிலே காணப்படுகின்றது. இதுவும் கப்பற் போக்குவரத்திற்கான சாதகத் தன்மை ஆகும். இதை விட பருத்தித்துறை, காங்கேசன்துறை துறைமுகங்களையும் பயன்படுத்தலாம். இவ்வாறான போக்குவரத்து வசதிகள் இருப்பது கைத்தொழில் நகரமயமாக்கத்திற்கு இலகுவாக இட்டுச் செல்லக்கூடியது.

அத்துடன் நகராக்கத்திற்கான முக்கியமானதோர் தேவையாக அமைவது நீர்வசதி ஆகும். பழமையான நாகரீக நகரங்கள் யாவும் ஆற்றுப்பள்ளத்தாக்குகளை மையமாக வைத்தே உருவாகி வளர்ந்தமையை வரலாற்றினூடாக நாம் அறியலாம். ஆனால் புதிய நகரங்கள் அவ்வாறாக உருவாக்கப்படாவிட்டாலும் நீர்வசதி என்பது முக்கியமானதே. இந்தநீர் தரைக்கீழ் நீர், சேமிப்புநீர், கடல்நீர் என்ற வழிகளிலே இப்பிரதேசத்திற்குக் கிடைக்கக்கூடியதாக அமைகிறது. இரணைமடு நீர்த்தேக்கமானது போதியளவு நீர்வசதியை உடையது. அத்துடன் சேர்த்து தரைக்கீழ் நீரையும் பயன்படுத்த முடியும்.

இடவசதி என்பதும் இப்பிரதேசத்திலே போதுமான அளவு காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் காணப்படும் அதிக நிலப்பரப்பு புதர்கள் வளர்ந்து ஏனைய பயன்பாடுகளுக்கு பயனற்ற பகுதியாகவே காணப்படுகின்றது. அதேபோல் பாரிய இந்த நிலப்பரப்பில் பெரும்பகுதி அரச காணியாகவே அதாவது தனியார் உரிமையற்றவையாகவே இருக்கின்றன. இதுவும் நகராக்கத்திற்கு சாத்தியம். அனேகமான நகரங்களிலே இடப்பற்றாக்குறை ஏற்படும். இப்பிரச்சனைகள் இங்கு ஏற்படவாய்ப்பில்லை. அத்துடன் வடக்கு கிழக்கு பிரதேசமெங்கும் ஏராளமான தமிழ் மக்கள் காணி அற்றவர்களாக காணப்படுகின்றனர். இவர்களை இப்பிரதேசத்தில் மாதிரி குடியிருப்புக்களின் மூலம் குடியேற்றி கைத்தொழில் துறையில் வேலை வாய்ப்பையும் வழங்கலாம். இங்கு காணிகளை பயன்படுத்துவதால் விவசாயம் பாதிக்கப்படும் வாய்ப்பில்லை. அத்துடன் காடழித்தல் செய்ய வேண்டிய தேவையும் இல்லை. அத்துடன் ஏனைய நகரங்களில் உருவாகும் சனநெரிசலையும் குறைக்க வாய்ப்புண்டு. ஒட்டு மொத்தத்தில் மேலதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவாக்கத்தினை தேவையான வரை மேற்கொள்ளலாம்.

நகரமயமாக்கத்திற்கான திறன் சார் தொழிலாளர் சம்பந்தமாக எவ்வித தட்டுப்பாடும் ஏற்படப்போவதில்லை. யாழ்மாவட்டத்திலும் மற்றும் கிளி நொச்சி, முல்லைத்தீவு நகரங்களிலும் திறன்வாய்ந்த தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ளலாம். மூளை ரீதியா கவும், உடல் ரீதியாகவும் பலமான தொழிலாளர்களை இப்பிரதேசத்தில் தட்டுப்பாடின்றி பெற்றுக் கொள்ள லாம். யாழ்ப்பாணத்தின் திறன் வாய்ந்த ஏராளமான தொழிலாளர்கள் தெற்கில் சேவை புரிகின்றனர். இப்பிரதேசமாக அமைந்தால் அவர்கள் சேவையை பெற்றுக்கொள்வது இலகு வானதாக அமைகிறது.

இங்கு கைத்தொழிலுக்கான உள்ளீடுகளின் கிடைப்பனவு பற்றி நோக்கின் இன்றைய காலகட்டத்திலே கைத்தொழில் வெற்றிக்கு மூலப் பொருள் ஒரு பிரச்சனையான விடயமல்ல என்பதை யப்பான் நாடு நிரூபித்து நிற்கின்றது. இருப்பினும் இப்பிரதேசத்திற்கு விவசாய அடிப் படை கைத்தொழில் மயமாக்கமே (Agro based industrialization) ஏற்புடையது என அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின் றனர். விவசாய அடிப்படை கைத் தொழில் என்பது விவசாய வெளி யீட்டுப் பொருட்களை கைத்தொழில் பொருளாக மாற்றுதல், மற்றும் விவசா யத்திற்கான உள்ளீட்டுப் பொருட்க ளை உற்பத்தி செய்தல் என்ற இருவகை களில் மேற்கொள்ளலாம். பழங் களைப் பதனிடல், பிஸ்கட் போன்ற வற்றை உற்பத்தி செய்யலாம். அது மட்டுமல்லாமல் மணல், உப்பு, போன்ற வளங்களும் காணப்படுகின்றன. இவற்றுடன் தென்னை, பனை வளங் களையும் பயன்படுத்தி கைத்தொழில் முயற்சிகளை மேற்கொள்ளலாம். அத்துடன் மீன் போன்ற கடல் வளங்க ளையும், இறைச்சி தோல் பதனிடல், போன்றவற்றை பயன்படுத்தலாம். மீன் தகரத்தில் அடைத்தல் போன்ற கைத் தொழில்களை மேற்கொள்ள முடியும்.

இப்பிரதேசத்தினை கைத் தொழில் நகரமயமாக்குவதன் மூலம் ஏற்படுகின்ற சூழல் பாதிப்பு என்பது, ஏனைய பிரதேசங்களை கைத்தொழில் மயமாக்குவதனுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவானதாகவே காணப் படுகின்றது. ஏனெனில் இப்பகுதியில் காடுகள் சிறிய அளவில் புதர்களாகவே காணப்படுகின்றன. இதனால் காடழிப்பு என்பது பெரிய அளவில் செய்யவேண்டியதில்லை. அத்துடன் பயிற்செய்கை போன்ற செயற்பா டுகளை செய்யமுடியாத நிலப்பரப்பா கவும் காணப்படுகின்றது. ஆனாலும் நீர்மாசடைதல் என்பது ஏற்படும் என்பதனையும் இங்கு கவனத்தில் எடுக்க வேண்டும்.

அத்தோடு பாரிய விமானத் தளங்களை அமைக்கக்கூடிய பரந்த நிலப்பரப்புக்கள் காணப்படுகின்றன. நகரமயமாக்கத்திற்கு விமானத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றியமையாதது. இதற்கேற்ற விதத்தில் பூநகரி, பரந்தன், ஆனையிறவு பகுதிகளில் ஏராளமான நிலப்பரப்புண்டு. அத்துடன் யாழ்ப்பாணத்திலே பலாலி விமானத்தளமானது ஏராளமான பயிர்ச்செய்கைக்கு ஏற்ற சிறந்த வளமான நிலப்பரப்பை ஆக்கிரமிரத்து அமைக்கப்பட்டள்ளது என்பது இங்கு குறிப்பிட்டுக் காட்டுப்படவேண்டியதே.

இவற்றுடன் மேலும் கீழே சில ஆலோசனைகளையும் நோக்குவதன் மூலம் அவ் ஆலோசனைகளையும் கைத்தொழில் நகரமயமாக்கத்திற்கு சாதக காரணிகளாக மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

**சில ஆலோசனைகள்**

போக்குவரத்து அடிப்படையில் நோக்குகையில் யாழ்ப்பாணத்திலிருந்து பரந்தன் சந்தி ஊடாக செல்லும் புகையிரத பாதையுடன் முல்லைத்தீவு வீதி ஓரமாகவும், ஓர் புகையிரதப் பாதையை அமைத்து அதனை திருமலை துறைமுகம், மட்டக்களப்பு வரை கரையோரமாக அமைக்கலாம். அத்துடன் பரந்தன் நகரத்தில் இருந்து பூநகரி, முழங்காவில், மன்னார் வரையும் ஓர் புகையிரத பாதையை அமைக்கலாம். மூலப்பொருளை கொண்டு வரவும், முடிவுப் பொருளை கொண்டு செல்லவும் உதவும். அத்துடன் A9 பாதையின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டு வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்கிடையிலான போக்குவரத்துப் பாதைகளின் முக்கியத்துவம் அதிகரிக்கப்படலாம்.

மேலும் சேவைத்துறையும் வளர்க்கப்பட வேண்டும் அது கைத்தொழில் வளர்ச்சிக்கேற்ப ஏற்படுத்தப்பட வேண்டும். அத்துடன் முதலீடுகளை அதிகரிப்பதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு வலயமாகவும் மாற்றலாம். அதாவது வங்கி, காப்புறுதி, தொடர்பாடல், பாதுகாப்பு, சுகாதாரம் என்பன போன்ற சேவைகள் வழங்கப்பட வேண்டும்.

பொழுதுபோக்கு மையங்கள், பஸ்தரிப்பு நிலையங்கள், நடைபாதைகள் போன்ற வேறு அம்சங்களும் உருவாக்கிக் கொடுக்கப்படலாம்.

**அச்சுறுத்தல்கள்**

இங்கு நகரம் அமைவதற்கான சில அச்சுறுத்தல்களும் இருக்கின்றன. அவை பற்றியும் சுருக்கமாக நோக்க வேண்டும். இரணைமடு குளக்கட்டானது பாதுகாப்பாக பேணப்பட வேண்டும். குளக்கட்டு உடைக்கப்பட்டால் நகரம் அழியும் அபாயம் ஏற்படலாம். அத்துடன் அப்பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் விவசாய நிலப்பரப்பு பாதிக்கப்படலாம். அதை சரியான திட்ட அமுலாக்கல் மூலம்தீர்த்துக் கொள்ளலாம்.

வடக்கு கிழக்கு பிராந்திய அபிவிருத்தி எமது வடக்குப் பிரதேசத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில் நகரமயமாக்கம் ஒன்றின் அவசியம் என்பது பற்றியும், அது எங்கு எப்படி அமைந்தால் சிறப்பாக இருக்கும் என்பது பற்றியும், சிறப்புக்கான அவசியப்பண்புகளின் கிடைப்புத் தன்மை பற்றியும் நோக்கினோம். இவற்றின் நேர் எதிர் கருத்துக்கள் மேலும் ஆராயப் படவேண்டிய தேவை இருக்கின்றது. அத்துடன் இந்த நகராக்கம் பற்றி பொதுவான பொதுத் திட்டமிடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு சரியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் நகரமயமாக்கமும், பிரதேச அபிவிருத்தியும் சாத்திய மாகும்.

## உசாத்துணை நூல்கள்


1) பொருளியல் நோக்கு, இதழ் 6, பக்கம் 4 – 10.

2) யாழ்ப்பாண புவியியலாளன் - இதழ் 19

3) Jaffna Geographer - Volume 14 -15, Page 38-48

4) இலங்கை அரசியற் பொருளாதார அபிவிருத்தி, கலாநிதி வி.நித்தியானந்தன், (வர்க்க இனத்துவ நிலைப்பாடுகள்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான வறுமை தணிப்பு திட்டம்

# Poverty Alleviatian Plan for North East Development

*Kanakaradnam Mahinthan,*
*3rd Year (2003)*
*Economics (Special)*
*Department of Economics*
*University of Jaffna*

இலங்கை சுதந்திரம் பெற்ற காலப்பகுதியில் இருந்து இன்று வரை பல்வேறு அரசுகள் நாட்டை ஆண்டாலும் தொடர்ச்சியாக வறுமை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது இதற்குப் பிரதான காரணம் வறுமை யொழிப்புக் கொள்கை என்பதற்கு மாறாக ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தங்கள் அரசியல் மேலாண்மை நலனை முதன்மையாகக் கொண்டு வறுமை யொழிப்பு என்னும் தலைப்பில் நடைபெறுகின்ற அரசியல் சதுரங்க மாகவே அமைகின்றது. இதன் காரண மாகவே இலங்கைக்கு உதவி வழங்கும் உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன பூரண ஆதரவினை வழங்குவதில்லை.

1977க்கு முன் நாட்டில் மொத்த சனத்தொகையில் வறுமைக் கோட்டுக் குக் கீழ் வாழ்வோரின் தொகை 20 சதவீதமாகக் காணப்பட்டது இத்தொ கை 1993இல் 30 சதவீதமாக அதிகரித் துள்ளது. மேலும் 70 சதவீதமானவர்கள் வறுமை நிலையில் வாழ்வதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன இத்தொகை மேலும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

**உணவு முத்திரை**

வறுமையொழிப்புக்காக அரசுகள் மானிய முறையிலான உலர் உணவை மையமாகக் கொண்ட "உணவுப்பங்கீட்டு அட்டை" அறிமுகப்படுத்தியது. இது தற்காலிக உணவுத் தேவையை பூர்த்தி செய்ததே தவிர வறுமை ஒழிந்ததாகக் காணப்படவில்லை அதன் பின்னர் உணவு முத்திரைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவும் எந்தவித சாதகமான அசைவினையும்ஏற்படுத்தவில்லை.

**ஜனசவிய**

இந்நிலையில் உணவு வழங்கல் என்பது நீண்ட காலத்தில் வறுமை யொழிக்கும் காரணியல்ல என்பதனை உணர்ந்த முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவினால் புதிய யுக்தி யாக "ஜனசவிய" திட்டம் அறிமுகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தப்பட்டது. இதற்காக 600 கோடி ரூபா தேவைப்பட்டது. இத் தொகையினை வழங்க உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் முன்வர வில்லை. இருந்த போதிலும் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியினை நிறைவேற்றும் வகையில் வடகிழக்குத் தவிர்ந்த சில மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தியும் அது தோல்வியிலேயே முடிவடைந்தது.

**சமுர்த்தி**

அதன் பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி " புதிய போத்தலில் பழைய ரசமாக சமுர்த்தித்திட்டத்தினை" அறிமுகப்படுத்தியது அதுவும் 7 வருட காலத்தில் வட - கிழக்கின் அனைத்துப் பகுதிக்கும் இத்திட்டம் சென்றடைய வில்லை. இச் சமுர்த்தித் திட்டத்தின் பிரதான நோக்கம் "கிராமிய உற்பத்தித் தாக்கத்தினை வலு வாக்கு வதன் ஊடாக வறிய குடும்பங்களின் நிலைமையினை மேம்படுத்துவதன் மூலம் வறுமையினை ஒழித்தல்" இச்செயல்திட்டம் வெளிநாட்டு உதவிகளைக் கவரும் நோக்குடன் வடிவமைக்கப்பட்டதே தவிர வறுமை ஒழிந்தபாடில்லை.

இலங்கை மத்திய வங்கி அறிக்கை யின்படி இதன் மூலம் யதார்த்த மட்டத் துக்கு குறைவாகக் காணப்படுவதோடு முகாமைத்துவத்திறன் பற்றாக்குறை யாகவும் காணப்படுகின்றது அத்தோடு சமுர்த்தி ஆட்சேர்ப்பிலும் வட - கிழக்கு புறக்கணிக்கப்பட்டதோடு செயற்திட் டங்கள் உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

ஏனெனில் ஜனாதிபதி சந்திரிக்கா அவர்கள் 1996ல் ஐ.நா.சபையில் சமூக அபிவிருத்திக்கான உலக உச்சி மாநாடு டென்மார்க்கில் நடை பெற்றபோது தனது உரையில் "மனிதர்கள் செல்லும் சமூக மோதல், வன்முறைகள் ஆகியவற்றுக்கு முக்கிய ஏதுக்களாகப் பெரும்பாலும் வறுமையும், வேலையில்லாத்திண்டாட்டமும் அமைகின்றது" இதற்குத் தேசிய மட்டத்தில் தீர்வுகாண வேண்டும் எனக் கூறினார்.

அதேபோல் கடந்த அரசின் முதலாவது வரவு செலவுத்திட்ட உரையில் பிரதி நிதியமைச்சர் வறுமை, வேலையின்மைக்கு எதிராக போர் தொடுத்துள்ளோம் இதற்கு இரண்டு வருடகால அவகாசம் கோரியிருந்தார் இவ்வாறு தங்கள் ஆட்சிக்காலம் முடியும் வரை காலம் கோரப்படுகின்றதே தவிர வறுமை ஒழிந்தபாடில்லை.

எனவேதான் அரசினால் 1988க்குப் பின் அதாவது 16 வருடகாலமாக நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்து வறுமையொழிப்பும் வடகிழக்கில்பூரணமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதுதான் இலங்கை அரசின் நிலைமையாக இருக்கும்போது தற்போது ஏற்படுத்தப் பட்டுள்ள சமாதான உடன்படிக்கையின் நிமித்தம் அரசும் புலிகளும் இணைந்து மேற் கொண்ட தீவிர நடவடிக்கை காரணமாக "இலங்கையை மீண்டும் அடைதல்" திட்டத்துக்காக மூன்றாண்டுக்கான 30,000 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட நிதியீட்டம் கிடைக்க உள்ளதாக உத்தேசிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. இத்தொகை இலங்கையின் ஒரு வருடத்துக்கான மொத்த தேசிய வருமானத்துக்கு ஒப்பானதாகும்.

இவற்றுள் வறுமையொழிப் புக்கான செயல்திட்டத்துக்காக 2067 மில்லியன் டொலர் வழங்க சர்வதேச நிதி நிறுவனங்கள் இணங்கியுள்ளன. இதில் சர்வதேச நாணய நிதியம் 667 டொலர், உலகவங்கி 900டொலர், ஆசிய அபிவிருத்தி வங்கி 700 மில்லியன் டொலரை வழங்க உள்ளது இத் தொகையினைப் பயன்படுத்துவதற்காக தேசியரீதியான செயல்திட்டத்தினை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டில் உள்ள வறுமையில் வாடும் அனைத்து மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்ய அரசு உத்தேசித்துள்ளது. அதில் வடகிழக்கு மக்கள் ஏனைய மக்களின் வறுமை யொழிப்பு அணுகுமுறையில் இருந்து மாறுபட்ட முறையில் செயல் திட்டத்தினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஏனெனில் வடகிழக்கு மக்கள் இரண்டு சகாப்தங்களுக்கு மேற்பட்ட யுத்தத்துக்குள் உள்வாங்கப்பட்டதுடன், இந்திய அமைதிகாக்கும் படையின் தீவிர யுத்த அழிவுகளும், இலங்கை இராணுவத்தின் ஆக்கக்கூடிய அழிவுகளையும் ஏற்படுத்திய மக்களுக்கு சமமான வறுமையொழிப்புத்திட்டம் என்பதற்கு மேலாக அணுகுதல் வேண்டும்.

**வடக்கு கிழக்குப் பகுதியில் தனியான வறுமை ஒழிப்பினை மேற்கொள்ளும் போது பின்வரும் உபாயங்கள் கையாளப்பட வேண்டும்.**

வறுமையொழிப்பினை மேற் கொள்ளும்போது பின்வரும் மூன்று வகையான உபாய அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் அந்த வகையில்

1) வாய்ப்புக்களை மேம்படுத்தல்
2) வலுவூட்டலுக்கு வழிகோலல்
3) பாதுகாப்பினை உறுதிசெய்தல்

என்பன கருத்தில் கொள்ள வேண்டும்.

**(1) வாய்ப்புக்களை மேம்படுத்தல்**

மக்களை நல்ல நிலைக்கு இட்டுச் செல்லும் வாய்ப்புக்கள் இன்றியே வறியமக்கள் எப்பொழுதும் வாழ்கின்றனர். இப்பிரச்சனைக்கு முகம் கொடுக்க வேண்டுமாயின் முழுமையான வளர்ச்சியைத் தூண்டுதல், வறிய மக்களுக்காகச் சந்தை தொழிற்படுதல், அவர்களுடைய சொத்துக்களைக் கட்டியெழுப்புதல் கல்வி போன்ற விடயங்களில் நிலவும் சமமின்மையை நீக்குதல் போன்றவற்றிலான வாய்ப்புகளை மேம்படுத்துவதில் கவனஞ் செலுத்த வேண்டும் குறிப்பிட்ட விதந்துரைகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றது.

- ❖ தனியார் முதலீட்டாளர்களுக்கான ஆபத்துக்களைக் குறைத்தல் மூலம் வினைத்திறன் மிக்க தனியார் முதலீடுகளை ஊக்குவித்தல், சட்ட வாட்சியை உறுதிசெய்தல், ஊழலுக்கு எதிராகப் போராடுதல்
- ❖ கீழ்க்கட்டுமானம், தொடர்பாடல், மற்றும் மனித முதலீடு என்பவற்றில் முதலீடு செய்வதன் மூலம் தனியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலீட்டுக்கு உதவி செய்ய வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு உண்டு இவை போட்டித்தன்மையை உறுதி செய்வதாகவும் புதிய சந்தை வாய்ப்புக்களை உருவாக்கும் வகையிலும் அமைதல் வேண்டும்.

❖ வறியவர்களின் சொத்துக்களைக் கட்டியெழுப்புதல்

❖ பால்வகை, இனம் மற்றும் சமூகப்பிரிவுகள் அடிப்படையில் காணப்படும் சொத்துச் சமமின்மையைக் கணித்தல், வறுமையை மிக விரைவில் குறைக்க சமத்துவமின்மையைக் குறைத்தல் மிக முக்கியமானது.

❖ வறிய பிரதேசங்களில் கீழ்க்கட்டுமான மேம்பாடும் அறிவை அதிகரித்தலும். வறிய, பின்தங்கிய பிரதேசங்களுக்குப் பாடசாலைகள், சுகாதார சேவைகள், போக்குவரத்து, மின்சாரம் மற்றும் தொலைத் தொடர்புகள் ஆகியவற்றை வழங்கல் வேண்டும். சேரிப்புறங்களில் அடிப்படை நகரச் சேவைகள், வறிய கிராமங்களில் தகவல்த் தேவைகளுக்குரிய வாய்ப்புக்கள் மேம்படுத்தப்படும் பொழுது கிராமத்தவர்கள் சந்தைகளில் பங்கு கொள்வதுடன் உள்ளூர் அரசாங்கங்களையும் கண்காணிக்க வசதியுண்டு.

### (2) வலுவூட்டலுக்கு வழிகோலல்

வறியவர்களுக்கு வகை சொல்லக் கூடியவர்களாகவும் ஆரோக்கியமான முறையில் தொழிற்படக் கூடியவர்களாகவும் இருந்தால், அரசாங்கமும் சமூக நிறுவனங்களும் வளர்ச்சியை அதிகரித்தலிலும் வறுமையைக் குறைத்தலிலும் சக்திமிக்க பாத்திரத்தை ஏற்க முடியும். அவ்வாறான நிறுவனங்களை உருவாக்குவதில் அரசாங்கங்கள்பலவழிகளில்செயற்படலாம்.

❖ இணைந்த அபிவிருத்திக்கான அடிப்படை அரசியல் மற்றும் சட்ட அடிப்படைகளை இடுதல் அரசு நிறுவனங்கள் எப்பொழுதும் வெளிப்படையான தன்மை கொண்டனவாக இருப்பது அவசியமானதாகும். தீர்மானம் மேற்கொள்ளல், கண்காணித்தல் போன்ற தமது நடைமுறைகளில் ஜனநாயக ரீதியாகப் பங்கு கொள்ளக் கூடியனவாக இருத்தல், வகை சொல்லும் தன்மை கொண்ட சட்டத்தொகுதி இணைந்த தன்மை கொண்டு விளங்குவதற்கும் சட்ட உதவி வழங்கும் நிறுவனங்களுக்கு அரசாங்கம் ஆதரவு நல்கவேண்டும்.

❖ வளர்ச்சியையும் சமத்துவத்தையும் பேணும் பொது நிர்வாகத்தினை உருவாக்குதல்.

பொதுநிர்வாகம் அதன் பயன் பாட்டாளர்களுக்கு வகை சொல்ல வேண்டும். பொறுப்புடையதாக இருத்தல் வேண்டும். அரச முகவர்களான பொலிஸ் (Police) வறிய மக்களுடன் பொறுப்புடன் நடந்து கொள்ளல் வறிய மக்களின் வாழ்க்கையில் முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

❖ இணைந்த பன்முகப்படுத்தலையும் சமூக அபிவிருத்தியையும் மேம்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவர்களை வறிய சமூகங்களோடு நெருக்கமாக இருக்கச் செய்தல், வறிய மக்கள் தம்மைப் பாதிக்கும் சேவைகள் மீதான கட்டுப்பாடுகளை மேற்கொள்ள உதவும் உள்ளூர் உயர் குழாத்தினரால் இத்தகைய நிறுவனங்கள் ஆட்கொள்வதை தடுக்கப் பன்முகப் படுத்தல் மூலம் அரசாங்க முகவர்களை மக்கள் கண்காணித்தல் மற்றும் பங்கு கொள்ளல் என்பவற்றை உறுதிப் படுத்தும் செயன் முறைகள் இணைக்கப்படுதல் வேண்டும்.

❖ பால்வகைச் சமத்துவம் பேணல்

பல நாடுகளில் ஆண்களிலும் பார்க்க பெண்கள் பொருள்கள் வளங்கள் தொடர்பான குறைந்த அளவிலான அதிகாரத்தினையும், கட்டுப்பாடுகளையும் கொண்டிருக் கின்றனர். மேலும் பாதுகாப் பின்மையும் மிகக்கூடுதலாக உள்ளது. பெண்களின் வலுவூட்டலுக்கு உள்ளூர் மற்றும் தேசிய மட்டத்திலான ஆட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்து வத்தை அதிகரிக்கச் செய்தல்.

❖ வறிய மக்களின் சமூக முதலீட்டுக்கு உதவுதல். வறிய மக்கள் வறுமையிலிருந்து மீள்வதற்கு உதவி வலையமைப்புக்கள் உதவ முடியும் இத்தகைய வலையமைப்புகளின் பெறுமானங்களை உறுதிப்படுத்து வதற்கு. அரசாங்கங்கள் இடைத்தர நிறுவனங்கள் பரந்த சந்தைகள் மற்றும் பொது நிறுவனங்களுடன் இணைப்பை ஏற்படுத்தலாம்.

**(3) பாதுகாப்பினை உறுதிசெய்தல்.**

நோய்களின் பாதிப்பு, பொருளாதாரச் சீர்குலைவு இயற்கைப் பேரழிவு என்பன வறிய மக்கள் மத்தியில் பெருமளவில் நிலவுகின்றது. இத்தகைய பின்னடைவுகளை சீர்செய்வதற்கான வசதிகளும் அவர்களிடம் குறைவு. இவ்வாறான பாதிப்புக்களைக் குறைக்க அரசாங்கம் செய்யக்கூடியவை எவை என நோக்கின்.

❖ வறிய மக்களிற்கான இடர்முகாமைத்துவத்திற்கு உதவும் வகையில் சமநிலை அணுகு முறையை உருவாக்குதல் உதாரணமாக நாட்டில் பரவலாக நிகழ்கின்ற வெள்ளம் மற்றும் புவிநடுக்கம் போன்றவற்றிலிருந்து மீளப்பெறும்பணித் திட்டங்களை ஏற்படுத்துதல்.

❖ வளர்ச்சிக்குச் சார்பான சமூக இடர் முகாமைத்துவம் பற்றிய தேசிய முறைமையை வடிவமைத்தல்.

அழிவுதரும் சுகாதாரக் காப்புறுதி வேலையின்மைக்கான காப்புறுதி போன்றவற்றை அரசாங்கம் உருவாக்க வேண்டும், அவை வேலை செய்வதற்கான ஊக்குவிப்பினை குறைக்க மாட்டா.

❖ உள்நாட்டுப் பிணக்கினைத்தடுத்தல்.

வறிய நாடுகளிலே அநேகமாக உள்நாட்டுப் பிணக்குகள் இடம்பெற்று வருகின்றன. அவை நாட்டினை சூறையாடும் தன்மை கொண்டவை பன்மைவாத நிறுவனங்களை வலுப்படுத்தல் அரசியல் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு நிறுவனங்களில் பல்வேறு குழுக்களையும் பங்கு கொள்ளச் செய்தல் மூலம் இத்தகைய பிணக்குகளைத் தீர்க்க முடியும்.

❖ நிதி மற்றும் இயற்கை அழிவுகள் அடங்கலான போரின் அதிர்ச்சிகளை ஏற்றுக் கொள்ளக் கூடியவாறும் அவற்றைத் தடுப்பதற்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல், ஆயத்தம் செய்தல் நிதிசார் ஆபத்துக்கள் வர்த்தக மாற்ற வீதத்தினால் நிகழும் அதிர்ச்சிகள் என்பவற்றை முகாமைத்துவம் செய்வதற்கு பேரினப் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் உறுதிமிக்க நிதிசார் முறைகளும் அடிப்படை யானவை. ஆயினும் அத்தகைய நடவடிக்கைகளுக்கு விரைவில் மாறுகின்ற குறுங்கால நிதி உட்பாய்ச்சலாய் ஏற்படும் ஆபத்துக் களை குறைக்க உதவும் மூலதனக் கணக்கினை திறத்தல் தொடர்பான விவேகமான முகாமைத்துவம் மூலம் உதவி நல்க வேண்டும் மந்தம் ஏற்படும் காலங்களில் வறியவர்கள் மீது மேற்கொள்ளப்படும் செலவு களைப் பேணுதல் or விரிவுபடுத் தலை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டிய தேவையும் உள்ளது.

மேற்காட்டிய உபாயங்களை கையாள்வதன் மூலம் வறுமையொழிப் பினை வெற்றிகரமாக நகர்த்த முடியும் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா வின் ஜனசவிய வறுமையொழிப்புத் திட்டத்துக்காக 600 கோடி ரூபாவை வழங்க இந்த சர்வதேச நிறுவனங்கள் மறுப்புத் தெரிவித்தன 15 ஆண்டு களுக்குப் பின் இதே நிறுவனங்கள் 2067 மில்லியன் டொலரை வழங்க முற்பட்டுள்ளதன் காரணம் அரசும் புலிகளும் மேற்கொண்ட சமாதான நம்பிக்கையின் உறுதித் தன்மையா கும். ஆகவே வடக்கு கிழக்கு மக்களுக் காக "விசேடவறுமை யொழிப்புத் திட்டம்" மேற்கொள்ளுதல் அரசின் மனிதாபிமான செயற்பாடாகும்.

Reference:


❖ பொருளாதார அபிவிருத்திக் கொள்கை - வே. கருணாகரன்

❖ நவபொருளியலாளன் மலர் 5 - ம. கருணாநிதி (Page 11 - 14)

❖ மானிட அபிவிருத்தி - UNDP அறிக்கை 2000.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிப் பிரதேசமும் அதன் அபிவிருத்தியும்

# Thenmarachchi region and its development.

*Miss.S.Ranjini,*
*Miss.K.Sumithra,*
*3rd Year (2003)*
*Economics Special*
*Department of Economics*
*University of Jaffna*

இன்றைய 21ம் நூற்றாண்டில், உலகநாடுகள் ஒவ்வொன்றும் 'உலகமய மாக்கல்' என்ற செல்நெறிக்குள் மூழ்கிவிட்ட நிலையில், தமது அபிவிருத்தி நடவடிக் கைகளை மேம்படுத்திக் கொண்டிருக் கின்றன. இவ்வாறாக, அபிவிருத்தியில் முன்னேறிய நாடுகள் "வல்லரசு" என்ற அந்தஸ்தினைப் பெறுவதற்குப் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் நிலையில், மூன்றாம் உலக நாடுகளோ தமது பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிராக எதிர்நீச்சல் போட்டு முன்னேற எத்தனித்துக் கொண்டிருக்கின்றன. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பல்வேறுபட்ட அபிவிருத்தி ஏற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டிருந்தாலும், அந்நாடுகள் பல நெருக் கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளன. இந்த வகையில், அபிவிருத்தி அடைந்துவரும் நாடான இலங்கையில், உள்நாட்டுப் போர் காரணமாக அதன் அபிவிருத்தி பின்தள் ளப்பட்டு இருந்ததும், தற்போதைய சூழ்நிலையில் கூட இன்னும் ஒரு திருப்திகரமான அரசியல், பொருளா தார, சமூக, கலாச்சார நிலையை அடை யவில்லை எனலாம். இதனால், இலங்கை யின் அபிவிருத்தி முன்னெடுத்துச் செல்லப் பட வேண்டிய அவசியம் உணரப்பட்டு அதற்கான முயற்சிகள் சிறிதளவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒரு நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமெனில், அந்நாட்டில் உள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ள சகலதுறைகளும் முன்னேற்றம் அடைந்து அதன் ஊடாக அபிவிருத்தி முன்னெடுக் கப்படுதல் வேண்டும். அந்த வகையில் "பிரதேச அபிவிருத்தி" (Regional Development) என்ற எண்ணக்கரு முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது. பிரதேச அபிவிருத்தி என்பது, ஒரு நாட்டினுடைய புவி மேற்பரப்பை பிரதேச வாரியாகப் பிரித்து, அந்தப் பிரதேசத் தினுடைய கல்வி, சுகாதார மருத்துவ வசதி, போசாக்குமட்டம், வறுமை ஒழிப்பு, போக்குவரத்து, மின்சாரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாடல், நீர்ப்பாசனம், கைத் தொழில், விவசாயம், கட்டட நிர்மாணம் என்பவற்றில் முன்னேற்றம் ஏற்படுத்தப் பட்டு குறித்த பிரதேசம் அபிவிருத்தி அடைதலைக் குறித்து நிற்கின்றது. இத்தகைய பின்னணியில் எமது ஆய்வு, "தென்மராட்சிப் பிரதேசமும் அதன் அபிவிருத்தியும்" என்ற தலைப்புடன் குறிப்பாக 2000ம் ஆண்டு ஏற்பட்ட போரின் விளைவால் அழிந்து போன, எமது பிரதேசத்தின் அபிவிருத்தியை எவ்வாறு முன்னெடுத்துச் செல்லலாம் என்பது பற்றி ஆராய்கின்றது.

இலங்கையின் வடபாகத்தில் அமைந்துள்ள யாழ் குடாநாட்டின் ஒரு பகுதியாக தென்மராட்சிப் பிரதேசம் காணப்படுகின்றது. இப்பிரதேசம் 232. 9 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டு, வடக்கே தொண்டைமானாறு கடல்நீர் ஏரியாலும், கிழக்கே கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பகுதியை யும், தெற்கே கச்சாய்க் கடலின் கேரதீவுப் பகுதியையும், மேற்கே நாவற்குழி, கைதடிப் பாலம்என்பவற்றையும் கொண்டு எல்லைப் படுத்தப்பட்டுள்ளது. தென்மராட்சிப் பிரதேசத்தினுடைய பிரதேச செயலகம் சாவகச்சேரி நகரத்தில் அமைந்திருப் பதுடன் அது 60 கிராமசேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது. இப்பிரதேசம் இயற்கை வளங்களால் செல்வம் கொழித்தும், விவசாயப் பயிர்ச் செய்கை மேற்கொண்டுவந்த நிலையிலும், போரின் விளைவால் அனைத்து வளங் களும் அழிக்கப்பட்ட நிலையில் இன்று பின்தங்கிக்காணப்படுகின்றது. எனவே, இப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள அழிவுகளையும் அதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளையும் குறிப்பிட்டு, பிரதேச அபிவிருத்தியை எவ்வாறு முன்னெடுத்துச் செல்லலாம் என்பது பற்றி, பொருளாதார, சமூக ரீதியான முக்கிய துறைகள் வாரியாக நோக்கப்படுகின்றது.

**1) வீதிகள் (Roads)**

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள வீதிகள் வலைப்பின்னல் முறை யில் அமைந்தவையாகவும், யாழ் குடா நாட்டின் அனைத்து இடங்களிற்கும் இலகுவில் சென்றடையக் கூடியனவாகவும் இருந்து வந்துள்ளன. இங்குள்ள வீதிகளை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

1) A பிரிவு வீதிகள் - 81. 8 Km
2) B பிரிவு வீதிகள் - 32. 2 Km
3) C,D,E பிரிவு வீதிகள் - 98. 0 Km
4) கிராமிய வீதிகள் - 556. 0 Km
5) பெரிய பாலங்கள் - 5

A,B வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழும், C,D,E வீதிகள் வடக்கு கிழக்கு மாகாண சபையினால் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழும், கிராமிய வீதிகள் உள்ளூராட்சிசபையின் கீழும் வருகின்றன. கடந்தகால போர் நடவடிக்கையினால் இப் பிரதேசத்தினுடைய பெரும்பாலான வீதிகள் மிகப்பெரிய பாதிப்புக்கு உள்ளாகி திருத்த வேண்டிய நிலையில் உள்ளன. இதனால் தென்ம ராட்சியும் அதனை அண்மித்த பிரதேசங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள. மற்றும் இவ் வீதிகளுக்கு அருகாமையில் மிதிவெடிகள் இருப்பதனால் திருத்த வேலைகளும் தாமதம் அடைந்துள்ளன.

இங்கு இருக்கும் 4 பெரும் பாலங்கள் உடைக்கப்பட்டமையால், பொதுமக்களின் பாவனைக்காக தற்காலிக இணைப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. இங்கு உள்ள 300 மதகுகளில் 40% ஆனவை சேதமடைந்துள்ளன. இவற்றினை திருத்துவதற்கு வேண்டிய நிதி வசதிகள் கிடைக்காமையும், மிதிவெடிகள் அகற்றப்படாமையும், வீதி திருத்த வேலைகளுக்கான இயந்திர உபகரணங்கள் கிடைக்காமையும், மற்றும் ஏனைய பிரச்சினைகளையும் இப்பிரதேசம் எதிர்நோக்கியுள்ளது.

எனவே வீதி தொடர்பான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு முதலில் இங்குள்ள மிதிவெடி, கண்ணிவெடிகள் அகற்றப்படுதல் வேண்டும். அடுத்து வீதிகள், பாலங்கள் புனரமைக்கத் தேவையான நிதிவசதிகளையும், இயந்திர உபகரணங்களையும் அரசாங்கம் அல்லது வெளிநாட்டு நிறுவனங்கள் வழங்க முன்வருதல் வேண்டும். தற்போது A[9] வீதி போக்குவரத்திற் காக திறக்கப்பட்டமையால் அவ்வீதி செப்பனிடப்பட்டு இருந்தாலும், ஏனைய வீதிகள் சேதமடைந்து இருப்பதால் அவை விரைவில் திருத்தப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களை விடுவிக்க வேண்டும்என எதிர்பார்க்கப்படுகின்றது.

**2) போக்குவரத்து (Transport)**

இப்பிரதேசத்தில் உள்ள புகையிரதப் பாதைகளும், A9 நெடுஞ்சாலை வீதிகளும் யாழ்ப்பாணத்தை, இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் தொடுக்கின்றன. 1990ம் ஆண்டுக்கு முன்னர் புகையிரதப் போக்குவரத்து யாழ்ப்பாணத்தில் இருந்து தென்மராட்சி ஊடாக நடைபெற்றது. தற்போது புகையிரதத் தண்டவாளங்கள் அகற்றப்பட்டும், புகையிரத நிலையங்கள் சேதமாக்கப்பட்டும் உள்ளன. யாழ்ப்பாணத்தையும், தென்மராட்சியையும் மன்னாருடனும், கிளிநொச்சியுடனும் தொடுக்கின்ற கேரதீவு துறைமுகமும், கரையோரப் பாதையும் திறக்கப்படாமையால் பயன்படுத்த முடியவில்லை.

1990ம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை போக்குவத்து சபை, 17 சாலை வழிகளால் 35 பஸ்களின் சேவையை நடாத்தியது 2000ம் ஆண்டின் ஆரம்பத்தில் 26 பஸ்களும், 30 தனியார் பஸ்களும் 14 சாலை வழிகளால் சேவையில் ஈடுபட்டன. தற்போது யாழ்ப்பாணத்திற்கும் கொடிகாமத்திற்கும், கொடிகாமத்திற்கும் பருத்தித்துறைக்கும் இடையில் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளே நடைபெறுகின்றன. மீளக் குடியமரும் மக்களின் போக்குவரத்து தேவையை நிறைவு செய்வதற்கு தேவையான பஸ்கள் பற்றாக் குறையாக இருப்பதுடன், வீதிகள் தரமற்றதாகவும், பாதிப்படைந்தும் காணப்படுவதால் போக்குவரத்து சேவையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்திகரமாக மேற்கொள்ள முடியவில்லை. பழுதடைந்த பஸ்களைத் திருத்துவதற்கு தேவையான உதிரிப்பாகங்களை பெறுவதில் உள்ள தடைகளும், வளப்பற்றாக்குறையும் நிலவுகின்றது.

போக்குவரத்து தொடர்பான அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு வவுனியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே புகையிரதச் சேவை மீள ஆரம்பிக்கப்படவும், வீதிகளை செப்பனிடவும், கேரதீவு துறைமுகத்தையும், கரையோரப் பாதையையும் திறப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை தகுந்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் எனவும், சாலைவழிப் போக்குவரத்திற்கான பஸ்களை அதிகரித்து மக்களின் போக்குவரத்து தேவையை நிறைவுசெய்ய வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3) மின்சாரம் (Electricity)

தென்மராட்சிப் பிரதேசத்தில் 1990ம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை மின்சார சபையினால் தேசிய சேவை ஊடாக மின்சாரம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் மின்விநியோகம் நிறுத்தப்பட்டதனால் இப்பிரதேசத்தினுடைய பல கைத்தொழில்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. 2000ம் ஆண்டின் முற்பகுதியில் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு மட்டும் மின்சார உற்பத்தி இயந்திரங்கள் மூலமாக மின்விநியோகம் மேற்கொள்ளப்பட்டன. போர் நடவடிக்கையின் பின்னர் மின்விநியோகம் முற்றாக தடைப்பட்டதுடன். மின்விநியோக வயர்கள், கம்பங்கள் என்பனவும் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு மாத்திரம் மின்விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் (சாவகச்சேரி, மீசாலை, கொடிகாமம், கைதடி) ஏனைய 75% ஆன பிரதேசங்கள் மின்சார வசதி இன்றிக்காணப்படுகின்றன.

போர் நடவடிக்கைகளால் மின்மாற்று நிலையங்கள், மின் உபகரணங்கள் சேதம் அடைந்து இருப்பதனால் அவற்றை மீள்உருவாக்கம் செய்ய மின்சார சபையானது விரைவில் தகுந்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மின்சார வசதி இன்றி காணப்படும் 75% ஆன பிரதேசத்திற்கு மின்வழங்கவும், இயங்காமல் உள்ள கைத்தொழிற்சாலைகளையும், ஏனைய நிறுவனங்களையும் மீள இயங்கச் செய்வதற்கும், முக்கியமாக பாடசாலை மாணவர்களதும், தொழில் புரிவோர்களதும் நலனைக் கருத்தில் கொண்டு இப் பிரதேசத்தினுடைய, சீரான மின்விநியோகம் விரைவில் மேற்கொள்ளப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 4) தபால் (Postal)

தென்மராட்சியின் அண்மைக்காலப் பாதிப்புக்களுக்கு முன்பு 4 பெரிய அஞ்சல் நிலையங்களும், 23 உப அஞ்சல் நிலையங்களும் இயங்கி வந்தன. தற்போது கொடிகாமத்தைத் தவிர ஏனைய அனைத்து அஞ்சல் நிலையக் கட்டடங்களும் அதனுடைய உடைமைகளும் சேதம் அடைந்தும் சொத்துக்கள் இழக்கப்பட்டும் உள்ளன. தபாற்சேவையை சிறப்பாக நடாத்த தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனவசதியின்மை, ஆளணிப்பற்றாக் குறை என்பனவற்றுடன் தொலைபேசி வசதிகள், தந்தி வசதிகள் என்பன போதுமானதாக இல்லை.

இப் பிரதேசத்தினது தபாற் சேவையை சீரமைப்பதற்கு அஞ்சல் நிலையக் கட்டடங்களை திருத்தியும், வாகனவசதி, ஆளணி வசதி, தொலைபேசி வசதி என்பவற்றினை ஏற்படுத்திக் கொடுக்க தபால் திணைக்களம் முன்வருதல் வேண்டும்என எதிர்பார்க்கப்படுகின்றது.

**5) தொலைத்தொடர்பு**

**(Telecommunication)**

தென்மராட்சிப் பிரதேசத்தின் 2000ம் ஆண்டு முற்பகுதியில் பல தனியார்கள் தொலைத்தொடர்பு சேவையினை வழங்கிவந்தனர். அண்மைக்கால அசம்பாவிதங்களால் 100 WLL தொலைத்தொடர்பை உள்ளடக்கிய தொலைத்தொடர்பு சேவையும், 40 தரை தொடர்புகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரியில் உள்ள PAB X(100 இணைப்பு) தொலைபேசி பரிவர்த்தனை நிலையம், ஏனைய தொடர்பு நிலையங்களோடு தொடர்பு கொள்ள முடியாமல் ஏறக்குறைய 10 மில்லியன் இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

தற்போது ஒரு சில தனியார்கள் முதலீட்டினை மேற்கொண்டு தொலைத் தொடர்பு சேவையை நடாத்தி வருகின்ற போதும் அது தென்மராட்சிப் பிரதேச மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. அத்துடன் உள்நாட்டுக்கு இடையிலும், வெளி நாட்டுக்கு இடையிலும் உள்ள தொடர்புகள் குறைவாக இருப்பது அந்தப் பிரதேசத்தின் பின்னடைவை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது. எனவே தென்மராட்சிப் பிரதேசத்திற்கு புதிய பரிவர்த்தனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு தொலைத்தொடர்பு சேவையை விரிவுபடுத்த தொலைத் தொடர்பு திணைக்களம் முன்வருதல் வேண்டும்.

**6) கட்டடமும் நிர்மாணமும்**

**(Building and Construction)**

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏறக்குறைய 125 பொதுக்கட்டடங்கள் அமைந்திருந்தன. அவற்றில் பல்வேறுபட்ட தரத்தினை உடைய கட்டடங்கள் அண்மைக் கால அசம்பாவிதங்களால் சேதமாக்கப்பட்டு உடைமைகளும் அழிக்கப்பட்டுள்ளன. சேதம் அடைந்த 75% ஆன கட்டடங்களில் ஒரு சில கட்டடங்கள் (சாவகச்சேரி சந்தைக்கட்டடம்) மீள்குடியமர்வு புனர்வாழ்வு அமைச்சினால் மீள் உருவாக்கம் செய்யப்பட்டு இருந்தாலும் ஏனைய கட்டடங்கள் திருத்தம் செய்யப்படவில்லை. அவை தற்போது வேறு தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. குறிப்பாக பிரதேச செயலகம், கல்வித் திணைக்களம், விவசாய சேவை நிலையம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே இப் பிரதேசத்தில் உள்ள அழிந்து போன பொதுக்கட்டடங்களை மீள் உருவாக்கம் செய்வதற்கு கட்டடத்திணைக்களமும், வெளிநாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களும் முன்வருதல் வேண்டும். வங்கிக் கட்டடங்கள் உடனடியாக திருத்தப்பட வேண்டிய நிலையிலும், சாவகச்சேரி வைத்தியசாலை முழுமையாகத் திருத்தப் படாத நிலையிலும் காணப்படுகின்றன. இதனால் மக்களும் பல்வேறுபட்ட நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர். இவை விரைவில் மீள் உருவாக்கம் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப் படுகின்றன.

### 7) நீர்வளம் (Water Resource)

தென்மராட்சிப் பிரதேசத்தினுடைய நீர்வளம், கிணறுகள், குளங்கள் என்பவற்றின் மூலமாக பெற்றுக் கொள்ளப் படுகின்றது. வருடாந்த மழைவீழ்ச்சியால் 134 000 AC நீர் பெற்றுக் கொள்ளப்பட்டு அதில் 42 250 AC நீர் குளங்கள் மூலமாக சேமிக்கப் பட்டும் எஞ்சிய பகுதி கடல் நீர் ஏரியைச் சென்றடைகின்றது. இப்பிரதேசத்தின் நீர்த் தாங்கிகளும், குளங்களும் சாவகச்சேரியில் - 225 ஆகவும், பளையில் - 116 ஆகவும் காணப்படுகின்றன. இவற்றில் சேமிக்கப்பட்ட நீரை விவசாயிகள் சிறுபோக வேளாண்மைக்கு பயன் படுத்தி வந்தனர்.

அண்மைக்கால போர் நடவடிக்கைகளினால் குளங்கள், அணைக்கட்டுக்கள், நீர்வாய்க்கால்கள், கிணறுகள் என்பன அழிக்கப்பட்டதனால் மழைநீர் சேகரிக்கப் படாது கடல்நீர் ஏரியைச் சென்றடைகின்றது. வெடி பொருட்களது நச்சுத் தன்மையால் நீர்நிலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டமையால் மக்களுக்கு நோய்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே குளங்கள், அணைக்கட்டுக்களை புனரமைப்பு செய்து கடலுக்கு செல்லும் மழைநீரை தடுப்பதன் மூலம் சிறுபோக வேளாண்மையை மேற்கொள்ள முடியும். நச்சுத் தன்மையால் பாதிக்கப்பட்ட நீர்நிலைகளை திருத்துவதற்கு சுகாதார அமைப்புக்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 8) இயற்கைத் தாவரம் (Green Cover)

தென்மராட்சிப் பிரதேசம் பாரம்பரியமாக 'குழைக்காடு' என அழைக்கப்பட்டு வந்தது. இதற்குக் காரணம் இப் பிரதேசம் இயற்கைத் தாவரங்களால் சூழப்பட்ட ஒரு பிரதேசம் ஆகும். போர் நடவடிக்கைகளுக்கு முன்பு இப்பிரதேசத்தில் பாரிய மரங்கள் பசுமை நிறைந்தவையாகக் காணப்பட, தற்போது 80% ஆன மரங்கள் அழிக்கப்பட்டு பாலைவனமாக காட்சிதருகின்றது. 1985ம் ஆண்டில் இருந்து இன்றுவரை 2 லட்சம் தென்னைமரங்களும், 1 மில்லியன் பனை மரங்களும் போர் நடவடிக்கைகளுக்காக அழிக்கப் பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் அழிக்கப்பட்ட மரங்களுக்குப் பதிலாக மீள்நடுகைத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதுடன் அதனை துரித கதியில் நடைமுறைப்படுத்தல் வேண்டும். தற்போது சில பகுதிகளில் மீள் நடுகைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் ஏனைய பிரதேசங்களிலும் மேற்கொள்வதற்கு விவசாய திணைக்களங்கள் முன்வருதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9) கல்வி (Education)**

தென்மராட்சிப் பிரதேசத்தின் கல்வி என்ற பிரிவுக்குள் முன்பள்ளிகளும், ஆரம்பக்கல்வியும், இடைநிலைக்கல்வியும், யாழ் பல்கலைக்கழக ஆயுள்வேத பீடமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தென்மராட்சிப் பிரதேசகல்வி வலயம், சாவகச்சேரி வலயக் கல்வித் திணைக்களம், பளை வலயக் கல்வித் திணைக்களம் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரி பிரிவில் 61 பாடசாலைகளும், பளைப்பிரிவில் 32 பாடசாலைகளும் இயங்கி வந்தன. இப்பிரதேசத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் 25 பாடசாலைகளின் தளபாடங்களும், உடமைகளும் சேதமடைந்ததுடன் 35 பாடசாலைகளின் கட்டடங்கள் முற்றாக அழிவடைந்துள்ளன. இவற்றிற்கு ஏற்பட்ட இழப்பீட்டின் மொத்தப் பெறுமதி 270 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் 79 முன்பள்ளிகள் 1446 மாணவர்களுடன் இயங்கி வந்தன. வன்செயல்கள் காரணமாக முன்பள்ளிகளின் தளபாடங்கள், கல்வி உபகரணங்கள் என்பன சேதம் அடைந்தும், காணாமல் போயுமுள்ளன. இவற்றிற்கு ஏற்பட்ட இழப்பீட்டின் பெறுமதி ரூபா 537000 ஆகும்.

தென்மராட்சியின் கைதடிப் பிரதேசத்தில் யாழ் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்குகின்ற சித்தமருத்துவக் கல்லூரி அமைந்துள்ளது. வன்செயல்கள் காரணமாக இக்கல்லூரியின் உடமைகள், கட்டடங்கள் என்பன சேதமாக்கப்பட்டுள்ளன. தற்போது மீளக்குடியமர்வு அமைச்சினால் சில பாடசாலைகளில் தற்காலிக கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு இயங்கி வருகின்றமையும், முன்பள்ளிகளில் ஒரு சிலவே தற்போது மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும், சித்தமருத்துவக் கல்லூரி குறைந்தளவு வளங்களுடன் இயங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசத்தில் உள்ள மறவன்புலவு, தனங்கிளப்பு, கரம்பகம், கைதடி, எழுதுமட்டுவாள் தெற்கு, நாவற்குழியின் ஒரு பகுதி என்பவற்றில் உள்ள பாடசாலைகள் தற்போது இயங்கவில்லை. எனவே கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளை ஈடுசெய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் இயங்காமல் உள்ளபாடசாலைகளை மீள இயங்கச்செய்வதற்கு கல்வித் திணைக்களமும், கல்வி அமைச்சும் முன்வருதல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**10) சுகாதாரம் (Health)**

தென்மராட்சிப் பிரதேசத்தில் பல்வேறுபட்டவைத்திய நிலையங்கள் தமது சேவைகளை மக்களுக்கு வழங்கி வந்தன. அத்துடன் சுகாதார அமைப்புக்களும் பிரதேசரீதியாக சேவையில் ஈடுபட்டன. இப்பிரதேசத்தின் மாவட்டவைத்தியசாலை சாவகச்சேரியிலும், மத்திய மருந்தகமும் தாய்சேய் நிலையமும் கொடிகாமம், வரணி என்பவற்றிலும், மத்திய மருந்தகம் கைதடியிலும், அமைந்துள்ளன. இவை தவிர, 7 தனியார் மருந்தகங்களும் தமது சேவைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கிவந்தன. இப்பிரதேசங்களில்ஏற்பட்ட அசம்பா விதங்களால் அனேகமான மருத்துவ நிலையங்கள் சேதம் அடைந்து, உடமைகளும் அழிக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை முற்றாகச் சேதமடைந்து உள்ளதால் தற்போது ஒரு சில பகுதிகளே திருத்தம் செய்யப்பட்டுள்ளன. வைத்திய சாலை அடிப்படை வசதிகள் இன்றியும், போதிய மருந்துகள் இன்றியும் இயங்கி வருவதனால் இப்பிரதேச மக்கள் மருத்துவ வசதியை பூரணமாகப் பெற்றுக் கொள்ள முடியாது யாழ் வைத்தியசாலையை நாடிச்செல்லும் நிலை காணப்படுகின்றது. எனவே இப்பிரதேச மக்களின் மருத்துவ தேவைகளைக் கருத்தில் கொண்டு சுகாதாரத்திணைக்களம் தகுந்த நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**11) வீடமைப்பு (Housing)**

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்க ளின் வசிப்பிடங்களுக்கான வீடுகள் பல்வேறு தரத்தில் அமைந்துள்ளன. அவற்றில் நிரந்தர வீடுகள் 10314 ஆகவும், அரை நிரந்தர வீடுகள் 5362 ஆகவும். தற்காலிக குடிசைகள் 4406 ஆகவும் காணப்பட்டன. கடந்தகால போர் நடவடிக் கைகளினால் 90% ஆன வீடுகளும், உட மைகளும் அழிக்கப்பட்டுள்ள. தற்போது மீளக்குடியமர்ந்த மக்களில் 50% ஆனவர் களே தமது வீடுகளை சிறிதளவு திருத்தம் செய்திருந்தாலும், ஏனைய வறிய மக்கள் நிதிக் கஸ்டம் காரணமாக எதுவித திருத்த வேலைகளிலும் ஈடுபட வில்லை. மீள் குடியமர்வு அமைச்சினால் சில பிரதேச மக்களுக்கு நிதி உதவிகளும், தற்காலிக வீடமைப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டு இருந்தாலும், முழுமையாக இப்பிரதேச அபிவிருத்தியில் ஏனைய வீடுகள் மீள் உருவாக்கம் செய்யப்படவில்லை. எனவே வீடமைப்பிற்கு தேவையான கடன்வசதி களையும், வீட்டு உபகரணங்களையும் வழங்குவதற்கு மீள் குடியமர்வு அமைச்சு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

**12) விவசாயம் (Agriculture)**

தென்மராட்சிப் பிரதேசத்தின் முக்கியமான வாழ்வாதாரப் பயிர்ச்செய்கையாக விவசாயம் காணப்படுவதோடு, இங்கு13.700 குடும்பங்கள் விவசாயக் குடும்பங்களாக உள்ளன. இப்பிரதேசத்தில் 1999ம் ஆண்டில் 4000 ha நிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு ஏக்கருக்கு 40 புசல் நெல் உற்பத்தி கிடைத்தது. இது தவிர 177 ha நிலப்பரப்பில் புகை யிலை, மிளகாய், வெங்காயம் என்பன வும், 140 ha நிலப்பரப்பில் குரக்கன், பயறு, உழுந்து, கௌபி என்பனவும், 130 ha நிலப்பரப்பில் காய்கறி பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது விவசாய நிலங்களில் மிதிவெடி, கண்ணிவெடிகள் காணப் படுவதனால் விவசாய பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலையில், பெருமளவான விவசாயக் குடும்பங்கள் வருமானம் இன்றிக் காணப்படு கின்றன. விவசாய நிலங்கள் பெருமளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்பாதுகாப்பு வலயத்தினுள் முடக்கப் பட்டமையினால் பயிர் செய்யப்படும் நிலப்பரப்பின் அளவு 50% இனால் குறைக்கப்பட்டுள்ளது. எனவே இப்பிர தேசத்தில் உள்ள மிதிவெடிகள், கண் ணிவெடிகள் அகற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும், உயர்பாதுகாப்பு வலயத்துள் இருக்கும் விவசாய நிலங் களை மீட்பதற்கும், சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் நடவடிக்கை எடுப்பதன் மூலம், பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களின் மறுவாழ்விற்கு உதவ முன்வருதல் வேண்டுமென எதிர்பார்க் கப்படுகின்றது.

**13) பணப்பயிர்கள் (Cash Crops)**

தென்மராட்சிப் பிரதேசத்தின் பணப்பயிர்கள் என சிறப்பிக்கப்படும் மா, பலா, தோடை என்பவற்றில் மாம்பழச்செய்கை 28% இலும், பலாச் செய்கை 35% இலும் மேற்கொள்ளப் பட்டது. பளைப் பிரதேசத்தில் தெங்கு செய்கை 1500ha நிலப்பரப்பிலும், பனைமரங்கள் 6000ha நிலப்பரப்பிலும் காணப்பட்டன. அண்மைக்கால அசம் பாவிதங்களால் பண வருமானத்தை ஈட்டித் தந்த இப் பயிர்களில் 75% ஆன வை அழிக்கப்பட்டுள்ளன.

பனை மரங்கள் அழிக்கப்பட்டதனால், 1300 பனைசார் உற்பத்தியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கள், கருப்பநீர் உற்பத்திகளும் பாதிக்கப்பட்டுள்ளன. வீட்டுத்தோட்டமாக மேற்கொள்ளப்பட்ட தென்னைமரங்களும் செல்வீச்சினால் அழிந்துள்ளன. எனவே இப்பிரதேசத்திற்கு பணவருமானத்தை ஈட்டித்தந்த இப்பயிர் களினை மீள்நடுகை செய்வதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களின் வருமானத்தைக் கிடைக்கச் செய்ய விவசாய அபிவி ருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**14) கால்நடை (Livestock)**

தென்மராட்சிப்பிரதேசம்இயற்கையான புல் நிலங்களால் சூழப்பட்டு இருந்த மையால் ஆடுகள், மாடுகள் என்பன வளர்க்கப்பட்டதுடன், கோழிப் பண் ணைகளும் குடிசைத் தொழிலாக மேற் கொள்ளப்பட்டன. இவற்றின் மூலம் இறைச்சி, பால், முட்டை உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு அதிக வருமானம் பெறப்பட்டது. கடந்த கால அசம்பாவிதங் களால் கால்நடைகள் இறந்தும், காணா மலும் போனதால் 658 000ℓ பால் உற்பத்தியும், 1415 568 முட்டை உற்பத்தியும் வருடாந்தம்பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது மேற்கொள்ளப்படும் சிறிதளவான உற்பத்திகளால் இப்பிரதேச மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட முடியாது உள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே இழக்கப்பட்ட கால் நடைகளுக்கு நட்ட ஈட்டுக் கொடுப்பனவையும், சலுகை அடிப்படையில் கால்நடைகளை வழங் கவும் கால்நடைத் திணைக்களம் முன் வருதல் வேண்டுமென எதிர்பார்க்கப் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15) மீன்பிடி (Fisheries)

தென்மராட்சிப் பிரதேசத்தின் மீன்பிடி கைதடி, நாவற்குழி, ஆனையிறவு கரையோரப் பிரதேசத்திலும், மேற்கொள்ளப்பட்டன. இப்பிரதேசத்தில் 1622 மீனவக் குடும்பங்கள் இத் தொழிலை மேற்கொண்டு. வருடாந்தம் 600mt மீன்கள் பிடிக்கப்பட்டன. இதன் மூலம் இக்குடும்பங்கள் அதிகளவான வருமானத்தைப் பெற்றிருந்தன.

அண்மைக்கால அனர்த்தங்களால் மீனவர்களது படகுகள், உபகரணங்கள் சேதமாக்கப்பட்டதால், 70.14 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு தற்போது கடல்வலயச்சட்டம் மிக இறுக்கமாக இருப்பதுவும், பதனிடும் நிலையம், ஐஸ் உற்பத்தி நிலையம் என்பன அழிவடைந்திருப்பதுவும் தடையாக இருப்பதுவும், குறிப்பிடத்தக்கது. எனவே மீனவர்கள் தமது தொழிலை மேற்கொள்வதற்குத் தேவையான உபகரணங்களை வழங்கி, கடல்வலயச் சட்டத்தினை தளர்த்துவதற்கு சம்பந்தப் பட்ட நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 16) கைத்தொழில் (Industrial)

தென்மராட்சிப் பிரதேசத்தில் 1999ம் ஆண்டு தரவுகளின்படி 3063 கைத்தொழில் நிலையங்கள் இயங்கி வந்தன. இவற்றைவிட வடகீழ் மாகாண சபையினால் நிர்வகிக்கப்படும் 7 நெசவு நிலையங்கள் விடத்தற்பளை, வேதக் கேணி, மந்துவில், சரசாலை. நாவற் குழி, கைதடி, கல்வயல் போன்ற பகுதி களில் செயற்பட்டு வந்தன. இப் பிரதே சத்தில் உள்ள மக்களால் பெருமளவான குடிசைக் கைத்தொழில்களும் மேற்கொள்ளப் பட்டுவந்தன.

இப்பிரதேசங்களில் ஏற்பட்ட வன் செயல்கள் காரணமாக கைத்தொழில் நிலையக் கட்டடங்கள், உபகரணங்கள் என்பன சேதமடைந்து காணப்படுவதனால், இவற்றிற்கு ஏற்பட்ட இழப்பீட்டின் மொத்தப் பெறுமதி 11மில்லியன் ரூபா என மதிப்பிடப் பட்டுள்ளது. தற்போது ஒரு சில தனியார் களினால் மட்டும் முதலீடு செய்யப் பட்டு சில கைத்தொழில் நிறுவனங்கள் இயங்கினாலும், 80% ஆன கைத் தொழில் நிலையங்கள் மீள ஆரம்பிக் கப்படவில்லை. இதனால் இப் பிரதேச இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பின்றிக் காணப்படுகின்றனர். எனவே இப் பிரதேசக் கைத்தொழில் நிலையங்களை மீள ஆரம்பித்து, வேலை அற்றோருக்கு வேலைவாய்ப்பினைப்பெற்றுக்கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் முன்வருதல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின் றது.

தொகுத்து நோக்குகின்றபோது, தென்மராட்சிப்பிரதேசம் எல்லா வகையான துறைகள் ரீதியாகவும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு மிகவும் பின்தங்கிய நிலையை அடைந்துள்ளது. அண்மையில் வெளிநாட்டு அமைச்சர் ஒருவர் தென்மராட்சி அழிவுகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையிட வந்தபோது, இப்பிரதேசம் "ஜப்பானில் ஹீரோசிமா, நாகசாகியா, நகரங்கள் அழிவடைந்தவை மாதிரிக் காணப்படுகின்றன" என விமர்சித்தார். அந்தப் பிரதேசத்தை யாரும் நேரில் சென்று பார்த்தால் அழிவுகளின் கொடூரம் விளங்கும். தற்போது மீள குடியமர்வு அமைச்சினால் சில அடிப் படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக் கப்பட்டு, அப்பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டிருந்தாலும் இன்னும் அங்கு போரின் வடுக்கள் மறையவில்லை.

எனவே இப்பிரதேசத்தின் அபிவி ருத்தியை முன்னெடுப்பதற்கு அரசாங்கமும், வெளிநாட்டு நிறுவனங்களும் ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுத்து, அழிவ டைந்த இப்பிரதேசத்தினை மீளக் கட்டி எழுப்புதல் வேண்டும். அத்துடன் வருமா னத்தை ஈட்டக் கூடியவாறு இப்பிரதேச மக்களுக்கு சுயதொழில் முயற்சிகளுக்கான ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுதல் வேண் டும். ஒட்டு மொத்தமாக சகல துறைகளை யும் அபிவிருத்தி செய்து, அதனூடாக பிரதேச அபிவிருத்தியை முன்னெடுப் பதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியை அடைய ஒவ்வொருவரும் அர்ப்பணிப் புடன் செயற்பட வேண்டும். இதன் மூலம் "அபிவிருத்தி" என்ற இலட்சியத்தை அடையமுடியுமென்றால் மிகையில்லை.

## REFERENCES


1) Resettlement & Rehabilitation Authority of the North - June (2001)
2) மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம் புள்ளிவிபரக் கைநூல் (99/2000)
3) பிரதேச செயலகம் - தென்மராட்சி மூலவள ஆய்வு (99/98)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்திய அபிவிருத்தியில் நிறுவனத்தின் பங்கு

# Role of Institutions in Regional Development

*Mr.R.Nanthakumaran,*
*Dean*
*Faculty of Business Studies.*

ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது அந்த நாட்டின் அனைத்து மக்களினதும் வாழ்க்கைத்தர முன்னேற்றத்தினை குறித்து நிற்கிறது. வாழ்க்கைத் தரம் என்பது வெறுமனே பொருளாதார ரீதியான தலாவருமானத்தினை மட்டும் குறிக்கவில்லை. பல்வேறுபட்ட அம்சங்களையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது. இங்கே வருமானச் சமமின்மை என்பது முக்கிய பண்பாகும். இலங்கையில் ஒட்டுமொத்தமாக பார்க்கின்றபோது வருமானச்சமமின்மை குறைவடைந்து செல்வதையே குறிகாட்டிகள் எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் பிராந்தியங்களுக்கிடையிலான வருமானச்சமமின்மை ஒரு பிராந்தியத்தில் வாழ்கின்ற வெவ்வேறு பிரிவினர்களுக்கிடையிலான வருமானச்சமமின்மை என்பன அதிகரித்துச்செல்கின்ற போக்கே காணப்படுகின்றது. குறிப்பாக நீண்டகாலமாக போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணம் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது பின்தங்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இரண்டாயிரம் ஆண்டு இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80%மானது ஐந்து மாகாணங்களில் இருந்து பெறப்பட்டது. மேற்கு வடமேற்கு, மத்திய, தெற்கு சப்பிரகமுவ மாகாணங்களே இந்த பங்களிப்பைச் செய்துள்ளன. மேல் மாகாணம் மட்டும் 50% பங்களிப்பைச் செய்துள்ளது. அதேசமயம் வடமாகாணம் 1990ல் 4.4 சதவீத பங்களிப்பில் இருந்து 2.1 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. கிழக்கு மாகாணத்தை பொறுத்த வரையில் ஏறத்தாழ 4.7 சதவீதமான பங்களிப்பை 1990களில் இருந்து வழங்கி வருகிறது. இத்தகவல்களின்படி வடக்கு கிழக்கு மாகாணத்தின் பங்களிப்பானது பத்து சதவீதத்திலும் குறைவாகவே உள்ளது. அத்துடன் மேல்மாகாணத்துடன் ஒப்பிடும்போது பலமடங்கு பின்தள்ளப்பட்டுள்ளதும் புலனாகிறது. இதில் இருந்து இலங்கையில் பொருளாதார நடவடிக்கைகள் ஒருசில மாகாணங்களில் செறிவாக இருப்பதும் தெளிவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கக்கூடிய புள்ளி விபரத் தரவுகளின் அடிப்படையில் நோக்கும் போது வடகிழக்கு மாகாணம்தான் தலா வருமான அடிப்படையில் மிகவும் வறிய பிரதேசமாக காணப்படுகிறது. 1990களின் ஆரம்பகாலத்தில் சப்பிரகமுவ ஊவா மாகாணங்களே தலாவருமான அடிப்படையில் மிகவும் வறிய பிரதேசமாக காணப்பட்டன. ஆனால் 2000 ஆண்டுகளில் இந்த இடத்தை வடக்கு கிழக்கு மாகாணம் பெற்றுள்ளது. இலங்கையின் தலா வருமானம் 2000 ஆண்டில் ரூ.63,000/- ஆக உள்ளது. வடமாகாணத்தில் தலாவருமானம் ரூ.37.206/- ஆக காணப் பட்டது. எனவே இன்று இலங்கையில் உள்ள மாகாணங்களில் தமிழர் பெரும் பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களே பொருளாதார ரீதியில் வளர்ச்சி குறைந்த பிரதேசங்களாக காணப்படுகின்றன. இவற்றை கட்டி யெழுப்புவதற்கு பிராந்திய ரீதியில் அபிவிருத்திக்கான செயற்பாடுகள் அவசியம்.

இத்தகைய பிராந்திய ரீதியான அபிவிருத்தியை முன்னெடுத்து பொருளாதார வளர்ச்சி, வேலையின்மை, வருமான அதிகரிப்பு போன்றவற்றை ஏற்படுத்துவதற்கு நிறுவன அமைப் பின் பங்களிப்பு எத்துணை அவசியம் என்பதை இக்கட்டுரை ஆராய விளைகி றது.

அபிவிருத்திப் பொருளியலில் அரசு, சந்தை இவற்றில் அபிவி ருத்திக்கு எது சிறந்தது என்ற வாதப்பிரதிவாதம் நீண்டகாலமாக இடம்பெற்று வருகிறது. சந்தை தோல்வியை சுட்டிக்காட்டி அரசின் தலையீட்டை ஆதரிப்பவர்கள் அரச திட்டமிடல், ஒருங்கிணைப்பு என்ப தற்கு சாதகமாக உள்ளனர். அரசின் செயற்பாடுகளில் காணப்படும் குறை பாடுகளை சுட்டிக்காட்டி திறந்த சந்தை ஆதரவாளர்கள் பொருளாதார நடவ டிக்கைகளில் அரசின் தலையீடு மிக குறைவாக இருத்தல் வேண்டும் என்கின்றனர். இவை இரண்டுமே உரிய முறையில் செயற்படவில்லை என்பதை உணர்ந்து கொண்டவர்களது கவனம் தற்போது நிறுவனங்கள் மீது திரும்பியிருக்கிறது. திட்டங்களை சிறந்தமுறையில் நடைமுறைப்படுத்து வதிலும், அபிவிருத்திக் குறிக்கோளை அடைந்து கொள்வதிலும் நிறுவனங் கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்ய முடியும், என்று இவர்கள் வாதிடுகிறார்கள். நிறுவன ரீதியான அணுகுமுறைக்கு சாதகமாக வாதிடு பவர்கள் அரசின் திருத்திய செயற் பாட்டினாலும் சிறந்த நிறுவன சூழலினாலும் மட்டுமே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வறுமை யை குறைக்கலாம் என்கின்றனர். இவர்களின் கருத்துப்படி அரசசாரா நிறுவனங்களும், சமூக அடிப்படையி லான நிறுவனங்களும் எந்த ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அபிவிருத்தித்திட்டத்தினதும் வெற்றிக்கு முக்கியமான கூறுகளாகும்.

நாடுகளுக்கும் பிராந்தியங்களுக்குமிடையிலான வருமான வேறுபாட்டை விளக்குவதற்கு அபிவிருத்திப் பொருளியலாளர்களில் மூன்று வேறுபட்ட சிந்தனைப்பள்ளிகள் உண்டு. முதலாவது சிந்தனைப்பள்ளியைச் சார்ந்தவர்கள் புவியியலுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். இவர்களின் கருத்துப்படி புவியியல் காலநிலையும் இயற்கை வளங்களின் கிடைப்பனவும் நிர்ணயிக்கிறது. அத்துடன் ஒரு நாட்டின் அல்லது பிராந்தியத்தின் நோய்ச்சுமை போக்குவரத்துச் செலவு, தொழில்நுட்ப முன்னேற்றத்தின் ஊடுருவல் என்பவற்றையும் தீர்மானிக்கிறது. எனவே விவசாய உற்பத்தித்திறன் மனிதவள தரம் என்பவற்றில் செல்வாக்குச் செலுத்துகிறது. இந்தப் பின்னணியில் Jard Dimond, Jeffry Sachs என்பவர்களதுஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. இரண்டாவது சிந்தனைப்பள்ளியைச் சார்ந்தவர்கள் சர்வதேச வர்த்தகத்தை முதன்மைப்படுத்துகின்றனர். இவர்கள் உற்பத்தித்திறன் அதிகரிப்புக்கும் வருமான வளர்ச்சிக்கும் நாடுகள் பிராந்தியங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு அதிகரிப்பது அவசியம் என்கின்றனர். இவர்கள் கருத்துப்படி ஒருங்கிணைப்பின் காரணமாக பரந்த உலக பொருளாதாரத்தில் பங்கு கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்கின்றனர். உலக மயமாக்கலினால் ஏற்படும் தாக்கம் யாருக்கு அதிகம் என்ற வாதப் பிரதி வாதங்கள் காணப்பட்டாலும் உலகமயமாக்கல் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோலும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும்.

இறுதியாக மூன்றாவது அணுகுமுறை முன்னர் குறிப்பிட்டது போல நிறுவனங்களை மையப்படுத்தியதாக அமைகிறது. குறிப்பாக சொத்துரிமை, சட்டத்தின் பங்கு என்பவற்றை முதன்மைப்படுத்தியதாக அமைகிறது. இவர்களின் கருத்துப்படி சமூகத்தில் காணப்படுகின்ற மறைமுகமானதும் வெளிப்படையானதுமான நடத்தை நியமங்களும் இவற்றின் மூலம் விரும்பத்தக்க பொருளாதார நடத்தையை ஏற்படுத்தக் கூடிய பொருத்தமான ஊக்குவிப்புக்களை உருவாக்கக்கூடிய திறனுமே அபிவிருத்திக்கு அவசியம் ஆகும். நாடுகளுக்கும், பிராந்தியங்களுக்கும் இடையிலான வருமான மட்டத்தில் உள்ள வேறுபாட்டை மேற்கூறிய மூன்று காரணிகளினதும் எந்தளவு தூரம் விளக்கக்கூடியவை என்பது தெளிவாக தென்படவில்லை. இதற்கான காரணம் அவற்றிற்கிடையே உள்ள சிக்கலான பிணைப்புத்தான். கீழேயுள்ள படம் அபிவிருத்தியையும் அதனை தீர்மானிக்கும் காரணிகளுக்கிடையேயான சிக்கலான தொடர்புகளையும் விளக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்த படத்தில் இருந்து புவியியல் காரணி ஒரு பக்கத் தொடர்புடையது. இது நேரடியாகவும் அபிவிருத்தியை தாக்கலாம் மறைமுகமாகவும் தாக்க லாம். புவியியல் சூழல் விவசாய உற்பத்தி திறன் மூலம் வருமானத்தை நேரடியாகத்தாக்கலாம். அல்லது சந்தைகளின் ஒருங்கிணைப்பு அளவு நிறுவனங்களின் தன்மையைப் பொறுத்து இவற்றின் ஊடாக மறைமுகமாகப் பாதிக்கலாம். ஆனால் வர்த்தக ஒருங்கிணைப்பு, நிறுவனங் களிற்கும் வருமான மட்டத்திற்குமான தொடர்புகள் இரு பக்கமாகவும் காணப் படலாம். ஒருங்கிணைப்பு வருமான மட்டத்தை அதிகரிக்கும் அதே சமயம் உற்பத்தி திறன் அதிகரிப்பு வர்த்தக ஒருங்கிணைப்பிற்கு காரணமாகும். இதே போன்று சிறந்த நிறுனங்கள் சொத்துரிமைச் சட்டங்கள் முதலீட்டை அதிகரித்து தொழில்நுட்ப முன்னேற்றத்தை வளர்த்து வருமான அதிகரிப் பிற்கு வழிகோலும். மறுபுறமாக மக்களின் செல்வச்செழிப்பு உயரும் போது அவர்கள் புதிய நிறுவனங்கள் சட்டம் ஒழுங்குகளுக்கு கேள்வியை ஏற்படுத்தலாம்.

நிறுவனங்களும் பொருளாதார வளர்ச்சியும் பற்றிய அண்மைக்கால ஆய்வுகளில் அதிகமானவை குறிப் பிட்ட ஒரு தொகுதி நிறுவனங்களி லேயே கூடிய கவனம் செலுத்தியுள் ளன. சொத்துரிமையை பாதுகாக்கக் கூடிய நிறுவனங்கள், ஒப்பந்தங்கள், உடன்படிக்கையை நிறைவேற்றக்கூடி ய நிறுவனங்களிலேயே இப்போது கவனம் திரும்பியிருந்தது. இத்தகைய நிறுவனங்களை நாம் சந்தை உருவாக் கும் (Market creating) நிறுவனங்கள் என அழைக்கலாம். இவை சரிவர தொழில்படாவிட்டால் ஒன்றில் சந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் காணப்படலாம், அல்லது சந்தையின் தொழிற்பாடு மோசமாக அமையலாம். ஆனால் நீண்டகால பொருளாதார அபிவிருத்திக்கு முதலீட்டை அதிகரித்தல் தொழில் முன்னேற்றங்களை ஏற்படுத்தல் என்பதற்கும் மேலாக வேறும் பல நிறுவன அமைப்புக்கள் அவசியமாகின்றன. வளர்ச்சியால் ஏற்பட்ட உந்து சக்தியை வேணுவதற்கும், அதிக அதிர்ச்சிகளால் ஏற்படுகின்ற தாக்கங்களுக்கு ஈடு கொடுக்கவும் இத்தகைய அதிர்ச்சிகளினால் ஏற்படும் சுமைகளை சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு பகிர்வதற்கும் உகந்த நிறுவனங்கள் அவசியம். இவற்றை நாம் சந்தை ஒழுங்குபடுத்தும் (Market regulation) நிறுவனங்கள் எனலாம். இவை பொருளாதாரத்தில் காணப்படும் வெளி விளைவுகள், பொருளாதார அளவுத்திட்டம், நிறைவில் தகவல்கள் போன்றவற்றை ஒழுங்கமைத்து சந்தை சிறந்த முறையில் செயற்பட வழிகோலும், உதாரணமாக தொலைத்தொடர்பு போக்குவரத்து, நிதிச்சேவைகளை ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களை குறிப்பிடலாம். மற்றுமொரு வகையான நிறுவன அமைப்பு சந்தையை உறுதிப்படுத்தும் (Market stabilizing) அமைப்புக்களாகும். இவை குறைந்த பணவீக்கம் - பேரினப்பொருளியல் ஏற்படுத்தும் தளம்பல்களை இழிவுபடுத்துதல், நிதி நெருக்கடிகளை தவிர்த்தல் போன்ற செயற்பாடுகளில் கவனம் செலுத்தும், உதாரணம் மத்திய வங்கியின் சிறந்த நாணய மாற்றுவீத முறைமை, வரவு செலவுத்திட்டம், இறைக்கொள்கை என்பவற்றைக் குறிக்கும்.

நான்காவது தேவைப்படும் நிறுவன அமைப்புக்கள் சந்தையை சட்டபூர்வமானதாக்கும் (Market legitimizing) அமைப்புக்களாகும். இதன் மூலம் சமூக பாதுகாப்பு, காப்புறுதி மீள்பங்கீடு முரண்பாடுகளை முகாமை செய்தல் சாத்தியமாகும். உதாரணமாக ஓய்வூதிய கட்டமைப்பு ஏனைய சமூக நிலையங்களை குறிப்பிடலாம்.

நிறுவனம் என்றல் என்ன?

நிறுவனம் என்பது பெரும்பாலும் அபிவிருத்திக்கான வழங்கல் பொறிமுறை எனலாம் அல்லது விளையாட்டின் நியதி "Rules of the game" ஆகும். ஒரு தொகுதி மக்களின் நடத்தை தொடர்புகளை கட்டுப்படுத்துகின்ற சட்டங்கள் என்றும் விளக்கமளிக்கலாம். நிறுவனங்களுக்கு பல்வேறு குணாதிசயங்கள் உண்டு. அவையாவன.

1) ஒரு தொகுதி பங்குபற்றுனர்களினால் அவர்களுக்கிடையிலான தொடர்புகளில் பயன்படுத்தப்படுகின்ற விதிகளும் தடைகளும்.
2) தனியார் மத்தியில் குழுக்களுக்கிடையிலும் தொடர்புகளை நெறிப்படுத்தக்கூடிய தன்மை. இவை சமூக நியமங்கள் பழக்க வழக்கங்களையும், உள்ளடக்கும். வெளிப்படையாக நடை முறைப்படுத்துகின்ற சட்டங்கள் எனலாம். விதிகளும் ஒரு நிறுவனங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையை அடைய அவை சமூக தொடர்புகளில் பிரயோகிக்கப்பட லாம்.

3) எதிர்வு கூறக்கூடிய தன்மை: இவ்விதிகள் எதிர்வு கூறக்கூடியதாகவும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் மீளவும் பயன்படுத்தக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

நிறுவனங்கள் பெரும்பாலும் அமைப்புக்களுடன் தவறாக கருதப்படுவதுண்டு. மிகவும் இறுக்கமாக எடுத்து நோக்கின் அவை இரண்டும் ஒன்றல்ல இந்த மயக்கத்திற்கான மூலம் நிறுவனங்களும் அமைப்புக்களும் சமூக நடத்தையை வடிவமைக்கின்றன என்பது உண்மையாகும். நிறுவன மயப்படுத்திய நடத்தை தனிமனிதனுக்கும் அமைப்புகளுக்குமிடையிலான ஊடல்களினால் வெளிப்படுத்தப்படுகிறது. அபிவிருத்தி முயற்சிகளை இறுதியாக செயற்படுத்துபவை அமைப்புக்கள். இவை உள்ளுக்குள்ளே இருந்து பரந்த நிறுவனச்சூழலில் செல்வாக்குச் செலுத்தக்கூடியவை.

பிளவர் உடைய கருத்துப்படி நிறுவனங்களின் நடத்தைகோலங்கள் சமூகத்தினால் மதிக்கப்படுபவை. பெறுமானமுடைய சமூகதொடர்புகளில் உள்ளடக்கப்படவில்லை. ஆனால் அமைப்புக்கள் நோக்கம் கொண்டவை ஒரு கட்டமைப்பை கொண்டது ஒரு சமூக அலகு.

நோத்தின் கருத்துப்படி நிறுவனங்கள் சட்டப்படியான நடைமுறைப்படுத்தக்கூடிய விதிகளின் முறைமை அமைப்புக்கள், மக்கள் ஒன்றுகூடி ஒரு குறித்த செயற்பாட்டை செயற்படுத்துவதற்கான ஒரு முறைமை.

இவற்றுக்கிடையிலான இந்த தெளிவற்ற வேறுபாட்டை ஏற்றுக் கொண்டு அமைப்புக்கள்தான். நிறுவனச்சூழலை ஏற்படுத்தவும் அதில் காத்திரமான செல்வாக்கு செலுத்தக் கூடியவை என்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதே போன்று மற்றுமொரு அணுகுமுறை காணப்படுகிறது. நிறுவன சூழல்தான் அமைப்புக்களின் செயற்திறனில் தாக்கத்தை ஏற்படுத்தும் இதன் விளைவாக காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்படும். இந்த மாற்றங்களின் காரணமாக நிறுவனச் சூழலில் திருத்தங்களும் மாற்றங்களும் ஏற்படும் என்ற அணுகுமுறையே சாலச்சிறந்தது.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிராந்தியத்தை கட்டியெழுப்புவதற்கான கோரிக்கையாக தற்போது நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் சகல அதிகாரங்களும் கொண்ட இடைக்கால நிர்வாகம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிர்வாகத்தின் மூலம் உருவாக்கப்போகும் அல்லது உருவாகப் போகும் நிறுவன அமைப்புக்கள் அபிவிருத்திக்கு இட்டுச்செல்லுமா என்பதை ஆழமாக சிந்திக்க வேண்டும். தற்போது இலங்கையில் இயற்கை வளங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்வளம், நிலவளம், நீர்வளம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள சட்ட மூலங்கள் சந்தை செயல்பாட்டிற்கு ஊக்கமளிக்கக்கூடியவையாகவும், அருமையான சாதனங்களை சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்ய உதவக் கூடியவையாகவும் இருந்தாலும் வறிய மக்கள் மீது பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தி அவர்களை பொருளாதா செயற்பாட்டில் இருந்து ஓரங்கட்டி விடும் என்ற கருத்தும் பலராலும் முன்வைக்கப்பட்டுள்ளது.

வறிய மக்களை பாதுகாத்து அவர்களது வருமான மட்டத்தையும் உயர்த்தக்கூடியதாகவும் மேற்கூறிய பொதுப்பொருட்களை, சொத்துடமை வரையறை செய்யப்படாத இயற்கை வளங்களை முகாமை செய்வதற்கு உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் அவ்வாறு செயல்படாது காணப்படுவது கவலைக்குரிய விடயமாகும். இவ்வாறு இல்லாது உருவாக்கப்பட இருக்கிற நிறுவனங்கள் கீழ்மட்டத்தில் இருக்கிற மக்கள் சமூகத்தை அபிவிருத்திப்போக்கில் இலகுவாக்கக் கூடியதாக இருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அமைப்பு இல்லாத போதும் மறைமுகமாக செயற்படுகிற ஒரு நிழல் நிர்வாகம்செயற்படுவது யாவரும் அறிந்த உண்மை. இதனுடைய நிறுவனங்கள் எந்தளவு தூரம் பிராந்திய அபிவிருத்திக்கு சாதகபாதகமாக அமைந்துள்ளது என்பதை ஆராய்வது பொருத்தமாகும்.

முழுமையான அபிவிருத்திக்கு இல்லாவிட்டாலும் போரினால் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து விடுபடுவதற்கான தொழிற்பாடுகளான மீளக்குடியமர்தல், மீளக்கட்டியெழுப்பல் என்ற பின் புலத்திலேயே இந்த நிறுவனங்களின் செயற்பாடு எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தி வருகிறது என்பதை மதிப்பீடு செய்வது, அதிகாரம் உள்ள ஒரு அரசியல் கட்டமைப்பில் நல்ல தரமான நிறுவனங்களை கட்டியெழுப்பவும் பிராந்தியத்தின் அபிவிருத்திக்கும் மிகவும் உறுதுணையாக இருக்கும் என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றாகும்.

**References:**

Daron Accmoglu, Simon Johnson and Janes

Robinson 2001 'Colonial Origines of Comparative Development and Emperical Investigation

American Economic Review Vol-91

http://www.imt.org/external/pubs/ft/weo/2003/01/index.htm



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக் கிழக்கு வாழ் மூளைசாலிகள் வெளியேற்றம் ஒரு கண்ணோட்டம்

# A Review of out flow of the brain power from North and East

*Miss. Thausorupy Kandasamy*
***Final year (2003), Economics (Special) Department of Economics Univerisy of Jaffna.***

இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் பதவியிலிருக்கும் பல்வேறு அரசாங்கங்களும் பல்வேறு நிலைகளிற் பின்பற்றிய பின்பற்றும் கொள்கைகள் இனவாதக் கண்கொண்டு நோக்குவதும் அவற்றினால் நாட்டின் சிறுபான்மையினர் குறிப்பாகத் தமிழ் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என எடுத்துக்காட்டுவதும் வழக்கமாகி விட்டது. தமிழ்மக்களின் மொழி, மதம், கலாச்சாரம் என்பன நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிக்கப்படும் வகையிலும், கல்விவசதிகளை அளிப்பதில் குறிப்பாக உயர்கல்வியைப் பொறுத்தவரை தமிழ்மக்களுக்கு துரோகம் இழைக்கும் வகையிலும் அரசாங்கங்கள் இயங்கிவந்துள்ளன

1956ம் ஆண்டு இலங்கை வரலாற்றில் ஒரு பிரிநிலைக் கோடாகும் பல காரணங்களினாற் கொள்ளப்படுகின்றது. சுதந்திரமடைந்த நாள் முதல் இதுவரை பதவியிலிருந்த ஐக்கியதேசியக்கட்சி தோற்கடிக்கப் பட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதானமாகக் கொண்ட கூட்டரசாங்கம் பதவி ஏற்கின்றது. இக்கட்சி இதுவரை இல்லாதபடி இன, மொழி, கலாச்சார உணர்வுகளைத் தனக்கு பக்கபுனருத்தாரணம் செய்வதை தனது முக்கிய நோக்கமாகக் கொண்டது. இவ்வகையில் 1986ம் ஆண்டு சாதாரண மக்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்பட முற்பட்ட காலப்பகுதியில் தோற்றம் பெற்றது என வர்ணிக்கப்பட்டது. ஆனால் மறுபுறமாக இதுவே தமிழ்மக்களின் உரிமைகள் சிறிதுசிறிதாகப் பறிக்கப் படும் செய்முறையை ஆரம்பித்து வைத்த இனவாத அரசியலின் பிறப்புக்காலம் எனவும் வர்ணிக்கப்பட முடியும்.

1970 களின் ஆரம்பமளவில் இனவாத அரசியல், பாரபட்சம் நிறைந்த கொள்கைகள் என்பவற்றால் தமிழ்த்தேசியவாதம் வெறுமனே ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்பியக்கம் என்ற நிலையிலிருந்து ஒரு முழு இனத்தையும் உள்ளடக்கிய பூரணமான தேசிய இயக்கம் என்ற உயர்தரத்தை அடைந்திருந்தது. ஏனைய காரணிகளுடன் இதுவரை அரசாங்கம் கைவைக்காத தமிழ் மக்களின் கல்வியிற் கைவைத்தமை இந்த வளர்ச்சிக்குப் பெரிதும் பொறுப்பாயிருந்தது. பல்கலைக்கழக அனுமதியிற் புகுத்தப்பட்ட தரப்படுத்தல் முறை ஒரு தனிக்காரணி என்று கூறக்கூடியதாகக் காணப்பட்டது.

அரசாங்கக் கொள்கைகளால் உள்நாட்டில் வேலைவாய்ப்புப் பெறமுடியாத பல தமிழர் வெளிநாடுகளில் குறிப்பாக மத்தியகிழக்கு நாடுகளுக்கு வேலைதேடிச் சென்றமையே மூளைசாலிகள் வெளியேற்றத்தின் தோற்றத்திற்கு காரணமெனலாம்.

மூளைசாலிகள் வெளியேற்றத்தை "Brain Drain" என ஆங்கிலத்தில் குறிப்பிடுகிறோம். உலகத்தை ஒரு முழுக்கூறாகக் கொள்வோமாயின் மூளைசாலிகள் வெளியேற்றம் என்பது ஒரு தவறான எண்ணக்கருவாகும். இந்நிலையில் ஓர் நாட்டின் ஆள்புல எல்லை மற்றும் அபிவிருத்தி அடைந்த நாடு, அடையும் நாடு என்பவற்றை அடிப்படையாக வைத்து இப்பிரச்சனை ஆராயப்படல் வேண்டும்.

வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் பெரும்பாலும் குடியேற்றவாதத்திற்கு உட்பட்டு பொருளாதார சமூக சுரண்டல்களிற்கு ஆளாகியுள்ளன. இந்நாடுகள் இன்றுகூட குறைந்த பொருளாதார அபிவிருத்தியையே கொண்டுள்ளன. பெருமளவில் மாற்றமடையாத மனோபாவங்களும் சாதிமுறைகளும் என்றும் இந்நாடுகளில் நிலவி வருகின்றன. இந்நாடுகளில் மொத்தசனத் தொகையில் பெரும்பாலும் ஒரு சதவீதத்திற்கும் குறைவானவர்களே உயர்கல்வி தகைமை பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்கியலாளர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், சட்ட வல்லுனர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் என்போர் இந்த ஒருசதவீதத்திற்குள் அடங்குகின்றனர். நாட்டின் அபிவிருத்திக்கு வேண்டிய சிறப்பார்ந்த வலு இவர்களிடம் காணப்படுகிறது. வடகிழக்கு மூளைசாலிகள் வெளியேற்றம் மேற்கூறியவற்றினடிப்படையிலேயே காணப்படுகிறது.

வடகிழக்கு மூளைசாலிகள் வெளியேற்றத்தின் பிரதான பண்புகளாக பின்வரும் அம்சங்கள் காணப்படுகின்றன. அவையாவன மூளைசாலிகள் அனைவரும் இலவசக்கல்வித்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டவர்கள், வெளியேறுவோரில் அனேகமானோர் உயர் வருமானம் பெறுகின்றனர். எதுவித முதலீடுகளும் இன்றி மேற்கு நாடுகள் தமக்குத் தேவையான ஆளணியினரை நிரப்பக் கூடிய இலாபகரமான வாய்ப்பைக் கொண்டிருக்கின்றன. நமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு குறிப்பாக ஆங்கிலக்கல்வி, போட்டியற்ற உயர்கல்வி, போராட்டச் சூழல், வறுமை, கீழ்க்கட்டுமான வசதிகளின் குறைவு, உயிராபத்துக்களை ஏற்படுத்தும் நிகழ்வுகளால் வெளியேறியோரும் உளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குலகநாடுகளின் தளம்பலற்ற அரசியல் என்பனவாகும்.

வடக்குகிழக்கு முறைசாலிகள் வெளியேற்றம் நேரடியானதும் மறைமுகமானதுமான பல்வேறு தாக்கங்களைக் கொண்டுள்ளன. எமது பிரதேசத்தில் காணப்படும் கடல், தரை, நீர், மனிதவளங்கள் என்பவற்றை உரிய முறையில் பயன்படுத்தி உற்பத்தியைப் பெறுவதற்கு போதுமான வல்லுனர்கள் அனைத்துத்துறைகளிலும் இல்லை. யாழ்ப்பாணத்தமிழன் வரிசையில் பொறியியலாளர்கள், கணக்காய்வாளர்கள், வைத்தியர்கள், விஞ்ஞான ஆசிரியர்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கால்நடை மருத்துவர்கள், விவசாயப் பட்டதாரிகள், முகாமைத்துவ பட்டதாரிகள், நிர்வாக அதிகாரிகள் என்போர் சிறப்பிடம் பெறுகின்றனர். இந்நிபுணர்களுக்கான பொதுவான பற்றாக்குறை இலங்கை முழுவதும் நிலவிவருகிறது.

மூளைசாலிகள் என்று நாம் குறிப்பிடும் போது அவர்கள் பெற்ற பட்டம் மட்டும் அல்ல. அவர்களுக்குரிய அனுபவமும் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகிறது. எமது பிரதேசத்தில் பணிபுரிந்து இந்தச் சூழலிற்குரிய அனுபவங்களைப் பெற்றவர்கள் வெளியேறுவதனால் பெருமளவு தாக்கத்தை அனுபவிக்க நேரிடுகின்றது இலங்கை இராணுவ - புலிகளுக்கிடையிலான. போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டதன் பின் பெருமளவு அபிவிருத்தித் திட்டங்கள் யாழ்குடா நாட்டில் ஆரம்பிக் கப்பட்டன. இத்திட்டங்களை திட்டமிடுவோரும், கையாள்பவரும் பெருமளவில் மேற்குலக பிரதிநிதிகளே.

கடந்தகால இனப்போராட்டம் காரணமாக உடல் உளரீதியாக தமிழ் மக்கள் பாதிப்படைந்துள்ளனர். வடகிழக்கு வாழ்மக்கள் தொடர்ச்சியான குண்டு வீச்சு அவலங்களை அனுபவித்து வந்தனர். மக்கள் மத்தியில் வறுமையே தாண்டவமாடுகிறது. போஷாக்கின்மையால் சிறுவர், கர்ப்பிணித்தாய்மார் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். இவற்றை ஈடுசெய்ய போதிய வைத்தியர்கள் இல்லை. யாழ்மண்ணில் கல்விகற்ற வைத்தியகலாநிதிகள் எங்கோ மறைந்து விடுகின்றனர். தென்னிலங்கையிலிருந்து மேலதிகமாக வரவழைக்கப் படுகின்றனர்.

கல்வி அபிவிருத்தியை நோக்கின் ஆசிரியர்கள் பற்றாக்குறை பெரும் பிரச்சனையாகவே காணப்படுகிறது. தமிழ்ப்பிர தேசங்களில் அண்மையகால கல்விப் பெறு பேறுகளில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் கல்வியில் யாழ்ப்பாணம் தான் முன்னணியில் நின்றதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் அந்நிலை இன்று எதிர்மாறாகக் காணப்படுகிறது. எந்த நாடு கணித அறிவிலே பின்தங்க நேரிடுகின்றதோ அந்தநாடு மூளைசாலிகள் வெளியேற்றத்தால் பாதிக்கப்பட்ட நாடாகின்றது. மூளைசாலிகள் வெளியேற்றத்தைக் காட்டுகின்ற ஒரு சுட்டியாக கணித அறிவின் வீழ்ச்சி கொள்ளப்படுகின்றது. ஆனால் துரதிஷ்டமாக இங்கிருந்து வெளியேறிய பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித ஆசிரியர்கள் மேலை நாடுகளில் வேறுபல தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். எமது பிரதேசத்தில் தாம்படித்த கல்விக்குரிய தொழில்வாய்ப் புக்கள் கிடைக்கவில்லையென்று கூறுபவவர் கள் வெளிநாட்டில் தாம் கற்ற கல்வியைப் பற்றி அக்கறை கொள்ளாதவர்களாகவே பெரும்பாலும் காணப்படுகின்றனர்.

மூளைசாலிகள் வெளியேற்றத் தால் அதிகமாக பாதிக்கப்பட்டது யாழ்பல் கலைக்கழக மருத்துவபீடம் பெரும்பாலான பாடத்திற்குரிய பேராசிரியர்கள் நிரப்பப்ப டாத நிலையிலேயே காணப்படுகின் றது. அண்மைக்காலங்களில் வேலை வாய்ப்பை விட திருமண வாய்ப்புக்காக அதிக மூளைசாலிகள் வெளியேறு வதைக்காணலாம் இதில் பெண்களின் பங்கு குறிப்பிடத்தக்க உயர்வாகக் காணப்படுகிறது. உள்ளூர் பிரதேசத்தில் அதிகசீதனம் நடைமுறையில் இருப்பத னால் வறியகுடும்பத்தைச் சேர்ந்த பெண்பிள்ளைகள் பெருமளவில் வெளி நாடுகளுக்குச்செல்வதைக்காணலாம்.

வடக்கு கிழக்கில் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின் வாகனத்தின் பாவனை அதிகரித்திருக்கின்றது. அதாவது மோட்டார் வாகன பாவனை அதிகரிப்பு, மோட்டார் வள்ளங்களுடைய பாவனை அதிகரிப்பு, மாஅரைத்தல், நெல்குற்றுதல் என்பவற்றிடையே இயந்திரப் பாவனை அதிகரிப்பு, மின்சார பாவனை அதிகரிப்பு என்பன எமது பிரதேசத்தில் நிகழ்ந்த தொழில் நுட்பமுன்னேற்றமாகும் தொடர்பாடலிலும் (Communication) தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்பட்டு வந்துள்ளது. இவற்றை வினைத்திறனுடனும் மேலும் முன்னேற்றத்துடனும் செயற்படுத்த பொறியியல் அறிவு வேண்டப்படுகிறது யுத்த நிலமையால் மின்விநியோகம் தடைப்பட்டாலும் மாற்று வழிகளைக் கண்டுபிடிக்கக் கூடிய மாற்றுவழி வேண்டப்படுகிறது. எமது பிரதேசத்தில் வெப்பவலுவும், காற்றுவலுவும் மிகையாக இருந்தாலும் அவற்றை விருத்தி செய்யக் கூடிய மூளைசாலிகள் பலம் குறைவா கவே காணப்படுகிறது.

விஞ்ஞானம் தொடர்பான அறிவின் பெரும்பகுதி மேற்கிலிருந்தே எமது நாடுகளுக்கு பரிமாற்றம் செய்யப்படுகின்றது. இங்கிருந்து வெளியேறிச் சென்றமூளை சாலிகள் இங்கு மீண்டும் வரும் போது அல்லது அங்கிருந்தவாறே எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கு ஆலோ சனை வழங்கும் பொழுது எமது சூழலி லுள்ள யதார்த்தங்களை அறிந்து கொள் ளாது மேற்கு நாடுகளின் தொழில் நுட்பவியலை எதிவித மாற்றம் இன்றி இங்கு பிரயோகிக்க முற்படுகின்றார்கள். இதன் காரணமாக பொருத்தமான தொழில்நுட்பவியலை ஏற்படுத்துவதில் பின்னடைவு காணப்படு கின்றது. இந்நிலையில் பார்க்கும் போது வெளியேறிய மூளைசாலிகள் எமது மண்ணுக்குப் பொருத்தமான விஞ்ஞான தொழில் நுட்ப அறிவுகளைத் தருவதற் காவது உதவுகின்றார்கள் என்றும் கூற இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த தசாப்தத்தில் வடகிழக்கில் வேலையின்மை அதிகரித்து வருகிறது. இதற்கு இளஞ்சமுதாயத்தினரிடம் காணப்படும் மனோபாவங்கள் முக்கிய பங்காற்றுகிறது. இந்த மண்ணோடு ஒட்டி உறவாடி மக்களோடு பழகி அவர்களின் இன்பதுன்பங்களை பகிர்ந்து மக்களுக்குச் சேவைசெய்யும் மனோ பாவத்தை இன்னமும் இக்கல்விமுறை வளர்த்தெடுக்கவில்லை. எப்போது வெளிநாடு செல்வது என்ற பேச்சும் எதிர்பார்ப்புமே இன்றைய இளைஞர்கள் யுவதிகளின் சிறப்பான எண்ணமாக இருக்கின்றது.

மூளைசாலிகளும், சாதாரண கல்வி அறிவுடையோரும் இந்நாட்டை விட்டு வெளியேறுவதற்கு சமூகமனோ பாவங்களும் பிரதான தூண்டுகோலாக இருக்கிறது. பிறநாடுகளின் பண்பாடும், பழக்கவழக்கங்களும் சிறந்தவை என்று எமது பண்பாடும், பழக்கவழக்கங்களும் அவற்றோடு ஒப்பிடும் போது பின்தங்கி யவை என்று கருதப்படும், மனோபாவம் புலம் பெயர்ந்து செல்வோரிடம் காணப்படுகிறது இங்கிருப்பது போன்று வலிமையான சமூகக்கட்டுப்பாடுகள் வெளிநாடுகளில் இல்லை என்று கருது கின்றனர். அங்கு போலிச் சுதந்திரம் கிடைக்கும் என்ற எண்ணம் காணப்ப டுகிறது.

இங்கிருந்து வெளியேறிச் செல்கின்ற புத்தி ஜீவிகள் இரண்டு நாடுகளுக்குச் சொந்தமானவன் என்ற இருமைத்தன்மை சார்ந்த உணர்வுகளுடன் வாழநேரிடு கின்றது வெளிப்படையாகப் பேசும் போது தனது சொந்த மண்ணை நேசித்தாலும் தனது அகவாழ்வில் நிஜமற்றதாகவே காணப்படுகிறது. இங்கிருந்து சென்றோரின் மொழியும், மொழி உச்சரிப்பும் நகைப்புக்கு இடமாகும் போது தமிழ்மொழியை வீட்டு மொழியாக வேனும்கையாளாது விடுகின்றனர். இதனால் தாயகமண்மீதானபற்று இல்லா தொழிந்தது.

வெளியேற வேண்டும் என்ற அவாவுடன் செயற்படும் மூளைசாலிகளைத் தடுத்து நிறுத்தினாலும் நடைமுறையில் சாத்தியப்படாத ஒன்றாகவே இருக்கும். ஏனைய நாடுகளோடு ஒப்பிடும் போது இலங்கை ஒரு சிறிய தீவு அதில் வடக்கு கிழக்கு பிரதேசம் ஏனைய பிரதேசங் களுடன் ஒப்பிடும் போது இயற்கையின் சீற்றம் குறைவாகவே காணப்படுகிறது எனினும் இயற்கை வளங்கள் நிறைந்த பிரதேசம் என்பது பெருமைக்குரிய விடயம். இதன் உச்சப்பயனைப் பெற மூளைசாலிகள் வெளியேற்றம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் இதற்கு வடக்கு கிழக்கு பிரதேசத்தில் பிறந்த ஒவ்வொரு பிரஜையும் சுயமாக சிந்திக்காத வரை செயற்படுத்த முடியாத அம்சம் என்பது திண்ணம்.

**Referenees:-**

1) இன்றைய உலகு - G. M. செபஸ்ரியாம்பிள்ளை

2) வித்தியோதயம் - இலங்கையின் இனப்பிரச்சினையில் அரசாங்கப் பொருளாதாரக் கொள்கைகள் Prof: V. நித்தியானந்தன்

"வடக்கு கிழக்கு வாழ் மூளைசாலிகள் வெளியேற்றமும் அதன் தாக்கமும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நன்றிக்குரியவர்கள்

- புதுப் பொலிவுடன் வெளிவரும் எமது அபிவிருத்திப் பொருளியலில் இதழ் - 4 எனும் சஞ்சிகைக்கு ஆசிச் செய்திகளை வழங்கிய துணைவேந்தர், கலைப்பீடாதிபதி அவர்களுக்கும், பாராட்டுச் செய்தியை வழங்கிய துறைத் தலைவர் அவர்களுக்கும் வாழ்த்து செய்தியை வழங்கிய பெரும் பொருளாளர் அவர்களுக்கும்.
- எமது அழைப்பினை ஏற்று அபிவிருத்திப் பொருளியல் இதழ் -4க்கு ஆக்கங்களை தந்துதவிய வவுனியா வளாக பீடாதிபதி திரு.நந்தகுமார், வவுனியா வளாக விரிவுரையாளர் திரு.A. தயாபரன், யாழ் பல்கலைக்கழக பொருளியல்துறைத் தலைவர், பேராசிரியர் V.P. சிவநாதன் மற்றும் எமது துறை சார்ந்த விரிவுரையாளர்கள் , மாணவர்களுக்கும்
- அபிவிருத்திப் பொருளியல் இதழ் -4 வெளியீட்டிற்கான நிதியினை அதிஷ்டலாபச் சீட்டிழுப்பின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு, பரிசில்களாக தந்துதவிய யாழ் வர்த்தகப் பெருமக்களுக்கும் நிதியினைத் திரட்ட எம்மோடு தோள் நின்று உழைத்த எமது துறை சார்ந்த, ஏனைய துறைசார்ந்த மாணவ நண்பர்களுக்கும்
- எமக்கு உரிய நேரத்தில் ஆலோசனைகளை வழங்கி வழி நடத்திய எமது பெருமதிப்பிற்குரிய மன்றக் காப்பாளரும், எமது துறைத் தலைவருமான பேராசிரியர் V.P. சிவநாதன் அவர்களுக்கும், பெரும் பொருளாளர் திருமதி.வி.ரவிசங்கர் அவர்களுக்கும் மற்றும் எமது துறை சார்ந்த விரிவுரையாளர்களுக்கும்.
- அபிவிருத்தி பொருளியல் இதழ்- 4க்குரிய ஆக்கங்களை முழு மனதுடன் அழகுற வடிவமைத்து அச்சிட்டு தந்துதவிய "கரிகணன் பிறிண்டேர்ஸ்" நிறுவனத்தினருக்கும்
- இவ்விதழின் அட்டையினை வடிவமைத்துத் தந்த "கரிகணன் பிறிண்டேர்ஸ்" அச்சிட்டுத் தந்த Pooja அச்சகத்தினருக்கும்
- இம்முயற்சியில் முன்னின்று செயற்பட்ட மற்ற அங்கத்தவர்களுக்கும், சக நண்பர்களுக்கும்
- மேலும் இம்முயற்சிக்காக பல்வேறு வழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும்

எமது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இளம்பொருளியலாளர்மன்றம்,
பொருளியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

இதழாசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாருங்கள்

**எமது மன்றத்தின் விசேட வெளியீடாக**




**வளங்களை இனம் காணுதலும் அபிவிருத்தி செய்தலும் சார்பான...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Harikanan Printers, 424 K.K.S Road, Jaffna. T.P:021-2222717
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org